# திட்டி வாசல் மர்மம்

## 1

'உலகில் எவ்வளவோ ரகசியங்கள்! அதில் தலையாய ரகசியம் உடம்புக்குள் உயிர் எங்கே இருக்கிறது, அது எப்படிப்பட்டதாக இருக்கிறது என்பதுதான்! இந்த உடம்பை ஞானிகள் வீடு என்கிறார்கள். இந்த உடம்பு வீடு என்றால் இந்த வீடு வாழப் பயன்படும் மண்மேலான கல்லாலும் மண்ணாலும் ஆன வீட்டை என்னென்று சொல்வது?

அதைப்பற்றிக் கூறும்போது ஒரு ஞானி கூறுகிறார்,- ஒவ்வொரு வீடுமே தனக்குள் ஒரு ரகசியத்தை வைத்துக்கொண்டிருக்கிறது, என்று...!

ஆச்சரியமாகவும் அதிர்ச்சியாகவும் இருக்கும் இதுதான் நிதர்சனமான உண்மை!'

*அரண்மனைப்பாளையம்!*

*பெயருக்கு ஏற்ப ஊரும் கம்பீரமாகத்தான் இருந்தது. ஊர் முகப்பிலேயே பெரிய ஆலமரம். ஆலமரத்தை ஒட்டி நீண்ட சாலை. சாலைமேல் வயலில் அறுவடை செய்யப்பட்ட கதிர்கள் வண்டி வண்டியாக வெளி யேறிக் கொண்டிருந்தன. பாளையச்சாலை மேல் ஒரு*

பத்து கிலோமீட்டர் தூரம் போனால் தஞ்சாவூர் கும்ப கோணம் சாலை வந்துவிடும். அங்கிருந்து அதிகபட்சம் ஒரு மணிநேர பயணம் செய்தால் தஞ்சாவூர் வந்துவிடும். அந்த சாலை மேல்தான் கணேஷ் போன்ஸ்லேயின் மாருதி கார் சீறிக்கொண்டிருந்தது. அவனுக்கு அருகி லேயே சிவாஜிராவ்!

இந்த சிவாஜிராவும் அந்த ரஜினிகாந்த் போலதான். சுருட்டை இல்லாத சரிந்துவிழும் தலைமுடி, கூர்மை யான நாசி, சின்ன கண்கள்.

உதட்டில் ஒரு கோல்ட்ஃபிளாக் சிகரெட்!

சிவாஜிராவ் விடும் புகை காருக்குப் பக்கவாட்டில் கரைவது தெரியாமல் கரைந்துகொண்டிருக்க சிவாஜி ராவ் முகத்தில் ஒரு அசாத்திய டென்ஷன்.

"கணேஷ் வேகமா போ... பாட்டி போய் சேர்ந்துடப் போறா..." என்று பத்து நிமிஷத்துக்கொரு முறை முணுமுணுத்துக் கொண்டேதான் வந்தான் சிவாஜி.

அந்த சாலை படுமோசம்!

எதிரே எதாவது வாகனம் வந்தால் பக்கவாட்டில் மண்தளத்தில் இறங்கி, திரும்பவும் தார்ச்சாலையைப் பிடிக்க மிகவே சிரமமாக இருந்தது.

பிச்சைக்காரன் சட்டைபோல சாலையில் அவ்வளவு குண்டு குழிகள்.

எப்படியோ அரண்மனைப்பாளையம் மண்சாலைப் பிரிவு ஒரு பெயர்ப் பலகையோடு கண்ணில் பட்டு, காரும் அதில் திரும்பியது.

திரும்பிய வேகத்தில் உதறியது.

சாலையின் இரு பக்கங்களிலும் அறுவடையாகி விட்ட வயல் கதிர்களை சாலை ஓரமாகவே கட்டுக் கட்டாக அடுக்கியிருந்தார்கள்.

"சிவாஜி.. சிகரெட்டை அணைக்காம தூக்கிப் போட்டுடாதே. நெற்கதிர் பத்திக்கப் போவுது..." என்றான் போன்ஸ்லே.

"தெரியும்டா..."

"என்னத்த தெரியும். ஆறுமாசம் முந்தி வந்தப்போ நடந்ததை நான் இன்னும் மறக்கல."

போன்ஸ்லே கொஞ்சம்போல பழைய நினைப்புக்குள் மூழ்கவும், சிவாஜிக்குள்ளும் அந்த நாள் ஞாபகங்கள்.

சிவாஜிராவ் நடுராத்திரியிலும் தூக்கத்திலும் கண் விழித்து தம் அடிக்கும் டைப். சோறு தண்ணி இல்லாமல்கூட இருந்துவிடுவான்.

தம் இல்லாமல் மட்டும் அவனால் இருக்க முடியாது.

அப்படித்தான் சிகரெட் பிடித்தபடி காரில் வரும் போது சாலை ஓரம் வயற்காடுகள் இருப்பதை உணராமல் துண்டு சிகரெட்டைத் தூக்கிப் போட, அது பற்றிக்கொண்டதில் கிட்டத்தட்ட பத்து ஏக்கரில் விளைந்த அவ்வளவு நெல்மணிகளும் சாம்பலாகிப் போனது! களத்துக்காரன் காரில் போனவர்கள் போட்ட சிகரெட் துண்டுதான் காரணம் என்று ஊர்ப் பெரியவர் மிண்டாஜியிடம் புகார் கொடுத்துவிட, மிண்டாஜியும் காரில் வந்தது யார் என்று யூகித்து சிவாஜிராவையும்,

போன்ஸ்லேஸ்யயும் தேடி வந்தபோது, சிவாஜி மிண்டாஜி எதிரிலேயே தம் அடித்துக் கொண்டிருந்தது. அவருக்கும் வசதியாகப் போய்விட்டது.

அதன்பின், அவர் சொல்லித்தான் ஒரு சிகரெட் துண்டு நெற்கதிர்களைச் சாம்பலாக்கின வரலாறு சிவாஜிக்கும் தெரிய வந்தது.

"மன்னிக்கணும் மிண்டாஜி... எவ்வளவு நஷ்டமோ அவ்வளவு நஷ்டத்தையும் நான் கொடுத்துடறேன்" என்று அவன் பெருந்தன்மையாக முன்வந்தபோது மிண்டாஜிக்கு அவன்மேல் மதிப்புதான் ஏற்பட்டது.

"சிவாஜி... நல்ல பையனா இருக்கே. தப்புன்னு தெரிஞ்ச உடனேயே அதை ஒத்துக்கற தைரியம் இருக்கு. இந்த விஷயத்துல உன் பரம்பரை குணம் உன்னை விட்டுப் போகலை.

உன் தாத்தாவுக்குத் தாத்தாவுக்குத் தாத்தா இதே தஞ்சாவூர்ல அன்றைய மன்னர் சாந்தாஜிகிட்ட கஜானா கணக்கராக இருந்தவர். வரவு செலவு விஷயத்துல அவ்வளவு சுத்தம். அவரைப் பத்தி இப்பவும் சரித்திரத்தைப் புரட்டினா எவ்வளவோ செய்திகள். உன் முன்னோர்கள் அவ்வளவுபேருமே கூட நேர்மை யானவங்கதான். அவ்வளவு ஏன்? மராட்டிய வீரன் வீரசிவாஜியால பாராட்டப்பட்ட குடும்பம் உன் குடும்பம். அதனாலதான் உன் குடும்பத்துல யாருக் காவது ஒருத்தருக்கு சிவாஜி பேர் தொடர்ந்து வைக்கப் பட்டு வருது. நீ உன் பேரைக் காப்பாத்திட்டே. உன் பரம்பரை பேரையும் காப்பாத்திட்டே..." என்று அன்று மிண்டாஜி சிவாஜிராவைப் பாராட்டித் தள்ளிவிட்டார்.

இப்பொழுது சிகரெட் பிடித்தபடியே அரண்மனைப் பாளையத்துக்குள் நுழையும்போது ஞாபகமாக அவ்வளவும் நினைவு வந்தது.

சிவாஜிராவும் அதுவரை பிடித்த சிகரெட் துண்டை காரின் டோர் பாடியில் நசுக்கி அணைத்தான். அதன் பிறகு அவன் சற்றுமுன் குறிப்பிட்ட தன்னுடைய பாட்டியை நினைத்து நகம் கடிக்கத் தொடங்கினான்.

அவன் பாட்டி இழுத்துக்கொண்டு கிடப்பதாக முதலில் தகவல் போனது போன்ஸ்லேவுக்குத்தான்.

மிண்டாஜிதான் போன் செய்து சொல்லியிருந்தார். போன்ஸ்லே நம்பர்தான் அவரிடம் இருந்தது. சிவாஜி ராவ் ஒரு மெடிக்கல் ரெப்ரசென்டேடிவ். எப்பொழுதும் டூரில் இருப்பவன். ஒரு ஆரம்பகால செல்போனை வைத்துக்கொண்டிருக்கிறான். அது வேலை செய்யும் நேரம் மிகமிகக் குறைவு. அதன் திரையில் எப்பொழுதும் நோ நெட் ஒர்க் கவரேஜ் என்கிற எழுத்துகள்தான் எப்பொழுதும் தெரியும். அந்த அளவு பஸ்ஸிலும் ரயிலிலும் சுற்றிக்கொண்டே இருப்பவன்.

போன்ஸ்லே அப்படி இல்லை. ஒரு ஆங்கிலப் பத்திரிகை ஒன்றின் சர்க்குலேஷன் டிபார்ட்மெண்ட்டில் மேனேஜராக இருக்கிறான். எனவே, மிண்டாஜியால் அவனைப் பிடித்து விஷயத்தைச் சொல்ல முடிந்தது. நல்லவேளை அன்று பார்த்து போன்ஸ்லேவுக்கு சிவாஜிராவும் போன் செய்தான். எனவே, அவனுக்கும் செய்தி தர முடிந்தது.

அதன்பின் இருவரும் புறப்பட்டுவிட இதோ பயணம்-

அதோ ஊர் முகப்பு ஆலமரம்!

அந்த ஆலமரத்துக்கு ஒரு வரலாறு உண்டு.

அதன்கீழ் ஆற்காட்டு நவாப்பில் இருந்து, டெல்லி ஔரங்கசீப்பின் பிரதிநிதிகள் வரை தங்கியுள்ளனர். வீரசிவாஜி அந்த மரத்துக்குக்கீழ் அமர்ந்து நெடுநேரம் தியானம் புரிந்ததாகக்கூட வரலாறு உண்டு. அது அப்படி ஒரு பிரசித்தி பெற்ற மரம்!

அந்த மரத்தைக் கடக்கும் போதெல்லாம் சிவாஜி ராவ் அதைக் கூர்மையாகப் பார்ப்பான். அவனது இளமைப் பிராயத்தில் பள்ளிக்கூட விடுமுறைக்கு அவன் அரண்மனைப்பாளையம் வரும்போதெல்லாம் அந்த மரத்து விழுதுகள்தான் அவனுக்கான ஊஞ்சல். அங்கே வந்துவிட்டாலே ஒரு மிடுக்கு வந்துவிடும் அவனுக்குள்.

அவனது பாட்டிகூட சொல்வாள் - அந்த ஆலமரம் தனது முன்னோர்கள் வைத்து பராமரித்த மரம் என்று. எனவே, அதை அவனாலே ஒரு மரமாகவே பார்க்க முடியவில்லை. ஒவ்வொரு கிளையையும் சிவாஜிராவ் தன் குடும்ப உறுப்பினர்களில் ஒருவராகத்தான் பார்ப்பான். ஒரு கிளை சாந்தாராம் தாத்தா. ஒரு கிளை சீதாராம் தாத்தா, அந்தக் கிளைக்குள் உருவெடுத்துப் பிரியும் வலப்பக்கக் கிளை விட்டல் தாத்தா, இடப்பக்கக் கிளை சுபாஷ் தாத்தா!

எல்லோருமே தஞ்சாவூர் அரசர்களிடம் பணி புரிந்தவர்கள். தஞ்சாவூர் சோழ சாம்ராஜ்யத்தின் தலைநகராய் இருந்ததெல்லாம் ஒரு காலம். அதன்பின் காலமாற்றம் அந்த மண்ணுக்குப் பலரை அரசர்களாக்கியது. அதில் மராத்தியர்களுக்கு பெரும் பங்கு உண்டு.

அபார தேசபக்தி, அளவுக்கு அதிகமான கடவுள் பக்தி, ரத்தத்தில் திவலைக்கு திவலை வீர முழக்கம். இவன்தான் வீர மராத்தியன். சிவாஜிராவும் அவர்கள் வழிவந்தவன்தான். நினைக்க நினைக்க பெருமைப் பட்டுக் கொள்ளும்படியான முன்னோர் பெருமைக்கு சிவாஜியிடம் பஞ்சமேயில்லை. ஆனால், இன்றுதான்...?

கார் ஆலமரத்தைக் கடந்து ஊருக்குள் நுழைந்துவிட்டிருந்தது. அரண்மனைப்பாளையம் ஒன்றும் பெரிய ஊர் இல்லை. தமிழ்நாட்டின் லட்சக்கணக்கான கிராமங்களில் ஒன்று. ஆனால் அரண்மனைப்பாளையத்துக்கு சில சரித்திரப் பெருமைகள் சொந்தம். அதில் அந்த ஊரில் உள்ள அரண்மனை வீடும் அடக்கம். அந்த அரண்மனை வீடு ஒரு காலத்தில் தஞ்சை அரசர்கள் யாருக்கும் தெரியாமல் வந்து தங்கிச் செல்வதற்காகக் கட்டப்பட்டது என்று கூறுவார்கள்.

ஒரு உயர்நிலைப் பள்ளியையும் அதன் விளையாட்டு மைதானத்தையும் ஒருசேர கற்பனை செய்துகொள்ளுங்கள். அவ்வளவு பெரியது அந்த அரண்மனை. ஊருக்கு நடுவில் மிகச் சரியாக அது கட்டப்பட்டிருந்ததால் ஊருக்குள் எந்த தெருவில் போனாலும் இறுதியில் அது அரண்மனை மதில்சுவரிடம் போய் முட்டும்.

தெருக்களுக்கும் அரண்மனையைத் தொட்டுத்தான் பெயர் - கிழக்கு வீதி. இது நேரே அரண்மனை பிரதான வாசலுக்குக் கொண்டுபோய் விடும். மேற்கு வீதி கச்சிதமான அதன் பின் பாகம். வடக்கு வீதி அரண்மனைக் குளத்திடம் கொண்டு போய்விடும். தெற்கு வீதி அரண்மனைப் பால்கனியிடம் கொண்டு போய்விடும். இதுபோக அரண்மனை அக்னி பாகத்தில் சமையல்

கட்டை ஒட்டிப் போகும் தெருவுக்கு புரிசப்போக்கித் தெரு என்று பெயர். அதேபோல வாயு மூலையில் உள்ள தெருவுக்கு காத்தாடி தெரு.

இப்படி அரண்மனையை ஒட்டியே ஊரும் தெருக்களும் அமைந்துவிட்டது இன்னொரு அதிசயம்! ஊரில் ஒரு வீடுகூட அரண்மனை வீட்டை விடப் பெரியது கிடையாது. மீறி யாராவது கட்டினால் அந்த நாளில் அது பெரிய குற்றம். இந்த நாளில் யாரும் அப்படி ஒரு முயற்சியை செய்த மாதிரியே தெரியவில்லை. எல்லோருமே விவசாயக் குடிகள். அரண்மனை வீட்டில் மட்டும்தான் சிவாஜிராவின் குடும்பத்தவர்கள் வசித்து வந்தனர்.

இன்று எல்லாமே பழம்பெருமை!

அரண்மனை என்று ஊரே கூறும் மாளிகை வீட்டை யாராவது பார்த்தால் கதறிவிடுவார்கள்!

அந்த அளவுக்குக் காரை உதிர்ந்து பங்கரையாகக் காட்சி தருகிற அது, இன்று வவ்வால்களுக்குப் பெருமளவு சொந்தமாகிவிட்டது. அரண்மனை வீட்டைச் சுற்றி நாற்பதடி அகலத்தில் நாலு பக்கமுமே ஒரே பிரதான பாதை இருந்தது. இன்று அந்தப் பாதை முழுக்க கன்னாபின்னாவென்று மரங்கள். அதில் பாதிக்கு மேல் வில்வமாகப் போய்விட்டதால் வெட்டுவது மகாதோஷம் என்று வெட்டவே தோன்றவில்லை.

கிழக்கு பாகம் முழுவதையும் வாதநாராயண மரக் கூட்டம் குடைபோல கவிழ்ந்து வேறு மூடிவிட்டது. அந்த மரத்தில் ஏராளமான துவாரங்கள் இருப்பதால்

அது அணில்கள் குஞ்சு பொறிக்கும் இடமாக மாறிப் போயிருந்தது.

இப்படி ஒரு வீட்டுக்கு முன்னால்தான் போன்ஸ்லேயின் கார் நின்றது!

ஊருக்குள் கார் நுழையவுமே மிண்டாஜிக்குத் தகவல் போய்விட்டது.

அந்த ஊரில் மராத்தியர்களின் மிச்சமாக இருப்பவர் அவரும் அவரது குடும்பமும்தான். ஒரு கைத்தடி இல்லாமல் மிண்டாஜி எங்கும் செல்லமாட்டார். அதன் முகப்பில் ஒரு கூர்மையான கத்தி உள்ளடக்கமாக இருப்பது பெரும்பாலோருக்குத் தெரியாது.

அப்படி ஒரு கைத்தடியுடன், கார் வந்து நிற்கவும் அவரும் வந்து சேர்ந்தார். காரைவிட்டு வேகமாக இறங்கினான் சிவாஜிராவ். மிண்டாஜி முகத்தில் ஒருவித இறுக்கம். பார்வையாலேயே உள்ளே போகலாமா என்று கேட்டார். அவனும் சம்மதித்தான். அக்கம்பக்கம் உள்ளவர்களும் வாசலுக்கு வந்துவிட்டனர்.

அவர்களில் குத்தகைக்கார ஆறுமுகமும், காவல் காரன் மாணிக்கமும் பிரதானமாகத் தெரிந்தனர். அரண் மனை முன் கதவு நல்ல பெரிய தேக்குக் கதவு. இரட்டைக் கதவுகள். ஒரு கதவு சாத்தி பின்புறம் தாழ்ப்பாள் போடப்பட்டிருந்தது. மறு கதவைத்தான் திறந்து மூடலாம். அந்தக் கதவையும் தள்ளித் திறக்க நிச்சயம் நாலு பேராவது வேண்டும். பத்து மீட்டர் உயரம் ஒண்ணரை மீட்டர் அகலம் ஒரு அடி பருமன் என்கிற கணக்கில் இருந்தது அந்தக் கதவு.

பர்மா தேக்கு!

பர்மாவில் இருந்து கப்பல் ஒன்றில் தூத்துக்குடி வரை கொண்டுவந்து, பின் அங்கேயே வெட்டி துண்டு பாகங்களாக்கி, அவைகளை ஒரு கப்பலில் ஏற்றி தொண்டி, தேவிப்பட்டணம் என்று கடல் மார்க்க மாகவே கொண்டு சென்று சித்தன்னவாசலை ஒட்டி யுள்ள கடற்கரையில் அதை இறக்கி, பின் அங்கேயிருந்து மாட்டுவண்டியில் ஏற்றி வரப்பட்ட கதவு அது.

அதை அடிக்கடித் திறந்து மூடுவது சிரமமாக இருந்த காரணத்தால் அதில் சின்னதாக ஒரு திட்டிவாசல் கதவை அன்றைய ஆசாரி செய்துவிட்டார். திட்டிவாசல் கதவு, இரண்டடி அகலம் நாலடி உயரம்தான் இருக்கும்.

அந்தக் கதவுமட்டும் திறந்திருந்தது.

அதன் வழியாக முதலில் போன்ஸ்லே உள்ளே நுழைந்தான். பின்னர் சிவாஜிராவ். அதற்குப் பிறகுதான் மிண்டாஜி. அவர்களோடு சரி...

மற்றவர்கள் உள்ளே செல்ல விரும்பியதாகத் தெரிய வில்லை. அந்தக் கதவின் அருகில் லேசாக வவ்வால் களின் மலவாடை வீசியபடி இருந்தது.

தினமும் கதவுக்கே சாம்பிராணி தூபம் போட்ட தெல்லாம் ஒரு காலம்.

உள்ளே கும்மென்று இருட்டு! அந்த நாளைய குப்பிவடிவ ஸ்விட்சுகளை மிண்டாஜி போடப் போட அங்கங்கே குட்டி குடை முகத்துக்குக் கீழ் வட்டமான கோலி பல்புகளிலிருந்து மஞ்சளாக வெளிச்சம் கசிந்தன. தரை முழுக்க நீலவண்ண கடப்பை பாவப்பட்டிருந்தது. நிலைக்கால் முகப்பருகே செருப்பை அவிழ்த்துவிடவும்

அந்தக் கடப்பைக் கற்கள் பனிக்கட்டிகளைப் போல காலைக் கவ்விப் பிடித்தன.

இறுக்கமான மௌனத்தோடு உள்ளே நடப்பது ஒரு மாதிரிகூட இருந்தது.

மிண்டாஜியே பேச ஆரம்பித்தார்.

“சிவாஜி... உன் பாட்டி நிச்சயம் இனி பிழைக்க மாட்டா! உயிரோடு இருந்தவரை விடாப்பிடியா அந்த அறையை விட்டே வர மறுத்த வீம்பு பிடிச்சவ உன் பாட்டி. அது மட்டுமில்ல அவ பேசியே ரொம்ப நாளாச்சுங்கறது உனக்கும் நல்லா தெரியும்.

உன் பாட்டி ஒரு ராணி மாதிரி இந்த வீட்டுல வாழ்ந்த வரை ஒரு குறையுமில்லை. ஆனா, ஒரு முப்பது வருஷத்துல உன் குடும்பத்தைச் சேர்ந்த பலரை அவ இழந்துட்டா...

இந்த வீடு பத்தி உனக்கே தெரியும். உன் பாட்டிக்கு இதை விற்க உரிமை கிடையாது. சாகும்வரை அவ அனுபவிக்கலாம். அவ காலத்துக்குப் பிறகு, இதை விக்கற உரிமை இந்தக் குடும்பத்துல மிஞ்சி இருக்கற ஒரே ஆண் வாரிசான உனக்குத்தான் உண்டு.

நேத்துதான் உன் பாட்டியைப் பார்க்க வந்தப்போ கொஞ்சம் பேச்சுக் கொடுத்துப் பார்த்தேன்.

‘ஜானகிபாய்- உன் நாள் நெருங்கிடிச்சு. நீ இன்னிக்கு வரை உன் மகள்கிட்டையும் அவ பிள்ளைகள் கிட்டை யும் பேச மறுத்துட்டே. அவங்க எவ்வளவுதான் நெருங்கி வந்தாலும் நீ பேசலை. உன் மகளுக்கு நாலு பெண்கள், ஒரு பையன். அந்த நாலு பெண்களுக்கும் இனிமேல்

தான் கல்யாணம் பண்ணனும். உன் நகை நட்டை யெல்லாம் எங்கே வெச்சிருக்கே சொல்லுன்னு சொல்லி எவ்வளவோ பேசிப் பார்த்தேன். உன் பாட்டி வாயே திறக்கலை. நீயாவது கேட்டுப் பார். நிச்சயம் இன்னிக்கு உன்கிட்ட பாட்டி அந்த நகைகள் இருக்கற இடத்தைச் சொல்லுவா. ஒருவேளை சொல்லாம செத்துப்போனா அதைவிட ஒரு துரதிர்ஷ்டம் உங்களுக்கு எதுவும் இல்லை."

மிண்டாஜி அறை முகப்பில் நின்று சிவாஜிராவுக்கு எடுத்துக் கொடுத்தார்.

"இல்ல மாமா... (அவன் மிண்டாஜியை வயது காரணமாக அப்படித்தான் கூப்பிடுவான்.) பாட்டி தானா சொன்னாதான் நான் கேட்டுப்பேன். நானா கேக்க விரும்பலை. பாட்டி வரைல என் அம்மா காதல் கல்யாணம் பண்ணிகிட்டவங்க. என் அப்பா சேதுபதி, அந்தக் காலத்துல என் அம்மாவோட வம்சத்துக்கு எதிரி வம்சத்துல இருந்தவர். அதனால பாட்டி இப்பவும் அதேமாதிரி நினைக்கறதைக் கடைசிவரை மாத்த முடியல. காலம் எவ்வளவு மாறினாலும் சிலர் அந்த மாற்றங்களை அவ்வளவு சுலபமா ஒத்துக்கறவங்க இல்லை. அதுல என் பாட்டியும் ஒருத்தி. அப்படிப்பட்ட என் பாட்டி, அவ விருப்பப்படியே எதையும் செய் யட்டும்" என்றபடியே அறைக்கதவைத் திறந்தான். உள்ளே சரியான இருட்டு!

மேற்கூரையில் ஒரு இடத்தில் ஒரு அடிக்கு ஒருஅடி கண்ணாடி பதிக்கப்பட்ட தளம். அதன் வழியாக உச்சி வேளையில் உள்ளே சூரிய வெளிச்சம் நன்றாகவே

விழும். ஆனால், வானம் மோடம் போட்டுக் கொண்டிருந்ததால் வெளிச்சத்திற்கு இடமே இல்லை.

அறைக்குள் நுழைந்த மாத்திரம் விளக்கிற்கான ஸ்விட்ச் எங்கே இருக்கிறது என்று சிவாஜிராவுக்குக் கூடத் தெரியவில்லை. மிண்டாஜி ஒரு நிதானத்தோடு சுவர் மையத்தில் கையால் தடவி ஸ்விட்சைப் போட்டார். ஒரு நாற்பது வாட்ஸ் பல்ப் வெளிச்சம் சிலீரென்று பரவியது. அதில் சிவாஜிராவின் பாட்டியான ஜானகி பாய் என்னும் ஜானாபாய் அந்த அறையின் ஒரு மூலையில் ஒரு மரக்கட்டிலின் மேல் ஒரு வாழை இலைக்கட்டு போல கிடப்பதும் தெரிந்தது.

அருகே சென்று பார்த்தபோது அதிர்ச்சி காத்திருந்தது.

ஜானாபாய் உயிர் எப்பொழுதோ போய்விட்டிருந்தது!

## 2

"ஒவ்வொருவருமே வீடுகளை மனிதர்கள் தான் தங்கள் தேவைக்காகக் கட்டிக்கொள்வதாக நினைத்துக்கொண்டிருக்கிறோம். ஆனால், உண்மை அதுவல்ல! வீடுதான் ஒரு மனிதனைக் கொண்டு தன்னைக் கட்டிக்கொள்கிறது. அப்படி அது உருவாகும்போது, தன்னுள் தனது எஜமானர் களாய் வாழப்போகிறவர்கள் எத்தனை பேர், தன்னுள் எத்தனை புதிய உயிர்கள் ஜனிக்கப் போகின்றன, தன்னுள் எத்தனை பழைய உயிர்கள் மறிக்கப்போகின்றன என்றெல்லாம் தீர்மானித்து, அதற்கேற்பவே அது வடிவம் கொள்கிறது.

ஒரு விஷயம் எழுத்து வடிவத்தில்தான் இருக்க வேண்டும் என்பதில்லை. அது கட்டட வடிவமாகக்கூட இருக்கலாம். வீடு என்பது கல்தானே, மண்தானே, உயிரற்ற ஜடம்தானே என்று கருதுபவன் வடிகட்டிய முட்டாள் ஆவான். மிகவும் பாவப்பட்ட பிறவியும் அவனாகவே இருப்பான். ஏன் என்றால் ஒருவனை முட்டாளாக ஆக்குவதும், புத்தி ஜீவியாக வாழ வைப்பதும்கூட வீடுதான். வாஸ்து சாஸ்திரத்தில் மூழ்கி எழுந்த பண்டிதன், வீடுகளை நிழல்கூடமாகப் பார்ப்ப தில்லை. படிக்கவேண்டிய ஒரு புத்தகமாகவே நினைப்பான். அப்படி அவர்கள் படிக்க வரும் போது, ஒவ்வொரு வீடும் சம்மந்தப்பட்ட அந்தப் பண்டிதனுடன் பேசும் என்றால் நம்ப முடிகிறதா?"

கண்கள் திறந்திருக்க, வாய் பிளந்த நிலையில் ஜானாபாய் உயிர் பிரிந்திருந்தது. ரொய்ய்ங் என்று ஈக்களின் கூட்டம் வேறு.

பார்த்த மாத்திரத்தில் பிரேதக்களை தெரியவும் சிவாஜி, “மாமா” என்றபடியே பின்னால் வந்தான். மிண்டாஜியும் அருகே சென்று துவண்ட கையைத் தொட்டு, சிலுசிலுப்பை உணர்ந்தவராக நிமிர்ந்தார். போன்ஸ்லே மார்பு மேல் மடங்கிக் கிடந்த போர்வையை இழுத்து தலைவரை மூடிவிட்டான்.

அவர்கள் மூன்றுபேர் முகமும் பெரிய அளவில் மாறிப் போய்விட்டது. நெடுநேரம் அவர்கள் எதுவும் பேசிக்கொள்ளவில்லை. எதுவும் பேசாமலே வெளியே வந்தார்கள். திட்டிவாசல் கதவைத் திறந்துகொண்டு அந்த அரண்மனை வீட்டு வெளிப்பக்கம் வந்தவர் களைக் காத்திருந்த ஊர்க்காரர்களும் கவனித்தனர். குத்தகைக்கார ஆறுமுகமும் மூவரின் முகத்தை வைத்தே யூகித்துவிட்டான்.

“என்ன சாமி ராணியம்மா போய்ட்டாங்களாக்கும்?”

ஆமோதித்தார் மிண்டாஜி.

“உங்க முன்னாலதான் உசுர் போச்சா? இல்லை...”

“தூக்கத்திலேயே போய்ட்டா...”

“அடடா... நேத்து நான் பார்த்தப்ப, என் பேரன் வருவானான்னு கேட்டிச்சே...” ஆறுமுகம் அப்படிச் சொன்னதுதான் தாமதம் விருட்டென்று திரும்பிப் பார்த்தான் சிவாஜிராவ்.

“என்னய்யா சொல்றே... நீ கிழவியைப் பார்த்தியா?”

மிண்டாஜியும் பாய்ந்து வந்தார்.

"ஆமாம் ராவய்யரே... உங்களுக்குத் தெரியும். இந்த அரண்மனை வீட்டுத் தோட்டங்கள் அவ்வளவுக்கும் பரம்பரை பரம்பரையா நாங்கதான் குத்தகை. ராணி உயிரோட இருக்கறவரைதான் அதுவும். ராணி போய்ட்டா அப்புறம் தம்பி முடிவுதானே எல்லாமே...?"

ஆறுமுகம், சிவாஜிராவுக்கே தெரியுமோ தெரியாதோ என்று சில உண்மைகளை வெளிப்படுத்தினான்.

"சரி ராணிக்கிழவி உன்கிட்ட என்ன பேசினாங்க?"

"என்கிட்ட திரும்பத் திரும்ப பேரன் வருவானா, பேரன் வருவானான்னே கேட்டுகிட்டிருந்தாங்க. நானும் ராவய்யர்கிட்ட சொல்றேன். கட்டாயம் வருவாருன்னேன்..."

"உன்கிட்ட வேற எதுவும் சொல்லலையா?"

"இல்ல அய்யரே- ஆனா, எனக்கென்னவோ ராணிம்மா நிறைய விஷயங்கள சொல்லத் துடிச்சமாதிரி தெரிஞ்சிச்சு-"

"அடடா... அடடா... சிவாஜி! உன் பாட்டிக்குக் கடைசி நேரத்துல மனமாற்றம் ஏற்பட்டிருக்கு. அதான் உன்னைப் பாக்க துடிச்சிருக்கா. ஆனா, உனக்குதான் அதிர்ஷ்டமில்லாம போயிடிச்சு..."

மிண்டாஜி பெரிய அளவில் வருத்தத்தைக் காட்டி நல்ல தடிமனுக்கு பெருமூச்சும் விட்டார்.

"விடுங்க மாமா... நீங்கதானே சொல்வீங்க தலை எழுத்துப்படிதான் எதுவும் நடக்கும்னு. அப்படியே இனியும் எல்லாம் நடக்கட்டும். நாம மற்ற காரியங்கள பார்ப்போம்."

"முதல்ல பிணத்தைக் கொண்டுவந்து அரண்மனை வீட்டு பின்புறமுள்ள கல் மண்டபத்துல போடணும். அங்க இருந்துதான் காரியங்களை ஆரம்பிக்கணும். அதுக்கு முந்தி இது இந்த ஊர் ராணியோட சாவு. ஆகையால ஊருக்கும் சொல்லணும்."

மிண்டாஜி சொல்லிக்கொண்டே போனார்.

"என்ன செய்யணுமோ செய்யுங்க. நான் என் மேனேஜருக்கு சொல்லி லீவு கேட்கணும். அந்த ஆள் பாட்டி செத்ததுக்கு எல்லாம் லீவான்னு கேட்பான். அவனைச் சமாளிக்கறதே என்வரைல பெரும்பாடு..."

சிவாஜி அலுத்துக்கொண்டான். அந்த நேர அவஸ்தைக்கு ஒரு சிகரெட் பிடித்தால் நன்றாக இருக்கும் என்றது அவனது உள்ளுணர்வு. ஆனால், எதிரில் மரியாதைக்குரிய மாமா மிண்டாஜி ஊர்ப் பெரியவர். பார்வையைத் திருப்பி போன்ஸ்லே மேல் விட்டான்.

போன்ஸ்லே, "நாங்க ரெண்டு பேரும் தபால் ஆபீசுக்குப் போய், யார் யாருக்கு தந்தி கொடுக்கணுமோ கொடுத்துட்டு, ஒரு அரைமணி நேரத்துல வந்துட்றோம். எப்படியும் சிவாஜி அம்மா அப்பா சிஸ்டர்ஸ்லாம் கார்ல புறப்பட்டு வந்தாகூட எட்டு மணி நேரம் ஆகும். காரியங்களை நாளைக்குக் காலைலதான் வெச்சுக்கும்படி இருக்கும்."

போன்ஸ்லே கச்சிதமாய் பேசினான். மிண்டாஜி வேகமாய் தலையை அசைத்து மறுத்தார்.

"சிவாஜி உன் பாட்டி உயிர் ஒண்ணும் இப்ப போகலை. அது போய் பல மணி நேரமாயாச்சு. என்வரைல உன் அப்பா அம்மா வந்தாலும் வராவிட்டாலும் அதிகபட்சம்

ஆறுமணி நேரம்தான் டயம். இல்லேன்னா உடம்பு நீர்விட்டு சீக்கு பரவ ஆரம்பிச்சிடும். உன் பாட்டி பட்டுப்புடவை தவிர வேற ஒன்னையும் கட்டியறியாதவ. சிலோன் சென்ட்டு பாட்டில் வியாபாரி உன் பாட்டிக் காகவே இந்த அரண்மனைப்பாளையம் வந்துட்டுப் போவான். அவளால தன் உடம்பு நாத்தமெடுக்கறதைச் சகிச்சுக்க முடியாது. நான் சொல்றது உனக்குப் புரியும்னு நினைக்கறேன்."

மிண்டாஜியும் தனக்கு தெரிந்த நியாயத்தைத்தான் பேசினார். சிவாஜி மௌனமாகக் கேட்டுக் கொண்டான். ஒப்புக்கொள்வது போல எதிர்ப்பு எதுவும் காட்டாமல் காரில் சென்று ஏறினான். போன்ஸ்லேயும் டிரைவிங் சீட்டில் ஏறிக்கொண்டு காரைக் கிளப்ப, கார் ஓடத் தொடங்கியது. சிவாஜிக்கு சிகரெட்டை எடுத்துப் பற்ற வைத்தால் போதும்போல இருந்தது.

அந்தப் புகையிலையின் புகை மார்பு முழுக்க பரவி அவனது உதடுகளைப் பிரித்துக்கொண்டு வெளியே சீறியபோது, அவன் எந்த அளவுக்கு அடிமையாகி விட்டான் என்பது தெரிந்தது.

"சிவாஜி என்ன பண்ணப்போறே?" போன்ஸ்லே டிரைவ் செய்தபடியே கேட்டான்.

"என்ன பண்ணப்போறேன்னா?"

"இல்ல... பாட்டிய எரிச்சதுக்குப் பிறகு என்ன செய்யறதா உத்தேசம்?"

"புரியலடா... செய்ய என்ன இருக்கு?"

"இந்த அரண்மனை வீட்டை என்ன செய்யப் போறேன்னு கேட்டேன்."

“என்ன செய்ய முடியும் என்னால. இன்னிக் கெல்லாம் அந்த வீட்டுக்கு வெள்ளையடிக்கக்கூட என்னால முடியாது.”

“அது எனக்கும் தெரியும். அதனாலதான் கேட் கறேன் என்ன பண்ணப்போறேன்னு.”

“நான் யாருடா எதையும் பண்ண?”

“ஸ்டுப்பிட். உன் குத்தகைக்காரனுக்குக்கூட உங்க அரண்மனை வீடுபத்தி தெரிஞ்சிருக்கு. ஆனா, உனக்கு உன் உரிமைபத்தி தெரியல.”

“வாட் டு யூ மின்?”

“அது இனி உன் சொத்து.”

“ஆமா பெரிய சொத்து. என்ன மவுண்ட்ரோட்லயா இருக்கு; வித்தா கோடிக்கணக்குல கிடைக்கும்கறதுக்கு.”

“ஃபூல்... இப்பம் அது கோடிக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள சொத்துதான். அதை மறந்துடாதே.”

“என்னடா உளர்றே... வித்தா சில லட்சங்கள் கிடைச்சா அதிகம்.”

“உனக்கு சரித்திர பெருமை தெரியல. இப்பல்லாம் இந்தமாதிரி வீடுகளுக்குதான் மதிப்பே. காரைக்குடி பக்கம் போய்ப் பார். இந்தமாதிரி வீடுகள் ஒவ்வொண்ணும் ஒவ்வொரு நாளும் பல ஆயிரம் சம்பாதிச்சுக் கொடுத்து கிட்டு இருக்கு.”

“என்னடா சொல்றே?”

“அவ்வளவு வீடுகள்ளையும் சினிமா ஷூட்டிங் நடந்து கிட்டு இருக்குடா...”

"அப்ப வாடகைக்கு விடச்சொல்றியா?"

"பின்ன... நீ இன்னுமா உன் மனசுல மெடிக்கல் ரெப் வேலையை சுமந்துகிட்டிருக்கே..."

"போன்ஸ்லே வாட் யூ சே..."

"ஐ சே இனி நீ கோடீஸ்வரன். அப்புறம் இன்னொரு விஷயம்."

"என்னடா?"

"உன் பாட்டியோட அவ்வளவு நகைகளும் அங்க தான் எங்கையாவது இருக்கணும். அதையும் தேடி எடுத்துட்டா உன் அக்காக்கள் கல்யாணத்தை சுலபமா முடிச்சிடலாம்."

"ஆசை காட்டாதே போன்ஸ்லே. பாட்டி என்ன ஆயிரம் பவுனா வெச்சிருக்கா?"

"முட்டாள். நீ ஒரு கெமிஸ்ட்ரி ஸ்டூடண்டா போனது பெரிய தப்புடா. நான் ஹிஸ்டரி மேஜர் எடுத்து படிச்சவன். உன் பாட்டி மாதிரி பழைய ராணிகள்கிட்ட ஆயிரம் பவுன் இல்ல. அதுக்கு மேலயே இருக்கும். தங்கம் மட்டுமில்ல வைரம், மாணிக்கம், வைடூரியம்னு நிச்சயமா நவரத்தினங்களும் இருக்கும்."

"போன்ஸ்லே எனக்கு ஆசை காட்றியா. நான் இப்ப துக்கத்துல இருக்கேன். அந்த துக்கம் என்னை எதுவும் செய்துடக்கூடாதுன்னு இப்படி எல்லாம் பேசறியா?"

"நீ துக்கத்துல இருக்கியாக்கும்? இதுவரை தொடர்ச்சியா மூணு சிகரெட் காலி. இன்னிக்குள்ள இன்னும் எவ்வளவோ? ஒவ்வொரு நொடியையும் வாழ்ந்து பார்க்கத் துடிக்கறவன்டா நீ..."

“இதோ பார்... நான் என் மேனேஜர்கிட்ட எப்படி லீவு கேக்கறதுங்கற குழப்பத்துல இருக்கேன். அப்புறம் இந்தக் காரியங்களுக்கான செலவு. ஊர்ல அப்பாவுக்கு இப்பதான் பைபாஸ் சர்ஜரி முடிஞ்சிச்சு. அவரால ஒரு பத்துபடி கூட ஏறமுடியாத நிலை. அக்கா வைஜெயந்தி யோட தையல் மிஷின் செஞ்ச புண்ணியம் என் குடும்பம் ஓடிக்கிட்டு இருக்கு. நான் இப்ப என்ன பண்றதுன்னே தெரியாத குழப்பத்துல இருக்கேண்டா. நீ என்னடான்னா நான் ஜல்சா பண்ணிகிட்டு இருக்கற மாதிரி பேசறியே...”

“சரி சரி... நீ எப்பவுமே முதல்ல பயப்பட்றவன். பிறகுதான் தெளியறவன். உன்னை என்ன நான் இன்னிக்கு நேத்தா பாக்கறேன். முதல்ல உன் வீட்டுக்கு போன் பண்ணி விஷயத்தைச் சொல்லி, அவங்கள வேகமா கிளம்பி வரச்சொல். உன் மேனேஜர்கிட்ட நான் பேசறேன். அவன் நம்பர் சொல்லு.”

“நோ... நோ... அவன் ஒரு சிடுமூஞ்சி. ஏன் துரை நேர்ல பேசமாட்டாரான்னு கேட்பான்.”

“அட நம்பரைச் சொல்லுடா. துரை நிஜமாலுமே இனி துரைன்னு சொல்லி அவர் இனி எந்த நாளும் உன்கூட பேசமாட்டார்னு சொல்லிட்றேன்.”

“போன்ஸ்லே...”

“வாய மூடு. உனக்கு உன் மதிப்பே தெரியலடா. நீ எல்லாம் ஒரு சிவாஜிலேட்னா சிரிப்பாங்க. எனக்கு தெரிஞ்சு நீ பொறந்திருக்கறதே கோல்ட் ஃப்ளேக் சிகரெட் பிடிக்க மட்டும்தான்.”

போன்ஸ்லே தன் கமெண்ட்டோடு மளமளவென்று போன் போட்டு பேச ஆரம்பித்துவிட்டான்.

போஸ்ட் ஆபீசில் இருவருக்கும் தடபுடலான வரவேற்பு. போஸ்ட்மாஸ்டர் வெங்கட்ராவும், ஒரு மராத்திய பிராம்மணர்.

வீட்டுக்குள் ஓடிச் சென்று மனைவியிடம் சொல்லி காபி எல்லாம் போடச் சொல்லிவிட்டு வந்தார்.

போன்ஸ்லே, போனில் பாட்டி காலமாகிவிட்டதை எல்லோருக்கும் சொல்வதை வைத்தே அவரும் விஷயத்தை விளங்கிக்கொண்டார்.

மனைவியிடம் சென்று "ராணிம்மா இறந்துட்டாங்க. நம்ம ஊர் சம்பிரதாயப்படி அவங்க உடம்புக்கு தீ வைக்கறவரை வீட்டுல உலை கொதிக்கக்கூடாது" என்று தனக்குத் தெரிந்த சம்பிரதாய சங்கதிகளை எல்லாம் கூறிவிட்டு வந்தார்.

"அப்ப காப்பி மட்டும் எப்படி போட்றதாம்?" என்கிற அவள் கேள்விக்கு அவரால் பதில் சொல்ல முடியவில்லை. ஆனால், வீணா தன் பாவாடை தாவணியை இழுத்து சரிசெய்து கொண்டவளாக சூடான பாலில் நெஸ் காபி பவுடரைக் கலந்து காபி தயாரித்து எடுத்து வந்தாள்.

இரட்டை ஜடை நெற்றியில் விபூதிக்கீற்று குங்குமம், சந்தனம் என்று சீரான இடைவெளியில் இடப்பட்டிருக்க, சரியான கோலிகுண்டு கண்கள். புஷ்டியான பூரித்த கன்னம். ஒரே பார்வையில் பச்சக்கென்று ஒட்டிக் கொள்ளும்படியான ஒரு முகம்!

காபியோடு வந்து நின்ற வீணாவைப் பார்த்து சிவாஜி ஒரு வினாடி திணறிப் போனான். அவனுக்கு

இந்த மார்டன் டிரெஸ்ஸை எல்லாம் விட பாவாடை தாவணி மிகவும் பிடிக்கும். அது கிழவியைக்கூட இளமையாகக் காட்டும். அழகிகளையோ ரம்பை, திலோத்தமை லெவலுக்குக் கொண்டு போய்விடும். மேலே அமர உலகில் அனேகமாக எல்லா தேவதை களும் பாவாடை தாவணியில்தான் இருப்பார்கள் என்றும் அவன் கற்பனை செய்து பார்ப்பதுண்டு.

"சாப்பிடுங்கோ... இவ என் ஒரே டாட்டர். பேர் வீணா. ஆத்துல செல்லமா கொண்டம்மான்னு கூப்பிடு வோம்..." என்று போஸ்ட்மாஸ்டர் வெங்கட்ராவ் உபசரணையாகப் பேசினார்.

"அது என் பாட்டி பேர்."

"அப்ப அதையே வெச்சிருக்கலாம்."

"நாமகரணப் பேர் அதுதான். ஆனா, இன்னிக்குதான் எல்லாமே மாடர்னாப் போச்சே. வீணா, ப்ரியா, அனு, தீபான்னு ரெண்டெழுத்துக்கு மேல போனா பெய ரையே ஒரு பெரிய பாரமான்னா நினைக்கறா?"

வெங்கட்ராவ் வருத்தப்படுகிறாரா இல்லை கோபப் படுகிறாரா என்றே தெரியவில்லை. போன்ஸ்லே அதை ரசித்தான். ஆனால், சிவாஜிராவ் பார்வை அவளையே ரசித்தபடி இருந்தது.

அவளிடமும் ஒரு வெட்கம். எப்பொழுதும் இந்தப் பார்வையால் ஒருவரை நோக்கும்போது உடம்பெல் லாம் சற்று கூசித்தான் போகும். அவளுக்கும் அப்படித் தான் இருந்தது. நல்லவேளை அதைக் கலைப்பதுபோல தெருவில் தொம் தொம் என்று குட்டி முரசு ஒலிக்கும்

சப்தம் கேட்டது. அதைத் தொடர்ந்து சிவாஜியின் பாட்டி ஜானகிராணி காலமான செய்தி ஊர்க் காவல்காரனால் சொல்லப்படத் தொடங்கியது.

“அரண்மனைப்பாளைய மகாஜனங்கள் அவ்வளவு பேருக்கும் ஒரு துக்கச் செய்தி. நம்ம ஊர் ராணியும் அரண்மனையோட கடைசி ராணியுமான ஜானகி ராமா ராவ் வைகுண்ட பதவி அடைஞ்சுட்டாங்க. அவங்க தகனக்கிரியை... பாளையம் அரண்மனை கல் மண்டபத் தோட்டத்துலையே நடக்கும். மறு அறிவிப்பு வரும் வரை ஊர்ல யாரும் அடுப்பு பத்த வைக்கக்கூடாது. பூஜை முதலான நல்ல காரியமும் செய்யக்கூடாது. தொம்... தொம்...”

காவல்காரன் சொல்லிவிட்டு நகரவும் சிவாஜிக்கு அதைக் கேட்க சற்று பெருமையாகக்கூட இருந்தது. வீணாவும் அவனைப் பெருமைக்குரியவனாகத்தான் பார்த்தாள்.

போன்ஸ்லே அடுத்தடுத்து போன் பேச டயலை சுழற்றத் தொடங்கிவிட்டான். அந்த இடைவெளியில் சிவாஜி போஸ்ட் ஆபீஸ் திண்ணை பக்கமாகப் போய் அமர்ந்துகொண்டான். கையில் காபி கமகமத்தபடி... அதை பூனை போல நக்கி நக்கி பருகவும்செய்தான். அந்த நேரத்துக்கும் இடைவிடாமல் சிகரெட் பிடித்த நாவிற்கும் அது பரம சுகமாக இருந்தது. வீணாவும் எட்டிப் பார்த்தாள் - ஜன்னலுக்குப் பின்னால் உள்ளடக்கமாக நின்றுகொண்டு...

## 3

'ஒரு வீடு எப்படி தன்னைத்தானே கட்டிக் கொள்கிறதோ அதேபோல அது தன்னைக் கட்ட பயன்படுத்திக்கொண்ட எஜமானனின் ஜாதகத்தையே அது தன்னுள் கொண்டிருக்கும். காலப் போக்கில் எஜமானர்கள் மாறுவது முதல் வீடு விற்று கைமாறுவது வரை எத்தனை மாற்றங்கள் நிகழ்ந்தாலும் அதெல்லாமும் அந்த வீட்டின் கட்டமைப்புக்குப் பொருத்தமாகவே இருக்கும். ஏதோ ஒருவகையில் ஒவ்வொரு எஜமானரும் அந்த வீட்டின் கட்டமைப்புக்குப் பொருந்திப் போவார்கள். அப்படிப் பொருந்திப் போகின்றவர்களைத்தான் அந்த வீடும் ஏற்றுக் கொள்ளும். சில வீடுகளில் சிலரால் சில மணி நேரங்கள்கூட இருக்க முடியாது. இந்த நுட்பமான உண்மையை அனுபவத்தால்தான் உணர முடியும். அப்போதுதான் அவர்களுக்கே வீடு என்பது வெறும் கல்மண் மட்டுமல்ல அது, அதையும் கடந்த ஏதோ ஒன்று என்பதெல்லாம் உரைக்கத் தொடங்கும்.'

*சிவாஜிராவும், போன்ஸ்லேயும் அரண்மனை வீட்டு முகப்புக்குத் திரும்பி வந்தபோது அங்கே யாருமே இல்லை. சிவாஜிராவுக்கு அது சற்று அதிர்ச்சியாகக்*

கூட இருந்தது. தெருவில் ஒரே ஒருவன் மட்டும் இரண்டு தென்னை மட்டைகளை இழுத்தபடி வந்துகொண்டிருந் தான். சிவாஜியையும் போன்ஸ்லேயையும் பார்க்கவும் தலையில் கட்டியிருந்த சிகப்புக் குற்றாலத் துண்டை அவிழ்த்து பணிவாக இடுப்பில் கட்டிக்கொண்டான்.

"சாமி... என்ன இன்னும் இங்கேயே நிக்கறீங்க; கல் மண்டபத்துக்குப் போகலையா?" என்று கேட்டான். அப்போதுதான் பாட்டியின் சடலம் கல்மண்டபத்தில் கிடத்தப்பட இருக்கும் அந்த விஷயமே சிவாஜிக்கும் உரைத்தது.

போன்ஸ்லே பதிலுக்கு அவனைப் பார்த்து "இந்த மட்டைங்க எதுக்கு?" என்று கேட்டான்.

"ராணிக்கு பாடை கட்டத்தான். குருவய்யர் வெட்டிக் கிட்டு வரச் சொன்னார்..."

"நீ?"

"நான் இந்த மாதிரி பொணம் உழுந்த அன்னிக்கு மட்டும் வீதிக்குள்ற வர முடிஞ்ச ரேணியனுங்க."

"ரேணியன்னா?"

"மத்த ஊர்கள்ள எங்கள புலையன்னு சொல்வாங்க. இங்க வடக்கத்தி வழக்கம்ல அதிகம். அதான் ரேணியன்னு சொல்வாங்க. எங்க தாய் பாஷைகூட மராத்திதாங்க."

அவன் ஒரு கேள்விக்கு ஒன்பது பதில் கூறினான். போன்ஸ்லே உடனேயே அவனைப் போகச் சொல்லி விட்டு சிவாஜியைப் பார்த்தான்.

"என்ன போன்ஸ்லே... வா நாமளும் கல் மண்டபத்துக்குப் போவோம்."

"இரு சிவாஜி. அங்க போய் இப்ப ஒண்ணும் ஆகப் போறதில்லை. எப்படியும் உன் அப்பா அம்மா அக்காக் கள்ளாம் இப்போதைக்கு வரப்போறதில்லை. அவங்க வர எப்படியும் அஞ்சாறு மணி நேரமாகும். அதுக்குள்ள நாம உள்ற போய் மொத்த அரண்மனை வீட்டையும் ஒரு அலசு அலுசுவோம்."

"அலசறதா... எதுக்கு?"

"பைத்தியக்காரா... உன் பாட்டி கடைசிவரை தன் னோட நகைகள்பத்தி எதுவுமே சொல்லலை. நிச்சயமா அது இந்த அரண்மனைக்குள்ளதான் எங்கை யாவது பத்ரமா இருக்கும்."

"அது சரி. போன்ஸ்லே... அதைத் தேட இதுவா நேரம்?"

"சரி இப்ப நீ என்னதான் பண்ணப் போறே... சொல் பார்ப்போம்."

"இல்ல போன்ஸ்லே. பாட்டி பிணம் கிடக்கும்போது, அவ நகையைத் தேட்றது எனக்கு நாகரீகமா படலை..."

சிவாஜி இங்கிதம் காட்டிப் பேசிய நியாயம் போன்ஸ்லேயையும் அடக்கிவிட்டது.

"சரி வா கல்மண்டபத்துக்குப் போகலாம்" என்று அவன் தோள்மேல் கை போட்டபடி நடக்கத் தொடங்கி னான். அப்போது பக்கத்து திட்டிவாசல் கதவை யாரோ திறப்பதுபோல திறக்கும் சப்தம் கேட்டு இருவருமே திரும்பினர்.

கதவு 'கச்சரச்சக்கரர்ர்...' என்கிற உராய்வுச் சப்த மோடு திரும்பி உள்பாகத்தைக் காட்டியது.

"யாரோ உள்ள இருந்து வர்றாங்க போல இருக்கு."

"யாரா இருக்கும்... இவ்வளவு பெரிய அரண்மனை வீட்டுக்கு ஒரு பூட்டு இல்ல பார்."

இருவரும் அலுத்துக் கொண்டதுதான் மிச்சம். ஆனால், உள்ளிருந்து திட்டிவாசல் வழியாக யாருமே வெளியில் வரவில்லை.

சிவாஜிராவ் முகத்தில் வேகமாய் ஒரு சஞ்சல ரேகையின் ஓட்டம்.

"போன்ஸ்லே- என்னடா இது யாரையும் காணோம்?"

"ஆமாண்டா யாரையும் காணலை. ஒருவேளை கதவு காத்துல ஆடியிருக்குமோ?"

"அப்படித்தான் இருக்கணும்" ஒரு முடிவுக்கு வந்தவர்களாக இருவரும் கல்மண்டபம் நோக்கி நடந்தனர்.

கல்மண்டபத் தோட்டத்தில் எங்கு பார் ஒரே பச்சை.

பச்சைப் பாம்பு ஒன்று ஒரு விரல் பருமன் அளவு நீண்ட உடம்போடு கொடி ஒன்றின்மேல் நொடியில் தெரிந்து மறைந்தும் போனது.

அது மழைக்காலம் என்பதால் எங்கு பார் ஒரே புஷ்டி. கல்மண்டபத் தோட்டத்துக்குள் அந்த நாளில் குதிரை லாயம் இருந்தது. இப்போது அதில் பசுமாடுகள் கட்டப்பட்டிருந்தன.

அந்த நாளில் தஞ்சாவூரில் இருந்து செய்தி கொண்டு வரும் அரண்மனை வீரர்கள் மற்றும் அதிகாரிகள் கல்மண்டபத்துக்கு வந்து தங்கள் குதிரைகளை லாயத்தில் விட்டுவிட்டு மண்டபத்தில் தங்கி ஓய்வு எடுப்பார்கள்.

மண்டபத்துக்கு நேர் பின்னாலே ஒரு நீராழி! கற்படிகளில் இறங்கி கீழே சென்றால் செவ்வக வடிவமாய் உள்ள அந்த ஆழியில் இறங்கித்தான் அதிகாரிகள் குளிப்பார்கள். உடைகளைத், துவைத்துக் காயப் போடவும், நீராழியை ஒட்டியே உடுப்பு மாற்றும் வெளியும் இருந்தது. இன்று எல்லாமே தூர்ந்துபோய் எங்கு பார் ஒரே செடியும் கொடியுமாகக் காட்சி தந்தது. அந்த இடத்தைச் சீர்படுத்தி வேறு விதத்தில் பயன்படுத்தலாம். ஆனால், செத்துப் போய்விட்ட ஜானகிபாயால் அதை எல்லாம் கவனிக்க முடியவில்லை.

இந்தியா சுதந்திரம் அடைவதற்கு முன்பு வரை அரண்மனைப்பாளையம் உட்பட சுத்துப்பட்டில் பதினான்கு கிராமங்களுக்கு ஜானாபாயின் அப்பாவும் சிவாஜிராவின் தாத்தாவுமான ராமண்ணாராவ்தான் பாளையாதிபதி! ஜமீனை ஒழித்துக்கட்டி, அரச அதிகாரங்களையும் பறித்து, அவர்களுக்கெல்லாம் மானியம் கொடுத்து இந்தியாவை ஒரு சுதந்திர ஜன நாயக நாடாக படேல் அறிவித்தபிறகு, அதைக் கேட்ட அதிர்ச்சியிலேயே ராமண்ணாராவ் உயிரை விட்டு விட்டார். அரசாங்கமும் ஏதோ கொஞ்சம் மான்யமாகக் கொடுத்தது. அரண்மனை வீடு தோட்டம், மற்றும் வயல்வெளிகள் என்று சகலத்தையும் அது எடுத்துக் கொள்ளப் பார்த்தது. ஆனால், ஜானகிபாயின் அப்பா பானாஜியில் ஒரு வக்கீலாக இருந்தவர். அவர் அரசாங்கத்தின் மேலேயே வழக்குப் போட்டு, நாங்கள் பெற்ற செல்வங்கள் அனைத்தும் எங்களுக்கு அதிகாரப் பிச்சை போடப்பட்டதல்ல. அவை தானமாகத் தரப்பட்டவை. தானமாகத் தந்ததைத் திரும்பிப் பெறுவது

அரசியல் அநாகரிகம் என்று வாதாடி, இறுதியில் அவரே வெற்றியும் பெற்றார். அதன்பிறகு மொத்த ஆஸ்தி பாஸ்தியும் மதிப்பீடு செய்து உயில் எழுதி பதியவும் செய்துவிட்டார். இந்த விபரங்கள் மிண்டாஜிக்கு மட்டும் ஓரளவுக்குத் தெரியும்.

ஜானகிபாய்க்கு ஒரே மகள்! துர்காபாய் என்பது அவள் பெயர். அவள் தங்கள் அரண்மனையில் வேலை பார்த்த சேதுபதி என்பவனைக் காதலித்து, பின் அவனோடு ஓடியதெல்லாம் இன்று பழங்கதை!

அந்த நாளைய சரித்திரத்தின் ஒரே மிச்சமாய் வாழ்ந்து வந்தவள்தான் ஜானகிபாய்!

அவளும் போய் சேர்ந்துவிட்டாள்.

அதோ கல்மண்டபத்தின் நடுவில் அவளது சடல உடல்- தலைமாட்டில் ஒரு அகல்விளக்கு அடுக்கப்பட்ட மூன்று செங்கற்களின் மேல் அமர்ந்து எரிந்து கொண்டிருந்தது. ஜானகிபாயின் சுருங்கிய உடலைச் சுற்றி சிலர் உட்கார்ந்திருந்தனர். அவர்களில் போஸ்ட் மாஸ்டர் வெங்கட்ராவின் மகளான வீணாவும், மனைவியும்கூட வந்து அமர்ந்துகொண்டிருந்தனர்.

அந்தக் கல்மண்டபப் பகுதிக்குள் நுழைந்த போன்ஸ்லேயின் கார் ஒரு ஓரமாக அடங்கி நின்றுகொண்டது. காரில் இருந்து குளிருக்கு ஒரு சிகரெட்டை எடுத்துப் பற்ற வைத்துக் கொண்டால் நன்றாக இருக்கும் என்று தோன்றியது. ஆனால், பார்ப்பவர்கள் தவறாக நினைப் பார்கள் என்று பல்லைக் கடித்துக்கொண்டான். அவன் எதிரில் தன் செல்போன் மூலம் போன்ஸ்லே யாருடனோ பேச முயன்றபடி இருந்தான்.

"போன்ஸ்லே யாருக்கு ட்ரை பண்றே?"

"உன் மானேஜர் பயலுக்குத்தான்..."

"அவன் லைன் அவ்வளவு சுலபத்துல கிடைக்காது. அதனால நான் நேரில் பார்க்கும்போது எல்லா விஷயங் களையும் பேசிக்கலாம்னு சொல்லி விட்டுட்டேன். ஆனால், நேர்ல பார்க்கும்போது காய்ச்சி எடுப்பான். சாரி; உங்க லைன் கிடைக்கலைன்னா ஒத்துக்க மாட்டான்."

"இரு சிவாஜி... லைன் கிடைச்சிடுச்சு. நீ பேசறியா, நான் பேசட்டுமா?"

"நீயே பேசு. நான் பேசினா இப்பகூட கடைசியா எவ்வளவு கால்ஸ் பார்த்தே. எவ்வளவு ஆர்டர் புக் பண்ணேன்னு ஆரம்பிச்சிடுவான்."

"சரி. ஹலோ சார்- மிஸ்டர் வைத்தீஸ்வரன் எல்.பி.ஜி ஃபார்மா தானே?"

"யெஸ்."

"சார் நான் உங்க ரெப் சிவாஜிராவோட ஃப்ரெண்ட் பேசறேன்."

"என்ன விஷயம்?"

"சிவாஜியோட பாட்டி இறந்து போய்ட்டாங்க. சிவாஜிதான் எல்லா காரியங்களையும் பண்ணியாகணும். இப்ப ஈம காரியத்துலதான் இருக்கான். லீவு சொல் றதுக்குத்தான் போன் செய்தேன்."

"ஏன்... சிவாஜியே இதை போன் பண்ணி சொல்ல மாட்டானாமா?"

"பாவம் சார்... அவன் துக்கத்துல இருக்கான்."

"பாட்டி செத்ததுல என்ன பெரிய துக்கம் மிஸ்டர். எனக்குத் தெரிஞ்சு அவனுக்கு ஒரு பாட்டி இருக்கறதா அவன் சொன்னதே இல்லை."

"சாரி சார்- அதுபத்தி எனக்கு என்ன சார் அவசியம். உங்களுக்கு நான் லீவு சொல்லணும். சொல் லிட்டேன்.

"முறைப்படி அவனையும் ஒருதடவை பேசச் சொல்லுங்க. இல்லேன்னா நான் இதை லீவா கிரேண்ட் பண்ண முடியாது."

"இதுலல்லாம் என்ன சார் முறை. இது எவ்வளவு துக்கமான நேரம்?"

"இப்பப் பாட்டி தாத்தா சாவுக்கெல்லாம் அழுது கிட்டிருந்தா வேலை எப்பப் பாக்கறது. அதுல எப்ப முன்னுக்கு வர்றது."

அந்த மேனேஜர் முசுடு பேசிக்கொண்டே போனான். போன்ஸ்லே, அதற்குமேல் அவனிடம் பதிலுக்கு பதில் என்று எதுவும் பேசாமல் போனை கட் செய்துவிட்டு நிமிர்ந்தான். சிவாஜிராவ் கவனித்துக் கொண்டேயிருந் தான்.

"சிவாஜி- நிஜமா சொல்றேண்டா உன்னை நினைச்சா ரொம்பவே பரிதாபமாதான் இருக்கு. இவன் மேனேஜரே இல்லடா... சரியான டேமேஜர்."

"புரிஞ்சா சரி" சிவாஜி சலித்துக்கொள்ள, மிண்டாஜி புரோகிதர் ஒருவருடன் வந்தபடி இருந்தார். நேராக சிவாஜியிடம்தான் வந்தார்.

"மாமா..."

"இவர் புரோகிதர். பக்கத்து கிராமத்துல இன்னொரு சாவு விழுந்திருக்கு. அதுக்கு இவர் போயாகணும். ஆகையால, நீ கொஞ்சம் வேகமா இவர் சொல்றபடி கேட்டு காரியத்தைச் செய்தா நல்லது."

"இப்பவேவா."

"ஆமாம்ப்பா... உடம்பையும் ரொம்ப நேரம் போட்டு வைக்க முடியாது."

"என்ன மாமா- அம்மா அப்பால்லாம் வந்துடட்டுமே-"

"அவங்க வந்தபிறகு கொள்ளிப் போட்டுக்கலாம். நீ அதுவரை மத்த காரியங்களை முடிச்சிடு" மிண்டாஜி அவனிடம் ஒரு புதுவேட்டி துண்டையும்கூட தந்தார்.

அவனும் வாங்கிக்கொண்டு ஒரு மறைவிடத்துக்குச் சென்று அதைக் கட்டிக்கொண்டு வந்தான். அவன் அணிந்து வந்திருந்த பேண்ட்டும் ஷர்ட்டும் போன்ஸ்லே வசம் ஒப்படைக்கப்பட்டது.

புரோகிதர் அவனுடன் பிணம் கிடக்கும் மண்டபத்தின் கல்படிகள் அருகே சென்றார். அங்கே உரிக் கயிறு, முறம், அரிசி, பொரி என்று சாவு காரிய ஐட்டங்கள் !

வேட்டியும் துண்டுமாய் வரும் சிவாஜிராவை வீணா சற்று விசித்திரமாகப் பார்த்தாள்.

"போய் முதல்ல நீராழில குளிச்சிட்டு வாங்கோ..." என்றார் புரோகிதர். அவனும் அப்படியே செய்யத் தொடங்கினான். அப்போது புரோகிதர் ஜானகிபாயின் சடலத்தின் அருகே சென்று ஒரு பார்வை பார்த்தார்.

ஜானகிபாயின் கையில் ஒரு தங்கக் காப்பும், கழுத்தில் ஒரு இரட்டைவடச் சங்கிலியும் இருந்தது.

கைவிரல்கள் வெளிறிப்போய் நரம்பு புடைத்துக் கொண்டு காட்சி தந்தது.

கண்ணிரண்டும் திறந்தே இருந்தது. வாயும் திறந்த நிலை. புரோகிதர் இமையை மூடப் பார்த்தார். ஆனால், இமைகள் விரைத்து விட்டிருந்தன.

"இந்தத் தங்கக்காப்பு சங்கிலி எல்லாம் எடுத்துட லாமே" என்றார்.

"பேரன் வரட்டும். அவன்கிட்ட சொல்லுங்க. அவனே எடுக்கட்டும்" என்றார் ஒருவர். சிவாஜிராவும் குளித்துவிட்டு ஈரம் சொட்டச் சொட்ட வந்தான்.

"அம்பி... பாட்டி காலைத் தொட்டு நமஸ்காரம் பண்ணிட்டு, பாட்டி கை, கழுத்துல கிடக்கிற நகையை எல்லாம் கழட்டிடு."

அவனும் அதற்குத் தயாரானான். மெல்ல சடலத்தின் அருகே குனிந்து கழுத்துச் சங்கிலியை அவிழ்க்கப் பார்த்தபோது பாட்டியின் வெறித்த விழிகள் அவனையே உற்றுப் பார்த்து பயமுறுத்தியது. எனவே, அதைத் தவிர்த்து விட்டு கழுத்துச் சங்கிலியைக் கழற்றி முடித்தான். பின் வலது கை மணிக்கட்டு அருகில் வந்தான். தங்கக்காப்பு எந்த நாளில் செய்து போட் டதோ? நிறையவே தேய்மானம் தெரிந்தது. மணிக்கட்டு எலும்பு முட்டிக்கொண்டு வளையல் காப்பைக் கழற்ற விடாதபடி தடுத்தது. அவனும் பலத்தை எல்லாம் பிரயோகித்து அந்த எலும்பை அமுக்கி காப்பு வளை யத்தை வெளியே உருவ முயற்சித்தான்.

அந்த நொடிப் பொழுதில் கல்மண்டபத் தோட்டத் துக்குள் ஒரு டாடா சுமோ வாகனம் நுழையவும் எல்லோர் கவனமும் அந்தப் பக்கமாகத் திரும்பியது. சிவாஜிராவும் குனிந்த நிலையில் அப்படியே பார்வையை ஓடவிட்டான்.

சிவாஜியின் தாய் தந்தையும் அவனது சகோதரிகளும் தான் சுமோவில் வந்திருந்தனர்.

அவனிடம் திகைப்பு. எப்படி இவ்வளவு சீக்கிரமாக இவர்களால் வர முடிந்தது என்று. அந்தக் குறிப்பிட்ட நொடிகளில் அவன் மட்டும் உணரும்படியாக பாட்டி சடலத்தின் விரல்கள் சட்டென்று நெளிந்து சிவாஜியின் கரத்தைப் பிடித்தன.

சில பல நொடிகள் வரை அவர்கள் வருவதைப் பார்த்தவன், திரும்பவும் காப்பு வளையத்தைப் பார்க்க குனிந்தபோது அவனுக்கு பகீர் என்று இருந்தது. பாட்டி யின் வலது கரத்தின் ஐந்து விரல்களுமே சிவாஜியின் வலது கை மணிக்கட்டு பாகத்தை இறுக்கமாகப் பற்றி யிருந்தன.

பயத்துடன் கையை உதறியவனுக்கு அடுத்த கட்ட மாய் பாட்டியின் திறந்து கிடந்த கண்களின் இமை யிரண்டும் ஒருமுறை மளுக்கென்று மூடிவிட்டுத் திரும்பவும் திறந்து கொண்டதைப் பார்த்தான். அந்தக் காட்சி அவன் இதய ஓட்டத்தையே ஒருமுறை நிறுத் தியது. சக்தியை எல்லாம் திரட்டியவனாக பாட்டி பிடித்த கையை உதறிக்கொண்டு நிமிர்ந்தவன் அங் கிருந்து படுவேகமாக நகர்ந்து கல்படிகளையும் தாண்டிக் கீழே குதித்தான். போன்ஸ்லேவுக்கு மட்டும் ஏதோ விபரீதம் என்பது புரிந்தது.

"சிவாஜி... வாட்ஸ் ஹேப்பண்ட்."

"போன்ஸ்லே, பாட்டி... பாட்டி..." அவன் சொல்லும் முன் அவன் தாயும் தந்தையும் அவனை நெருங்கி விட்டனர். பின்னாலேயே ஒன்றுக்கு நான்கு அக்காக்கள். எல்லோரிடமும் அழுகை கலந்த விசும்பல்.

அவன் அம்மா துர்க்காபாய் கிட்டத்தட்ட முப்பது வருடங் கழித்து தன் தாயைப் பார்க்கிறாள். அது அவளது அழுகைத் துடிப்பில் துல்லியமாக உணர முடிந்தது. சிவாஜிராவும் அந்த களேபரத்தில், தான் சொல்ல நினைத்ததைச் சொல்லாமல் நிமிர்ந்து அவர் களைக் கட்டிக் கொண்டான்.

அந்த இடத்தில் வெகு வேகமாக ஒரு அழுகை ஆலாபனை ஆரம்பமாகிவிட்டது.

"அம்மா... அப்பா... எப்படி இவ்வளவு சீக்கிரம் வந்தீங்க?"

"நாங்க உன் தகவல் கிடைக்கறதுக்கெல்லாம் முந்தியே கிளம்பிட்டோம். உங்கம்மா கனவுல உங்க பாட்டி வந்தாங்கப்பா..."

சிவாஜிராவின் அப்பா சேதுபதி ஒரு புதிய விஷ யத்தைச் சொன்னார்.

"கனவா... அம்மா கனவுலையா?"

"ஆமாம்ப்பா– துர்கா சீக்கிரமா வா! எனக்கு வேளை வந்துடுச்சி. நான் இவ்வளவு நாளா உன்னைப் பார்க்காம இருந்தது தப்புதான். நீயும் மாப்பிள்ளையும் நாளைக்குக் காலைலயே என்னைப் பார்க்க வந்துடுங்க. உங்கைல நகைப்பெட்டி சாவியைக் கொடுத்த பிறகுதான் என்

உயிர் பிரியணும். அந்த நகைங்க என் நாலு பேத்திக்கும்னு உன் பாட்டி உன் அம்மா கையைப் பிடிச்சிகிட்டு அழுதிருக்காங்க.

உன் அம்மாவுக்கு அப்பவே தூக்கம் கலைஞ்சிடிச்சு. விஷயத்தை என்கிட்ட சொல்லவும் நானும் கிளம்புங் கன்னு சொன்னேன். நீயோ கேம்ப்புன்னு தஞ்சாவூர்ல இருந்தே. வழியில உனக்குத் தகவல் கொடுத்துக்கலாம்னு நினைச்சு புறப்பட்டோம். ஆனா, நாங்க கும்பகோணம் வரவும் போன்ஸ்லேகிட்ட இருந்து போன் வரவும் சரியா இருந்துச்சு. எவ்வளவு வேகமா வந்தும் கடைசில உன் பாட்டியை உயிரோட பார்க்க முடியல பார்."

சேதுபதி பழைய பகை உணர்ச்சி துளியும் இன்றி கண்பொங்க அழுதார். சிவாஜிராவ் வாயைப் பிளந்து விட்டான்.

கடைசி நேரத்தில் பாட்டி கனவில் வந்ததை நம்பவா? இல்லை தன் கையைச் சற்று முன் பிடித்தாளே- அதை நம்பவா...? திறந்து மூடிய அந்த இமைகளும் அல்லவா இதயத்தை அமுக்கிற்று?

அவன் அம்மா துர்காவதி, பாட்டியின் மார்பின் மேல் முகம் புதைத்தபடி அழுதுகொண்டிருந்தாள்.

மிண்டாஜி மௌனமாகப் பார்த்துக்கொண்டு நிற்க, புரோகிதரும் மௌனமாகப் பார்த்துக்கொண்டு நின்றார்.

"என்ன புரோகிதரே..."

"எல்லாரும் வந்தாச்சு தானே."

"ஆமாம்- இவங்கதான் வரணும். எப்படியோ வந்துட் டாங்க."

"நல்லது. பிரேதத்துக்கு மாத்துப் புடவை ஒண்ணு வேணும். பாடைல விரிக்க கோடித்துணியும் வேணும்."

"புடவை கிழவியோடது பழசே இருக்கலாமில்லியா?"

"தாராளமா..."

"அப்ப நானே போய் கொண்டுவரேன். அரண்மனை வீட்டுக்குள்ள கிழவியோட மரபீரோவுல இருந்து எடுத்துகிட்டு வரணும்."

"சீக்கிரம் போங்க. ஒரு அரைமணி நேரத்துல நானும் கிளம்பணும்."

புரோகிதர் மிண்டாஜியை அனுப்பிவிட்டு ரேணியனை அருகில் அழைத்து, எருமுட்டை விறகெல் லாம் தயாரா இருக்கா? என்று கேட்க, அவனும் தோட்டத்தின் ஒரு மூலையில் சிதைக்காகத் தயாராகிக் கொண்டிருப்பதைக் காட்டினான்.

"இருபது நிமிஷத்துல சடலம் அங்க வந்துடும். எல்லாத்தையும் எடுத்து வை. போ..." என்று ரேணியனை அனுப்பிவிட்டுக் கதறி அழுதபடி இருக்கும் துர்கா பாயிடம் வந்தார் புரோகிதர்.

சேதுபதி பார்த்துக்கொண்டே இருக்க, அவரது பெண்மக்கள் நான்குபேரும் அம்மாவைத் தேற்றி பின்னால் இழுக்க முயன்றனர்.

# 4

'தேர்ந்த ஒரு வாஸ்து நிபுணன் பஞ்சபூதங்களைப் பார்த்து வியந்துகொண்டே இருப்பான். ஏன் என்றால் அது அவனிடம் பேசிக்கொண்டே இருக்கும். அதேபோல, எந்த ஒரு வீட்டைப் பார்த்தாலும் உடனேயே அந்த வீட்டு எஜமானரின் நேற்றைய, இன்றைய, நாளைய நிலைகளைத் துல்லியமாகக் கண்டறிந்துவிடுவான். ஒரு வாஸ்து நிபுணன், ஒரு வீட்டில் பிரதானமாகப் பார்ப்பதும் அந்த வீட்டின் எதிர்காலம் பற்றிய செய்திகளை அறிவதும் ஈசானிய பாகத்தில்தான். அதைத் தொடர்ந்து அவன் பார்ப்பது கன்னிமூலையை... இந்த இரண்டு பகுதியிலும் வீட்டு எஜமானனின் எதிர்காலம் எழுதி ஒட்டப்பட்டிருக்கும்.

ஈசான்யத்தின் வடபகுதியில் வடக்கு சுவரில் ஜன்னல்திறப்பு மிக முக்கியம். மாறாக அந்த பாகம் அடைக்கப்பட்டிருந்தால் வரவேண்டிய தொகை அல்லது பெறவேண்டிய தொகை விதி இல்லாததால் திரும்பிப் போய்விட்டது என்று பொருள். அதேபோல அதே வடகிழக்கு மூலையில் கிழக்குச்சுவரும் திறந்திருக்க வேண்டும். அங்கே ஒரு ஜன்னலாவது இருந்து அதன்வழியே சூரியஒளி புக வேண்டும்.

சூரிய ஒளிக்கதிர் வீட்டு மனைக்குள் மைய பாகமாக பிரம்மபாகம் வரை விழ வேண்டியதும் முக்கியம்!

மிண்டாஜி தெற்குத் தெருவழியாக நடந்துகொண்டிருந்தார். காவல்காரனின் ஊர்ச்செய்திக்கு ஏற்ப வீட்டுக்கு வீடு கிளம்பி வந்தபடி இருந்தனர். மிண்டாஜியை எதிரில் பார்த்தவர்கள் "எங்க சாமி போறீங்க?" என்று கேட்க, அவர் தோட்டத்துப்பக்கம் கையைக் காட்டி அவர்களை எல்லாம் போகச் சொன்னார். வேகமாகக் கிழக்குப் பக்கம் திரும்பி, முகப்புக் கதவு பக்கம் போய் பாதி திறந்தும் பாதி மூடியும் கிடந்த திட்டிவாசல் கதவருகே வந்தபோது அந்தக் கதவு யாராலோ அழுத்தி மூடப்பட்டது போல படாரென்று சாத்திக்கொண்டது.

மிண்டாஜிக்குக் கொஞ்சம் பகீரென்றுதான் இருந்தது. யாரோ கதவுக்கு அப்பால் இருந்துகொண்டு, தான் வருவது தெரியாமல் கதவை மூடிவிட்டதாகத் தான் கருதினார்.

"ஏய் யார் அது... கதவைத் திறப்பா... நான் மிண்டா வந்திருக்கேன்" என்று சத்தமாய் பேசினார்.

ஊஹூம்... மறுபக்கத்தில் இருந்து பதில் சப்தமே இல்லை. பின் அவரே கதவைத் தொட்டு வலிந்து தள்ளவும் திறந்துகொண்டது. உள்ளே உடம்பைத் துருத்திக்கொண்டு மறுபக்கம் இறங்கியவர் அங்கிருந்தபடியே நாலுபக்கமும் பார்த்தார். யாரையுமே காண முடியவில்லை.

அவருக்குக் குழப்பமாக இருந்தது.

இருந்தும் அவசரத்தை உத்தேசித்து அரண்மனை வீட்டுக்குள் நுழைந்தார்.

தினமும் கிழவியைப் பார்ப்பதற்காக வந்து போன அனுபவத்தில் தடுமாற்றமின்றி நடந்தவர், கிழவி கிடந்த அறை முன் போய் நின்றார்.

கிழவி பிணத்தை அங்கிருந்து எடுத்துச் செல்லும் போது போடப்பட்ட விளக்குகள் எரிந்துகொண் டிருந்தன. அதில் கிழவியின் மரபீரோ கண்ணில் பட்டது. அதன் முகப்பில் ரசம் உதிர்ந்துபோன பெரிய அளவி லான கண்ணாடி. மிண்டாஜி அதன்முன் நிற்கவும், அவரது உருவமே அரைகுறையாகத்தான் அதில் பிரதிபலித்தது.

கண்ணாடி முன்நின்று தன்னை அழகு பார்த்துக் கொள்ளும் நேரமா அது...? மிண்டாஜி பீரோவைத் திறந்தார். உள்ளே பழைய பட்டுப் புடவைகள்! ஒரு முழ அகலத்துக்கு எல்லாம் பார்டர் வைத்த புடவைகள், அதில் ஒரு பழைய புடவையை உருவி எடுத்துக் கொண்டு கதவைத் திரும்ப மூடினார். திரும்பத் தொடங்கினார். அந்த நொடிப்பொழுதில் "மிண்டா..." என்று ஒரு காற்றுக்குரல்! மிண்டாவுக்கு சற்று தூக்கி வாரிப்போட்டது.

உடம்பில் அவருக்கு நிறையவே முடிகள். அதிலும் காது மூக்கில்கூட அவருக்கு முடிகள். அவை அவ்வளவும் சுருண்டு கிடந்த நிலையில் குத்தீட்டி போல நிமிர்ந்து கொண்டன.

"யாரது?" மிண்டா திரும்பித் திரும்பிப் பார்த்தார்.

ஒருவரும் இல்லை. பிரமையோ?

இறுதியில் அந்த முடிவுக்குத்தான் வர வேண்டி யிருந்தது. பேந்தப் பேந்த விழித்தபடியே புடவையோடு அங்கிருந்து ஓடாத குறை.

பெரிய அந்த வீட்டின் உள்பாகத்தில் ஒரே வவ்வால் கழிவுவாசம். மூக்கை சிணுப்பிக் கொண்டே கடப்பைக் கற்களின் ஜிலுஜிலுப்பை உணர்ந்தவராக வெளியே ஓடினார்.

உள்ளே கடந்து வெளிக்கு வந்து, அந்தப் பெரிய தேக்குக் கதவருகே வந்தபோது, திட்டிவாசல் கதவு அழுந்த மூடியிருந்தது. திறந்து வைத்துவிட்டுப் போன கதவு. யார் வந்து மூடியிருப்பார்கள் என்கிற கேள்வி யோடு கதவைத் திரும்ப திறக்க முனைந்தபோது அது கடினமான ஒன்றாக இருந்தது. மறுபக்கம் யாராவது தாழ்ப்பாள் போட்டுவிட்டிருப்பார்களோ என்றுகூட யூகிக்க வேண்டி வந்தது.

அங்கே புரோகிதர் புடவைக்காகத் தவித்துக்கொண் டிருப்பார். என்ன செய்யலாம் என்று யூகித்த மிண்டா, தெற்குப் பகுதியில் கொல்லைக் கதவு வழியாக வெளி யேறிவிடலாம் என்கிற முடிவுக்கு வந்து, அந்த செவ்வக மான அரண்மனை வீட்டின் வெளிப்பக்கமாய் மதில் சுவரை ஒட்டியுள்ள மரக்கட்டடங்களுக்குள் புகுந்து ஓடத் தொடங்கினார்.

ஒருவழியாக மூச்சிரைக்க கல் மண்டபத்துக்கும் வந்து சேர்ந்தார். புரோகிதர் அவர் வரவுமே... அவர் தோள்மேல் கிடந்த புடவையைப் பற்றி இழுத்தவராக அதை துர்காபாயிடம் தந்து கட்டிவிடும்படி சைகை காட்டினார்.

துர்காபாயும் கட்டிவிட்டாள். கட்டும்போதும் கதறிக் கதறி அழுதாள். சிவாஜிராவ் கொள்ளிச் சட்டி யோடு தயாராக நின்றான். அவனருகே வந்த புரோகிதர்

"வாஸ்தவத்துல உன் அப்பா பண்ணவேண்டிய காரியம். ஆனா, அவர் வேற சாதிங்கறதால பேரன் நீ பண்றே... இருந்தாலும் சாஸ்திரம்னு ஒண்ணு இருக்கு. போய் உன் அப்பா கையால தர்பைப் புல்லை தொட்டுக் கொடுத்து வாங்கி வா" என்று கூறி சேதுபதி கையிலும் ஒரு தர்பைப்புல் கட்டை வைத்தார். சேதுபதியும் அதை மகனிடம் தந்தார். அதனைத் தொடர்ந்து காரியங்களும் நிகழத் தொடங்கின. அடுத்த அரைமணியில் கிழவியின் சடலம் தகன மேடையில் சிவாஜி வைத்த தீயினால் சடசடவென்று பற்றி எரியத் தொடங்கியது. எல்லோரும் மௌனமாகக் கலையத் தொடங்கினர்.

அரண்மனை வீட்டின் கிழக்குவாசல்! முப்பது வருடங்களுக்குப் பிறகு அதன் முன்வந்து நின்றாள் துர்கா. கல்மண்டபத் தோட்டத்தில் நீராழிக் கிணற்றிலேயே எல்லோரும் தலை முழுக்குப் போட்டிருந்தனர். அந்த ஈரம் துர்காபாய் தலை முடியிலும் அந்த வாசலிலும் கொட்டியபடி இருந்தது. அவளை ஒட்டிக்கொண்டு அவளது மக்கள் மற்றும் சேதுபதி.

சிவாஜிராவ் காரியம் முடிந்து குளித்த கையோடு போன்ஸ்லேயுடன் ஆத்துப் பக்கமாய் போய்விட்டான். பல மணி நேரங்களாக சிகரெட் பிடிக்காமல் இருந்த அவஸ்தைக்கு ஒரு பத்து சிகரெட்டையாவது பிடித்து முடித்து விட்டுத்தான் அவன் திரும்புவான் என்பது அவர்களுக்குத் தெரியாது.

அவ்வளவு பேரையும் பசி வேறு வாட்டிற்று. அடி வயிற்றில் ஒரு சுருளல்.

மிண்டாஜி அவர்கள் எங்கே அரண்மனை வீட்டுக்குள் நுழைந்துவிடப் போகிறார்களோ என்கிற பயத்துடனேயே

ஓடிவந்தார். அவர்களும் அவர் வரட்டும் என்றுதான் நின்றிருந்தனர்.

“என்னம்மா... உங்க வீட்டுக்குள்ள நீ இப்ப போகணுமா?” அவர்தான் வந்ததும் வராததுமாகக் கேட்டார்.

“ஆமாம் மாமா... நாங்க வேற எங்க மாமா போக முடியும்?”

“அது எனக்கும் தெரியும்மா. இருந்தாலும் பலபல வருஷம் கழிச்சு வந்த நீ ஒரு துக்க காரியத்தைப் பண்ணின காலோடையா உள்ள போகணும்?”

“மாமா...”

“யோசி துர்கா. வீடு எங்கேயும் ஓடிப்போயிடப் போறதில்லை. பேசாம அவ்வளவு பேரும் என் வீட்டுக்கு வாங்க. நாளைக்கு சிதைக்கு பால் விட்டு, பத்தாநாள் காரியத்தைக்கூட நாளைக்கே செய்துடலாம். பிறகு சுபஸ்வீகாரம் பண்ணபிறகு சுகக் காலோட உள்ளே போகலாமே...”

மிண்டாஜியின் சென்ட்டிமென்டான பேச்சுக்கு நல்ல பலன் கிடைத்தது. அவர்கள் பேசாமல் அங்கிருந்து திரும்பி நடந்தனர்.

துர்காபாய் அடிக்கொரு தடவை திரும்பித் திரும்பிப் பார்த்தாள். அவளது பெண்களும் அவ்வளவு பெரிய வீட்டை தங்கள் வாழ்நாளில் அப்போதுதான் பார்க்கிறார்கள்.

சென்னையில் அவர்களது வீடு ஒரு சாதாரண டபுள் பெட்ரூம் கொண்ட ஆயிரம் சதுர அடியிலான வீடு. நாலு பேர் வந்துவிட்டால் ஒருவர் மேல் பட்டுக் கொள்ளாமல் நடக்கக்கூட முடியாது.

பெரியவள் தேவகிக்கு பிரமிப்பு விலகியிருக்கவே இல்லை.

ஆற்றோரமாகப் போய் தம் பற்றவைத்து இழுத்த சிவாஜிராவ், காரின் பானட் மேல் அமர்ந்திருந்தான். சற்றுத் தள்ளி ஆற்றோர நெல்லி மரத்தில் நெல்லிக்காய் களைக் கல்லால் அடித்து வீழ வைத்துக் கொண்டிருந் தான் போன்ஸ்லே. அப்படியே கை நிறைய நெல்லிக்கா யோடு வந்த போன்ஸ்லே திரும்பி முதுகைக் காட்டிக் கொண்டு அமர்ந்திருந்த சிவாஜிராவின் தோள்மேல் தன் கையை வைத்தான். சிவாஜிராவ் அடுத்த நொடி மின்சாரம் தாக்கியதுபோல 'ஆ' என்று துள்ளிக் குதித்துக் காரைவிட்டு இறங்கி நின்றான்.

"என்னடா... பயந்துட்டியா?"

"ஆமாம் போன்ஸ்லே... ஏண்டா முன்பக்கமா வர மாட்டே..."

"அட! இங்க என்னைத் தவிர யார் இருக்காடா இப்படி பயப்பட்றியே...?"

"அப்படின்னா..."

"அதை நான் உனக்கு எப்படிடா சொல்வேன்?"

"வாயாலதான்..."

"இது ஜோக்கடிக்கற நேரமல்ல போன்ஸ்லே."

"சரிடா... விஷயத்தைச் சொல்லு."

"என்னத்தடா சொல்ல... பாட்டி உடம்புல போட் டிருந்த நகையை புரோகிதர் கழட்டச் சொன்னார்தானே?"

"ஆமாம். அப்பகூட நீ எகிறிக் குதிச்சியே - இங்க இப்ப குதிச்ச மாதிரியே."

“கரெக்ட். அப்ப எனக்கு அங்க என்ன நடந்தது தெரியுமா?”

“என்னடா... பீடிகையெல்லாம் பலமா இருக்கே?”

“பீடிகை இல்லடா... இப்பகூட என்னால அங்க நடந்ததை நம்ப முடியல.”

“என்ன நடந்துச்சு சொல்லு முதல்ல...”

“பாட்டியோட கையில இருந்த காப்பு வளையத்தை நான் கழட்ட முயற்சி செய்தப்போ பாட்டியோட கை விரல்கள் அப்படியே என் கையை இறுக்கிப் பிடிச்சிச்சு போன்ஸ்லே...”

“என்னது. பாட்டி கை உன்னைப் பிடிச்சிச்சா...?”

“பாட்டியோட கண்இமைகூட ஒருதடவை திறந்து மூடினிச்சு.”

“என்னடா... உனக்கு பிரமை கிரமை பிடிச்சிடுச்சா.”

“தெரியும்டா- அடுத்த வார்த்தை உன்கிட்ட இதுவாத் தான் இருக்கும்கறது எனக்குத் தெரியும். ஆனா அனு பவிச்சவண்டா நான்.”

“போடா... நீ பேசறத பார்த்தா பாட்டி உடம்புல உயிர் இருந்துருக்குங்கற மாதிரி ஒரு பொருள் வருது. அப்படின்னா சிதைல வெச்சு தீ வைக்கும்போது பாட்டி எழுந்திருக்கணுமே...”

“நானும் அதை எல்லாம் யோசிக்காம இல்ல போன்ஸ்லே. ஆனா நான் சத்தியமா பொய் சொல்லலைடா...”

“நீ பொய் சொல்றேன்னு நானும் சொல்லலையே. நான் சொல்றேன் அது பிரமைதான்.”

"அது பிரமையா இருந்துட்டா அதுவே போதும்."

"பைத்தியக்காரா… நீ பேசறதப் பார்த்தா உன் பாட்டி ஏதோ ஒருவிதத்துல உன்னைத் தொடர்ந்து வந்து பயமுறுத்துவாங்கங்கற மாதிரில்லடா இருக்கு."

"வேண்டாம் போன்ஸ்லே. நீ புதுசு புதுசா ஏதாவது சொல்லாதே. இப்பகூட நீ என்கூட இருக்கறதாலதான் நான் இங்க இருக்கேன். இல்லேன்னா நிச்சயம் நான் இப்ப இருக்கற மனநிலைக்கு இவ்வளவு தூரம் வந்திருக்க மாட்டேன்."

"சரி… உளறிக் கொட்டினது போதும். புறப்படு. அரண்மனை வீட்டுக்கு இன்னேரம் உன் அப்பா அம்மா போயிருப்பாங்க. நாமளும் போவோம்."

"போன்ஸ்லே…"

"என்னடா?"

"நாம இப்ப அந்த வீட்டுக்கா போகப்போறோம்."

"இந்த ஊர்ல இனி அதுதானேடா உன் வீடு."

"அது என் வீடா இருக்கலாம். ஆனா எனக்கு அங்க வர பயமா இருக்குடா…"

"நான் இருக்கேண்டா. எதுக்கு இவ்வளவு பயம்? நமக்கு அந்த வீட்டுல இனிமேதாண்டா நிறைய வேலை இருக்கு."

"என்னடா வேலை… உள்ள ஒரே வவ்வால் மல நாத்தம்."

"அப்ப அந்த நாத்தத்தைப் போக்க வேண்டாமா?"

"எதுக்கு போன்ஸ்லே… நான் என்ன அப்பா அம்மா அக்காக்களோட அந்த வீட்லையா வாழப்போறேன்?"

"நீ என்ன சொல்லப்போறேன்னு எனக்கும் தெரியும் சிவாஜி. நீங்க அங்க வாழப்போறதில்லை தான். ஆனா அதை விப்பேதானே?"

"விக்கறதா...?"

"என்னடா யோசனை... அது இனி உன் சொத்து. மிண்டாஜி சொன்னது மறந்துபோச்சா? நான் சொன்னதையும் யோசிச்சு பார். விக்கலேன்னாலும் சுத்தம் பண்ணி பெய்ண்ட் அடிச்சு ஷூட்டிங்குக்கு வாடகைக்கு விடலாம். நீ ரெப்ரெசென்டேடிவா மெடிக்கல் பேக்கையே தூக்க வேண்டாம்."

"அவ்வளவு அதிர்ஷ்டமெல்லாம் நான் பண்ணலை போன்ஸ்லே. பண்ணியிருந்தா, பிறக்கும்போதே அந்த அரண்மனையில் பிறந்திருப்பேன். ராஜாமாதிரி வளர்ந்திருப்பேன். இப்படி பாசமே காட்டாத ஒரு பாட்டிக்குக் காரியம் செய்யறதுக்காக வந்திருக்க மாட்டேன்."

சிவாஜி நெஞ்சின் ஆழத்தில் இருந்த துக்கத்தை வார்த்தைகளில் வெளிக்காட்டினான். போன்ஸ்லே சிரித்தான்.

போன்ஸ்லேவுக்கு சோடாபுட்டி கண்ணாடி முகம். அதில் அவன் யாரையாவது பார்த்து சிரித்தால் அது படுகேலியாக மாறி அதிகப்படியாகத் தெரியும்.

சிவாஜிக்கும் அப்படித்தான் இருந்தது. ஆனாலும் அவனது ஆப்த நண்பன். இளம்வயது முதலே பிரியாமல் தொடர்ந்து வந்துகொண்டிருக்கிறான். எனவே அவனது சிரிப்பை சற்று சகித்துக்கொண்டான்.

"சரி சிவாஜி- நீ கிளம்பு நாம இப்ப அங்க போவோம். எவ்வளவு நேரம் நாம இப்படி இங்க இருக்க முடியும்.

விட்டா நீ எட்டாவது சிகரெட்டுக்குப் போயிடுவே. நிஜமா சொல்றேண்டா. ரைஸ்மில் பைப் லைன்லகூட அப்பப்பதான் புகை வரும். ஆனா, உன்கிட்ட அது எப்பவும் வருது. இந்தக் கண்றாவியை எப்படா நீ விடப்போறே?

"இல்லடா. நான் இதை விடப்போறதே இல்லை. சிகரெட்டை ஒரு கொள்ளிக்கட்டைன்னும், நெருப்பு விஷம்னும், வெள்ளைஎமன்னும் பலமாதிரி சொல்லிட்டாங்க. அது உண்மைதான். எப்ப எனக்கு ஆறுதலா நல்ல விஷயங்களே வாழ்க்கைல இல்லைன்னு ஆயிடிச்சோ அப்ப இந்த கெட்ட விஷயம்தான் ஒரு துணையா இருந்துட்டுப் போகட்டுமே?"

"சிகரெட்டை விட முடியலைங்கறத சிம்பதி வர்ற மாதிரி சொல்றையா எனக்கு..."

"நிச்சயமா இல்லடா... என் லைஃப்ல என்னடா இருக்கு? யோசிச்சுப் பார். ரஜினி படத்துல பாடுவாரே-'ராஜா என்பார் மந்திரி என்பார் ராஜ்ஜியமில்லை ஆள்'ன்னு அந்த மாதிரிதானே நானும்? பெரிய ராஜ பரம்பரைன்னு பேர். ஆனா மிஞ்சியிருக்கறது காரை உதிர்ந்த ஒரு இருட்டு மாளிகை. அதுவும் ஒரு கிராமத்துல. இதை வித்தா எத்தனை லட்சம் வந்துடும்? அப்படியே வந்தாலும் அவ்வளவும் என் அக்காக்கள் கல்யாணத்துக்கே சரியாப் போயிடும். அவங்கள்ளாம் கல்யாணம் ஆகிப்போன பிறகுதான் என் கல்யாணத்தையே நான் நினைக்கணும். இதுக்கு நடுவுல மருந்துப் பையோட டாக்டர்களைப் பார்த்து குட்மார்னிங், குட் ஈவ்னிங்னு வழிஞ்சு, ஸ்டீரியோ டைப்பா இங்கிலீஷ் பேசி எங்க கம்பெனியோட தண்ணி மருந்தை டானிக்

குன்னு ஏமாத்தி விக்கணும். இதெல்லாம் ஒரு லைஃப் பாடா?"

சிவாஜி ஒரு மேடைப் பேச்சாளன் போல அடுக்கி விட்டு அப்படியே இன்னொரு சிகரெட்டுக்கு மாறி னான்.

தீப்பெட்டிக்காகப் பாக்கெட்டில் கையை விட்டு துழாவியபோது அதை யாரோ பிடுங்கி எறிந்தது போல் உணர்ந்தான்.

"போன்ஸ்லே சிகரெட்டை ஏண்டா பிடுங்கி எறிஞ்சே?" என்று கோபத்துடன் நிமிர்ந்தான்.

போன்ஸ்லேவோ பக்கத்து ஆற்றில் குனிந்து தண்ணீர் மொண்டு வாய் கொப்பளித்துக் கொண்டிருந் தான்.

'அப்படியானால் சிகரெட்டைப் பிடுங்கிப் போட்டது யார்' திரும்பித் திரும்பிப் பார்த்தான்.

யாருமில்லை. சிகரெட் சற்று தூரத்தில் கீழே கிடந்தது.

அதைப் பார்க்கையில் திரும்பவும் அவன் நெஞ்சக் கூட்டில் ஒரு பயம்!

அது எப்படி அங்கே போய் விழுந்தது. தானாகவா? யாரோ உரிமையோடு பிடுங்கியதுபோல் இருந்ததே? கேள்விகள் மனக்கூட்டில் துள்ளி எழும்போது உள் சத்தம் அதிகமாகிப் புறத்தில் ஒரு அமைதி வந்துவிடு கிறது. போன்ஸ்லேவை அந்த அமைதி ஆச்சரியத் திலாழ்த்தியது. நெருங்கி வந்தான்.

"சிவாஜி..."

"உம்..."

“என்னடா மேடைப் பேச்சாளனாட்டம் பேசிகிட்டிருந்தே. திடீர்னு ப்யூஸ் போன பல்பாட்டம் ஆஃப் ஆயிட்டே!”

“ஒண்ணும் இல்லடா...”

“இந்த இரண்டு சொல்லுக்குள்ள எவ்வளவு அர்த்தம் இருக்கு தெரியுமா... என்ன ஆச்சு?”

“இல்ல... இங்க வந்ததுல இருந்து குறிப்பா பாடியை ஜமீன் பாட்டியோட சடலத்தைப் பார்த்ததுல இருந்தே நடக்கற எதுவும் சாதாரணமா இல்லடா...”

“சாதாரணமா இல்லன்னா...”

“எனக்கு சொல்லத் தெரியல. மீறி நான் எதாவது சொன்னா நீ பிரமைன்னு திருப்பிச் சொல்லிடுவே.”

“சரி. இப்பவும் சொல்றேன் எல்லாம் பிரமைதான். இனி இங்க இருக்க வேண்டாம் கிளம்பு!”

“அந்த அரண்மனை வீட்டுக்கா.”

“வேற இந்த ஊர்ல நமக்கு யார் இருக்காங்க. அது மட்டுமில்ல அந்த வீட்டுல இனி அந்த நகையைத் தேடலாம் இல்லையா?”

“நகை...”

“ஆமாம் நகை. அதுதான் உன் அக்காக்களைக் கரை சேர்த்தாகணும். ஞாபகம் வெச்சுக்கோ.”

“அக்காக்கள் என்ன பாட்டியை நம்பியா பொறந் தாங்க.”

“நீ என்னடா சொல்றே?”

“பாட்டிகிட்ட நகைகள் இருந்துதாங்கறதே எனக்கு இப்ப டவுட்டா இருக்குடா.”

"அப்ப இல்லைங்கறது உன் முடிவா?"

"அப்படித்தான் நினைக்கறேன். தாத்தாவோட சாவுக்குப் பிறகு பாட்டி முப்பது வருஷமா எதை வெச்சு வாழ்ந்திருக்க முடியும். நகைகளை வித்துதானே?"

"அப்ப போன தடவை வந்தப்போ அது பத்ரமா பாட்டிகிட்ட இருக்கு... அதைப்பத்தி பாட்டிக்குதான் தெரியும்னு பேசினதெல்லாம்...?"

"போதும் போன்ஸ்லே... எனக்கு எப்பவுமே ஒரு விஷயத்துல அசைக்கமுடியாத நம்பிக்கை உண்டு. நமக்குக் கிடைக்கணும்னு ஒண்ணு இருந்தா அது கிடைக்காம போகாது. கிடைக்கக் கூடாதுன்னு இருந்தா தலைகீழா நின்னாலும் அது நமக்குக் கிடைக்காது."

"ஏண்டா சிவாஜிராவ்னு பேர் இருந்தாலே தத்து வமா பேசியே தீரணுமா?"

போன்ஸ்லே சிரித்தபடியே பேசிக்கொண்டே அவனையும் இழுத்துக்கொண்டு காரை நோக்கி சென்றான். காரும் சில நொடிகளில் அந்தப் பகுதியை விட்டு நீங்க ஆரம்பித்தது.

# 5

‘வாஸ்து பற்றிய உண்மையை ஒருவர் அறிந்து கொண்ட விதமே அலாதியானது. வாஸ்து பற்றி அறிந்துகொள்ள ஒரு பிரத்யேக ஆர்வமும் முயற்சியும் வேண்டும். மற்ற கலைகளைப் பள்ளிக்குச் சென்று கற்பதுபோல இதைக் கற்றுக் கொண்டுவிட முடியாது. இந்தக் கலையைப் பொருத்தவரை உண்மையான குரு இயற்கைதான். மண்ணையும் இயற்கையையும், குறிப்பாகப் பஞ்ச பூதங்களைப்பற்றி அதிகமாகவும் அடிக்கடியும் எண்ணிப் பார்த்து வியக்கும் ஒருவருக்கு, வாஸ்து வேகமாக வசப்படும்.

முதன்முதலாக வாஸ்து பற்றி அறிந்தவரும் இப்படிப்பட்டவர்தான். அவரது பார்வையில் சில ஆச்சரியமான விஷயங்கள் பட்டன. குறிப் பாக வாழ்வில் எல்லா விஷயங்களிலும் வெற்றி, பணத்தட்டுப்பாடு இல்லாத சூழ்நிலை, பெயர் புகழ் என்று சிறப்பாக உள்ள பத்து பேர்களில் எட்டு பேர்களது வீடுகள் ஒன்றுபோல இருந்தது. அவர்கள் வீடுகளில் ஈசான்ய பாகம் எந்த அடைப்பும் இன்றி தூய்மையாகவும் சூரிய ஒளி பரவும் நிலையிலும் இருந்தது. அந்த மூலையில் அவர்கள் எந்தப் பொருள்களையும் போட்டு குவித்து வைத்திருக்கவில்லை. அதேபோல கன்னி மூலையில் பணப்பெட்டி இருக்க, அங்கு இருந்து

**பணத்தை எடுத்து பயன்படுத்தினர். கன்னி மூலை உயர்ந்தும் இருந்தது. அந்த மூலையின் மேல்தான் தண்ணீர் தொட்டியும் அமைந்திருந்தது. அதே போல வியாதி வயப்பட்டு கடன்பட்டு, மனஅமைதி இழந்தவர்களின் வீடுகளும் பலவித ஒற்றுமை யோடுதான் காணப்பட்டன.'**

*மிண்டாஜி வீடும் நன்கு பெரிய வீடு!*

இந்த கோடிக்கும் அந்த கோடிக்குமாக இருந்தது. அந்தக் காலத்து வீடு. அதில் எல்லாவித வாஸ்து சிறப்பு களும் இருந்தது. குறிப்பாக வீட்டின் மையத்தில் பிரம்ம பாகத்தில் திறப்பு இருந்தது. உச்சிப் பொழுதில் சூரிய வெளிச்சம் நட்டுக் குத்தாக பிரம்ம பாகத்தில் படும். அந்த இடத்தில்தான் மிண்டாஜியின் மனைவி அரிசி, வடாம், அப்பளம் என்று பொருள்களையும் காயப் போடுவாள். மழை பெய்தாலும் நாலுபுறமும் தடதட வென்று அருவிபோல தண்ணீர் வந்துவிழும். அதை எல்லாம் விரயமாகாதபடி பிடித்துக்கொள்ள அந்த நாளைய பித்தளை போவணிகள் மூலைக்கு மூலை இருந்தது.

வெயில் இப்போது அதிகம் அடிப்பதுபோல ஒரு தோற்றம். சூழ்நிலையும் பெட்ரோலிய கலாச்சாரத்தால் ரொம்பவே கெட்டுவிட்டதால் காற்றில் வெப்ப அளவும் அதிகரித்துவிட்டது. இதனால் மிண்டாஜி ஒரு காரியம் செய்திருந்தார். அதன்படி நடுவில் உள்ள திறப்பின் மேல் குறுக்கும் நெடுக்குமாக இரும்புக் கம்பி கட்டி அதன்மேல் ஆஸ்பெஸ்டாஸ் கூரை வரும்படி செய்து விட்டார். இதனால் உள்ளே குளுகுளு என்று இருந்தது.

அதேசமயம் பகல் பொழுதிலேயே மின்சார விளக்கைப் போட்டுக்கொள்ள வேண்டிய ஒரு கட்டாயமும் ஏற்பட்டுவிட்டது.

மிண்டாஜிக்கு ருக்மணி என்று ஒரு மனைவி. ராதாமணி என்று ஒரு மகள்! ராதாமணிக்கு பன்னி ரெண்டு வயதில் ஒரு மகள். அவள் பெயர் பிருந்தா. ராதாமணி எதனாலோ கணவனுடன் இல்லை. தன் மகளுடன் தாய் வீட்டுக்கே வந்துவிட்டாள். பல கால மாக அவள் மிண்டாஜியுடன்தான் இருக்கிறாள்.

இதெல்லாம் எதுவுமே சிவாஜிராவின் தாயான துர்காபாய்க்கோ அவள் மகள்களுக்கோ தெரிந்திருக்க நியாயமில்லை. அவர்களும் சேதுபதியுடன் மிண்டாஜி வீட்டுக்கு வந்தபோது அவர்களை எல்லாம் பார்க்க ராதாமணிக்கு என்னவோ போல் ஆகிவிட்டது. வெறித்துப் பார்த்துவிட்டு அவள் எப்பொழுதும் அடங்கிக் கிடக்கும் அறைக்குள் போய் கதவைத் தாழிட்டுக் கொண்டாள். அது துர்காபாய்க்குக் கொஞ்சம் அதிர்ச்சியாகத்தான் இருந்தது. தன் கணவனையும் மகள்களையும் 'நாம் போய்விடலாமா' என்பதுபோல திரும்பிப் பார்த்தாள். ஆனால் மிண்டாஜி விடவில்லை.

"துர்காபாய்... தப்பா எடுத்துக்காதே. அவ என் பொண்ணு ராதா. அவளுக்குக் கொஞ்சநாளாவே மனக்குழப்பம். சமயத்துல இப்படித்தான் நடந்துப்பா. நீங்க உள்ற வாங்க" என்று ஒரு பெரிய அறைக்கு அழைத்துப் போனார். அந்த அறை மிக நவீனமாக இருந்தது. டி.வி., ஏசி, மின்விசிறி, ஃப்ரிட்ஜ் என்று அங்கே ஒரு குறையுமில்லை. ஒரு கட்டிலுக்கு நான்கு கட்டில்கள். வெஸ்டர்ன் டாய்லட். அதில் ஆளுயரக்

கண்ணாடி என்று ஒரு ஸ்டார் ஹோட்டல் அறைபோல இருந்தது.

எல்லோருமே பிரமித்தனர்.

"இங்க தங்கிக்கோம்மா. இது நான் உங்களைப் போல விருந்தினர்கள் வந்தா தங்கறதுக்குன்னே கட்டின அறை. இங்க நீங்க ஓய்வு எடுங்க. நான் சாப்பாட்டுக்கு ஏற்பாடு பண்ணிட்டு வந்து பாக்கறேன்" என்று கூறிவிட்டு விலகிக் கொண்டார்.

மூத்தவள் தேவகி ஓடிப்போய் மின்விசிறி ஸ்விட்சைப் போட்டாள். இரண்டாமவள் பாரதி கட்டிலில் போய் அப்பாடா என்று விழுந்தாள். மூன்றாமவள் வித்யா பாத்ரூம் போய் கதவைச் சாத்திக் கொண்டாள். நான்காமவள் நளினி டிவி. போட்டு ரிமோட்டை கையில் எடுத்துக் கொண்டாள்.

சேதுபதியும் துர்காபாயும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

"இந்த சிவாஜி எங்க போனான்னே தெரியலையே" என்று சேதுபதி முனங்க, அறை ஜன்னல் கதவைத் திறந்தாள் துர்காபாய்.

வெளியே அவள் ஓடி விளையாடிய நீண்ட தெரு. அவ்வளவாய் அதில் மாற்றமில்லை. போஸ்ட் மாஸ்டர் வீட்டு முன்னால் பெரிய மாமரம்! அதில் கிளைகள் கூடியிருந்தது. கிட்டாமணி அய்யர் வீட்டு திண்ணை முன்பு திறந்தவெளியாக இருக்கும். இப்போது அதன் மேல் ஒரு தகரக்கூரை மட்டும் முளைத்திருந்தது. பாலுக்கோனார் மாடு கட்டும் இடத்தில் புதிதாக வேப்பமரம் வளர்ந்திருந்தது. மாடுகளைக் காணவில்லை.

துர்காபாய் கூர்ந்து கவனித்தாள். சேதுபதியும் அதே ஊர்தானே? அவரும் பார்த்தார். அவருக்குள்ளும் அவளைப் போலவே நினைவுகள்.

"துர்கா..."

"உம்..."

"என்ன பாக்கறே?

"எவ்வளவு வருஷமாச்சு. அதான் பாக்கறேன்."

"ஊர் ஒண்ணும் அவ்வளவா மாறிடலை. எல்லோரும் ஆசையா வந்து பேசினாங்க கவனிச்சியா?"

"கவனிச்சேன். அப்படியே இனி என்ன பண்ணப் போறீங்கன்னும் கேட்டாங்களே. அதை நீங்க கவனிச்சீங்களா?"

"சிவாஜி வரட்டும். பேசுவோம்."

அவர் மகனைப் பற்றிக் குறிப்பிட தெருவில் போன்ஸ்லேவின் மாருதி கார் நுழைந்து கொண்டிருந்தது.

"போன்ஸ்லேயும் சிவாஜியும் வராங்க பார்."

"வரட்டும் நாமளும் ரொம்ப இங்க இருக்க வேண்டாம். எனக்கு எப்ப காரியம் முடியும்னு இருக்கு."

"எதுக்கு அவசரப்பட்றே?"

"அரண்மனை வீட்டுக்குள்ற போக ஆசையா இருக்குங்க"

"என்னைக் கேட்டா, உள்ள போகாம எதையும் பார்க்காம நாம திரும்பிப் போயிட்றது ரொம்ப நல்லதுன்னு மிண்டாஜி மாமா சொன்னார். நீ கேட்டியா?"

"உம்..."

"அவர் சொல்றதுலையும் அர்த்தம் இருக்கு. உள்ள அவ்வளவு ஓட்டை உடைசல்!"

"இருக்கட்டுமே. அது நான் பொறந்து வளர்ந்த வீடு. அதைப் பார்க்காம நான் வரமாட்டேன். அப்புறம் அம்மா கனவுல சொன்னது என் காதுலையே இருக்கு."

"என்ன அந்த நகைப்பெட்டியா?"

"ஆமாங்க."

"எனக்கு நம்பிக்கை இல்லை துர்கா."

"என்ன சொல்றீங்க..."

"உங்கம்மா பத்ரமா வெச்சிருந்துருப்பாங்களான்னு ஒரு கேள்வி எனக்குள்ள ஓடிகிட்டேயிருக்கு."

"கனவுல சொன்னதை நான் நம்பறேங்க."

"அந்தக் கனவையே நான் ஒரு தற்செயல் விஷயமாத் தான் பாக்கறேன் துர்கா."

இருவரும் மெல்ல குடும்ப விஷயத்தில் மூழ்கிடும் போது அறைக்கதவைத் திறந்துகொண்டு மிண்டாவுடன் சிவாஜியும், போன்ஸ்லேயும் வந்தனர்.

"சிவா..."

"அம்மா..."

"எங்கடா போயிட்டே. எதுக்கு இப்படி கால்ல சக்கரத்தோட சுத்துறே?"

"அட நீ ஒண்ணும்மா. இந்த ஊர்ல சுத்த எங்கம்மா இருக்கு இடம்?"

அவன் சலித்துகொள்ள மிண்டாஜி குறுக்கிட்டார்.

"துர்காபாய்... உங்க சண்டையெல்லாம் அப்புறம். சமையல் ஆயாச்சு. எல்லாரும் கைகால் கழுவிகிட்டு சாப்பிட வாங்க."

"மிண்டா மாமா உங்களுக்கு ரொம்ப சிரமம் கொடுத்துட்டோம்" என்று துர்காபாயும் சம்பிரதாயமாக வருத்தப்பட்டாள்.

"அதெல்லாம் எதுவுமில்லை துர்கா. இது என் கடமை! உன் குடும்பத்துக்கு இந்த ஊரே கடமைப்பட்டிருக்கு. அதுல நானும் ஒருத்தன். சரி சரி சாப்பிட வாங்க..."

மிண்டாஜியின் தூண்டுதல் அடுத்த பத்தாவது நிமிடமே வேலை செய்தது. அவர் வீட்டு கூடத்தில் தையல் இலை போடப்பட்டு அதில் ஆவி பறக்க அரிசி உப்புமாவையும் புளிக்குழம்பையும் விட்டாள் மிண்டாஜி மனைவியான ருக்மணி.

அவர்களுக்கிருந்த பசிக்கு உப்புமா வாசனையும், குழம்பு வாசனையும் தூள் பறந்தது.

அள்ளி அள்ளி விழுங்கினார்கள்.

சேதுபதி மட்டும் அளவாகத்தான் சாப்பிட்டார். அதுவே அவர் ஒரு பேஷண்ட் என்று மிண்டாஜிக்குக் காட்டிற்று.

"சேதுபதி... என்ன வயிறு சுருங்கிடிச்சா?"

"ஆமாம் மிண்டா- அதோட நான் இப்ப ஒரு ஹார்ட் பேஷண்ட்."

"அடடா- அப்ப உடம்பை கவனமா பார்த்துக்குங்க."

"கவனமாதான் இருக்கேன். குறைஞ்சபட்சம் இதோ இந்த நாலு பெண்களைக் கரை சேர்க்கற வரையிலு மாவது உயிரோட இருக்கணுமில்லியா?"

"அது வாஸ்தவம்தான். கவலைப்படாதீங்க. இன்னும் அம்பது வருஷத்துக்கு உங்களுக்கு ஒரு குறையும் வராது."

மிண்டாஜியின் பெருந்தன்மையான பேச்சு துர்கா பாய்க்கு நெகிழ்ச்சியாக இருந்தது.

"மாமா... நேத்து இந்த நிமிஷம் நான் இங்க இருப் பேன்னு நினைக்கல. ஆனா இன்னிக்குப் பாருங்க."

"வாஸ்தவம்தாம்மா... வாழ்க்கைல எது எப்ப நடக்கும்னு யாரால சொல்ல முடியும்? எப்படியோ இன்னிக்காவது நீ வந்தாயே..."

"வந்தும் பிரயோஜனமில்லையே மாமா... அம்மாவைப் பிணமாதானே பார்க்க முடிஞ்சுது."

"ஆமாம்மா... நானும் சிவாஜியோட போனபோது ஜானாபாய் நிச்சயம் உயிரோட இருப்பாங்கன்னுதான் நினைச்சேன். ஆனா, தூக்கத்துலையே உயிர் போயிடிச்சு."

"மாமா... அம்மாவை நீங்க கடைசியா எப்ப பார்த் தீங்க... எங்களைப்பத்தி எதாவது பேசினாங்களா?"

"நேத்துகூட பார்த்தேனே... கிட்டத்தட்ட பத்து வருஷமா ஜானாபாய்க்கு அந்த ரூம்தான் எல்லாம். வெளியவே வர்றது கிடையாது. ருக்மணிதான் தினமும் கஞ்சி போட்டுக்கொண்டு போய் கொடுத்திட்டு வருவா."

"நேத்து திடீர்னு கனவுல வந்துட்டாங்க. வந்து என் கையைப் பிடிச்சுகிட்டு ஒரே அழுகை. நீ உடனே வா. உன்கிட்ட நான் நகைப்பெட்டியை ஒப்படைக்கணும். என் உயிர் போயிடப் போகுதுன்னு. இப்படி ஒரு கனவு இதுவரை எனக்கு வந்ததே இல்லை மாமா."

"தான் ஆடாவிட்டாலும் சதை ஆடும்கறது இதுதான் துர்கா. உன் அம்மாவுக்கு தன் உயிர் போகப்போறது தெரிஞ்சிருக்கு. அதான் உன் கனவுல வந்துருக்காங்க."

மிண்டாஜி அருகில் உள்ள கட்டிலில் அமர்ந்து கொண்டு, ஒரு நெடிய கேள்வி பதிலுக்குத் தயாராகி விட்ட மாதிரிதான் தெரிந்தார்.

போன்ஸ்லே அவரையே.வெறித்துக் கொண்டிருந் தான். அவனை மூத்தவள் தேவகி நடுநடுவே பார்த்து லேசாக சிரித்துக் கொண்டிருந்தாள்.

இருவருக்குள்ளும் ஒரு ரகசிய ஓட்டம் இருப்பது துர்காவுக்கும் தெரியும். ஒருநாள் வெடித்துக்கொண்டு வரும்போது பார்த்துக்கொள்ளலாம் என்பது அவள் எண்ணம். சிவாஜிராவுக்கும் போன்ஸ்லே தன் நண்பன் மட்டுமல்ல தன் வீட்டுக்கு மாப்பிள்ளையாக வரப் போகிறவன் என்பது தெரிந்த விஷயம். எனவேதான் அவனது எந்த ஒரு ஈடுபாட்டையும் அவனால் அதிகப் பிரசங்கமாக எடுத்துக்கொள்ள முடியவில்லை.

மிண்டாஜியிடம் அவனுக்குக் கூட ஒரு கேள்வி இருந்தது.

“மிண்டா மாமா! உங்களை ஒரு கேள்வி கேட்டா தப்பா எடுத்துக்கமாட்டீங்களே...” என்று அவனும் அவரைத் தன் பக்கம் திருப்பினான்.

“என்ன போன்ஸ்லே...”

“பாட்டியோட நகைகள்ளாம் பத்ரமாதானே இருக்கு?”

“நகைகளா?”

“ஆமாம்... பாட்டிகிட்ட ஆயிரக்கணக்கான பவுன் நகை இருந்ததா கேள்விப்பட்டிருக்கேன். வைர அட்டிகை, தங்க ஒட்டியாணம், மாணிக்க ஜடை பில்லைன்னு...”

"எனக்குத் தெரியாது போன்ஸ்லே. நான் பார்க்க பாட்டிகிட்ட ஒரு பத்து பதினைஞ்சு பவுன் இருந்திருந்தா அதிகம்."

"என்ன மாமா... அரண்மனை ஹால்ல பாட்டியும் தாத்தாவும் நிக்கற ஒரு போட்டோ படத்தைப் பார்த் தாலே அவங்க எவ்வளவு நகை போட்டிருந்தாங்கங்கறது தெரிஞ்சிடுமே..."

"உனக்கு ஒரு விஷயம் தெரியலை போன்ஸ்லே. அதெல்லாம் தாத்தா இருந்தப்பவே போயிடிச்சு."

"என்ன மாமா சொல்றீங்க. தாத்தா அதை எல்லாம் வித்துட்டாரரா என்ன?"

"பின்ன. அவர் சீட்டாடாத நாள் கிடையாது. அதுல அவர் காடு கரைன்னு எவ்வளவு இடங்களை விட்டார் தெரியுமா?"

மிண்டாஜியிடம் இருந்து முதல் தடவையாக நெஞ்சு அதிரும் செய்திகள் அணிவகுக்க ஆரம்பித்தது.

"நிஜமாவா?"

"அவ்வளவு ஏன்? இப்ப இருக்கற வீட்டு மேலையே பல லட்சத்துக்குக் கடன் இருக்கு."

"மாமா..."

உண்மைப்பா... பாட்டிக்குக் கடைசிவரை கஞ்சி யாவது கிடைக்க வேற வழி..."

"அப்ப அந்த வீடு சிவாஜிக்கு சொந்தமில்லையா?"

"சிவாஜிக்குதான் சொந்தம். உயில் அப்படித்தான் சொல்லுது. ஆனா சொத்துக்கு சொந்தக்காரன்தானே கடனுக்கும் பொறுப்பெடுத்துக்கணும்."

"அப்ப கடன் வாங்கும்போது பேரனுக்கு தெரிவிச்சிருக்கணுமே."

"நான் சொல்ல நினைப்பேன். ஆனா, உன் பாட்டி தடுத்துடுவாங்க. இருந்தாலும் பின்னால பிரச்சினை வந்துடக்கூடாதுன்னுதான் நான் உங்களுக்கு போன் பண்ணி அப்பப்ப வந்து பாத்துட்டாவது போகச் சொன்னேன்."

"என்ன மாமா நீங்க... உங்களுக்கு இந்த சொத்தாவது மிச்சம் இருக்கறதா நான் நினைச்சுகிட்டிருக்கேன். நீங்க சொல்றத பார்த்தா இதுகூட மிஞ்சாது போல இருக்கே..."

"ஆமாம்ப்பா- மொத்தமா எனக்குத் தெரிஞ்சு பதினேழு லட்ச ரூபா கடன் இருக்கு. ஆனா, அரண்மனையை மதிப்பு செய்த செட்டியார் ஒருத்தர் பத்து லட்சத்துக்குத் தான் போகும்னார்..."

மிண்டாஜி சொல்ல சொல்ல மயக்கமே வந்து விட்டது. போன்ஸ்லேயும்ம சிதறியது போலதான் உணர்ந்தான். மிண்டாஜி தொடர்ந்து சொல்லிக் கொண்டே போனார்.

"துர்காபாய்... உண்மைய சொல்றேன். உன் அம்மா சாவுக்கு இப்படி நீங்கல்லாம் சேர்ந்து வருவீங்கன்னு நான் துளிகூட எதிர்பார்க்கலை. ஏன்னா உன் அம்மா கடைசிவரை உன்மேல வெறுப்போடதான் இருந்தா... அவளுக்கு பேரன் வந்து காரியம் பண்ற ஒரு நிலை உருவாகும்னு நானே கனவுல கூட நினைக்கல..." என்ற மிண்டாஜி சற்று கேப் விட்டார்.

அவர்களோ அரிசி உப்புமாவையும் புளிக்குழம் பையும் மறந்தே போய்விட்டிருந்தனர். நடுவில் மிண்டாஜி

யின் மகள் ராதாபாய் அந்த அறைக்கதவைத் திறந்து கொண்டு எட்டிப் பார்த்தாள். முன்பு பார்த்தமாதிரி அவள் இல்லை. பளிச்சென்று பொட்டு, புடவை, கழுத்தில் சிகப்புக் கற்கள் மின்னும் ஒரு நெக்லஸ் என்று அவளிடம் ஆடம்பரம் தெரிந்தது.

எட்டிப் பார்த்தவள் மிண்டாவைப் பார்த்து மராட்டி பாஷையில், "அப்பா நான் தஞ்சாவூர் போய் அவரைப் பத்தி ஏதாவது தகவல் தெரிய வந்ததான்னு ஆபிஸ்ல விசாரிச்சுட்டு வரேன்..." என்று அவர் பதிலை எதிர் பார்க்காமல் திரும்பிப் போனாள். மிண்டாவிடமும் அந்த நொடியில் ஒரு தடுமாற்றம் தெரிந்தது. யார் கவனித்தார்களோ இல்லையோ போன்ஸ்லே அதை கச்சிதமாகக் கவனித்தான்.

"என்ன மாமா... உங்க பொண்ணு எங்க போறேங் கறா?" என்று மிண்டாவைக் கிண்டிவிட்டான்.

"அதை ஏன் போன்ஸ்லே கேக்கறே... அவளோட புருஷன் தஞ்சாவூர்லதான் இருந்தான். திடீர்னு அவனுக்கு தலைல அடிபட்டு சித்தம் கலங்கிப்போச்சு. ஒருசமயம் நல்லவிதமா பேசுவான். ஒரு சமயம் யார் நீன்னு கேப்பான். நாளாக நாளாக அவன்கிட்ட நிறையவே மாற்றங்கள். டாக்டர்கிட்ட காட்டிப் பார்த் தோம். டாக்டர்கள் ஏதேதோ மருந்து கொடுத்தாங்க. ஆனா பெருசா ஒண்ணும் மாற்றம் இல்லை. அதேசமயம் அவன் எங்காவது காணாம போயிடுவான். கொஞ்சநாள் கழிச்சு திரும்பி வருவான். அவன் அப்படிக் காணாம போகும்போதெல்லாம் என் மகள் இங்க என்கிட்ட வந்துடுவா. அப்பப்ப தஞ்சாவூர் போய் அவன் வேலை பாக்கற ஆபிசுக்குப் போய் அவன், நண்பர்கள்கிட்ட

அப்புறம் மாப்பிள்ளை வீட்டார்கிட்ட வந்துட்டா னான்னு... கேட்டுட்டு வருவா... அதான் இன்னிக்கு அவ தஞ்சாவூர் புறப்பட்டுப் போறா..."

"மாமா... உங்க பெண் வ்ாழ்க்கைல இப்படி ஒரு சோகமா?"

"என்ன போன்ஸ்லே பண்றது... எல்லாம் என் தலை எழுத்து" மிண்டாஜி இழுத்து ஒரு பெருமூச்சு விட துர்காபாய்க்கு கண்ணிரண்டும் கலங்கிவிட்டது. சேது பதியும் "அடடா..." என்று கலங்கினார்.

"ச்சே நான் சுத்த மோசம்... சோகமான கெட்ட விஷயங்களையா சொல்லி உங்களைச் சரியா சாப்பிட விடாம பண்றேன். நீங்க சாப்பிட்டு முடிங்க. ராத்திரி விவரமாப் பேசுவோம்; நான் அந்த செட்டியாரையும் வரச் சொல்லியிருக்கேன்" என்று முத்தாய்ப்பாக ஒரு பஞ்ச்சையும் வைத்துவிட்டுப் போனார்.

செட்டியாரை வரச்சொன்ன விஷயம் மட்டுமே போன்ஸ்லேயைக் கொஞ்சம் நெருடியது! அதேபோல புருஷனைத் தேடிப்போகும் ராதாபாய் ஏதோ கல்யா ணத்துக்குப் போவதுபோல போனதிலும் கூட நெரு டல்கள்! அந்த நெருடல்களை முகத்தில் தேக்கிக் கொண்டு சிவாஜிராவைப் பார்த்தான். அவனோ உப்புமாவை அள்ளி விழுங்குவதில் முனைப்பாக இருந்தான்.

போன்ஸ்லேவுக்கு தலையில் அடித்துக்கொண்டு அழலாம் போலிருந்தது.

# 6

'ஒரு நல்ல வாஸ்து நிபுணனுக்கு ஒருவரின் ஜாதகக் கட்டங்கள் வேறு, அவர் வசிக்கும் வீடு வேறு இல்லை. ஜாதகக் கட்டங்கள் அப்படியே வீட்டிலேயும் எதிரொலிக்கும். ஜாதகக் கட்டத்தில் ஒன்பது கிரகங்கள் அவர் ஜனித்த வேளையின் போது எங்கே எப்படி இருந்தார்கள் என்பதைக் காட்டும். அவர் வாழும் வீடோ அவருடைய அப்போதைய தசாபுத்தி, அந்தரம் இவைகளை ஒவ்வொரு நாளும் எதிரொலித்தபடி இருக்கும்.

ஒரு மனிதனை கிரகங்கள் ஆட்டிப் படைப்பது இருவிதத்தில். ஒன்று அவன் வாழும் வீட்டுக்குள்; அடுத்து அந்த வீட்டுக்கு வெளியில்! இதில் வெளியில் எனும்போது கிரகங்கள் உலகில் ஒருவன் எங்கே இருக்கிறானோ அந்தப் பகுதியில் அவனைச் சுற்றியுள்ள மனிதர்களின் கிரக இயக்கங் களையும் சார்ந்தே செயல்பட்டாக வேண்டும். வீட்டுக்குள் எனும்போது அதன் செயலாக்கம் துல்லியமாக ஒரு கட்டுக்குள் அடங்கி இருக்கும். எனவேதான் வீடு முக்கிய இடத்தைப் பெறுகிறது.

சிலர் விபத்தில் அடிபட்டு வீதியில் உயிரை விடுவார்கள். இந்த உயிரிழப்புக்குப் பின்னால் விபத்தை ஏற்படுத்தியவர் என்று சிலர் இருப்பார் கள். ஆனால் வீட்டுக்குள் ஒருவர் உயிரை விடும்போது அது பெரும்பாலும் இயற்கை

**யாகவோ இல்லை தற்கொலையாகவோ இருக்கும். எனவே ஒரு மனிதனை ஆட்டி வைப்பதில் முதலில் வீடே பெரும்பங்கு வகிக்கிறது. அடுத்து அவன் வாழும் ஊர், அவன் சார்ந்து பிழைக்கும் மக்கள் கூட்டம் என்று ஒவ்வொன்றாக வந்து இணைந்துகொள்கின்றன!'**

*கல்மண்டபத் தோட்டம்! ஜானாபாயின் சடலம் கட்டைகளின் நெருப்பைக் கடந்து அவளது தேகத்தைப் பற்றி உடம்பின் அவ்வளவு கொழுப்பையுமே நெய்யாகக் கருதி உறிஞ்சி திகுதிகுவென எரிந்தது.*

ரேணியன் அருகிலேயே இருந்தான். அவனுக்கு ஒரு எட்டு முழ வேட்டி, பத்து படி நெல், நூத்தி எட்டு ரூபாய் பணம், இது போக ஒரு ஐம்பொன் சொம்பு என்று அந்த நாளைய சம்பிரதாயப்படியே பிணம் எரிப்பதற்கான சன்மானம் வழங்கப்பட்டிருந்தது.

*அதை எல்லாம் கல்மண்டபத்தில் வைத்துவிட்டு சிதை நெருப்பை சிலுப்பி விடுவதற்காக ரேணியன் சிதைக்கு அருகே வந்திருந்தான். இந்தப் புலையர்களுக்கு பீடியும் சிகரெட்டும் ஒரு சாதாரண பழக்கம். கூடவே சிலர் ஏராளமாய் சாராயமும் குடிப்பார்கள். அப்பொழுதுதான் அவர்களால் சிதையின் அருகே தன்னை மறந்து செயல்பட முடியும்.*

ரேணியனும் கொஞ்சம் போதையில்தான் இருந்தான். சமயங்களில் சிதை எரியும்போது, சில பிணங்களின் உடம்பின் கொழுப்பு வேகமாக எரிபட்டு எலும்புக்கூடு மடங்கிச் சுருங்கும். அப்போது சடலம்

அசைவது போலவே இருக்கும். சில சடலங்கள் காலை நீட்டி பாட்டிகள் அமர்ந்து கொண்டிருப்பது போலவே அமர்ந்தபடியும் எரியும். இதெல்லாம் மிக சகஜம். ஆனால் இதற்கெல்லாம் மாறாகச் சிதை மேடையில் இருந்த ஜானாபாய் சடலம் உயிருள்ள உடம்பு துள்ளி எழுந்து ஓடத் தொடங்கிவிட்ட மாதிரி மேனி முழுக்க நெருப்போடு விருட்டென்று எழுந்தே நின்றுவிட்டது.

ரேணியனுக்குக் கைகாலெல்லாம் வெலவெலத்துப் போனது. இப்படி நிற்கும் ஒரு காட்சியை அவன் தன் ஆயுளில் பார்த்ததில்லை. கண்கள் அகண்டு தெறித்து விடுவதுபோல அவன் அந்தக் காட்சியைப் பார்க்க, அந்த எரியும் சடலமும் மேடையில் இருந்து ஒரே குதியாய் குதித்தது.

“ஐயோ” ரேணியன் கைத்தடியைக் கீழே போட்டு விட்டு பின்னால் விழ, குதித்த சடலம் குடுகுடுவென்று பின்னால் உள்ள செவ்வக நீராழி நோக்கி ஓடி அதன் படிகளில் இறங்கி, அப்படி இறங்கும்போது தடுமாறி கீழே விழுந்து உருண்டு பிரண்டு கீழே உள்ள நீர் நிலையில் போய் விழுந்து மொத்த உடம்பின் நெருப்பும் அணைந்தும் போய் அங்கேயிருந்து அவிந்த புகையானது ஜிவ்வென்று வானில் எழும்பத் தொடங்கியது.

அதைப் பார்த்த ரேணியனுக்கு மயக்கமே வந்து விட்டது!

**செ**ட்டியார் கார் மிண்டாஜி வீட்டு முன் தேங்கி நின்றது. ஒரு பக்கம் போன்ஸ்லேயின் மாருதி, அதை ஒட்டியே செட்டியாரின் காரும் உரசிக் கொள்ளாத குறையாக நின்றது.

1980-ஆம் வருஷத்து அம்பாஸிடர் கறுப்பு கலர் கார். ஆனால் பளபளப்பு குறையாமல் பளிச்சென்று இருந்தது. செட்டியாரின் ராசியான கார் அது! செட்டியார் வந்துவிட்டது தெரிந்து ஓடிவந்தார் மிண்டாஜி.

"வாங்க செட்டியார்... வாங்க... வாங்க..." என்று வாய்கொள்ளாதபடி வரவேற்று உள்ளே அழைத்துச் சென்றார்.

ஹாலில் ஒரே ஒரு டியூப் லைட் வெளிச்சம்.

அங்கே சில நாற்காலிகள் போடப்பட்டிருக்க அதில் சேதுபதியும் துர்காபாயும் அமர்ந்திருந்தனர். அவர்களது பெண்கள் உள்ளே தனியறையில் டி.வி.யில் மலர்கள் சீரியல் பார்த்துக் கொண்டிருந்தனர்.

சிவாஜிராவும், போன்ஸ்லேயும் வெளியே போய் விட்டிருந்தனர்.

மிண்டாஜி சேதுபதியையும் துர்காபாயையும் செட்டியாருக்கு அறிமுகம் செய்து முடித்தார். துர்கா பாய்க்கு செட்டியாரை அறிமுகம் செய்தார்.

"துர்கா... செட்டியாருக்கு வலங்கைமான் சொந்த ஊர். ஏராளமான வயல் தோட்டம் துறவுன்னு கைராசியான நபர். லேவாதேவியும் இவரோட உபதொழில். கூடவே நல்ல இடமா வந்தா அதை வாங்கி விக்கற வேலையும் செய்யறவர். நீங்க வந்துருக்கறது தெரிஞ்சு நான்தான் செட்டியாரை வரச்சொன்னேன்."

"அது சரி மாமா... செட்டியார் இப்ப எதுக்கு?"

சேதுபதிக்கு நிஜமாலுமே எதுவும் தெரியவில்லை. என்ன சேதுபதி நீங்க விடிய விடிய கதை கேட்டும்

சீதைக்கு ராமன் சித்தப்பாங்கற மாதிரி இருக்கே உங்க கேள்வி..."

"நிஜமா புரியல மாமா..."

"அட என்ன துர்காபாய் நீயும்.. அந்த அரண்மனை வீட்டை வித்தாதானே பணம் வரும். அப்படிப் பணம் வந்தாதானே கடனை அடைக்க முடியும்?"

"இது சம்மந்தமாக முடிவு செய்ய வேண்டியது சிவாஜிதானே! அதோட கடன் அது இதுன்னு நீங்க சொல்றது எங்களுக்கு ஆச்சரியமா இருக்கு. அதுக்கெல்லாம் என்ன ஆதாரம்?"

சேதுபதி ஆதாரம் கேட்பார் என்று தெரிந்தே என்னவோ கையிலேயே ஒரு ஃபைல் வைத்திருந்தார். அதைத் திறந்தார். அதில் வரிசையாக பிராமசரி நோட்டுகள். அவ்வளவிலும் ஜானாபாய் கையெழுத்து. ஒரு பத்திரத்தை வாங்கிப் படித்த சேதுபதிக்கு முகம் மாறிப் போனது.

"என்னங்க?"

"அறுபதாயிரத்துக்குக் கல்மண்டபத் தோட்டம் மேல கடன் வாங்கியிருக்காங்க உங்கம்மா... விவரம் தெளிவா இருக்கு. அதுக்கு இரண்டு வட்டி போட்டுக்கலாம்னும் இருக்கு."

"அது மட்டுமில்ல சேதுபதி. என் கையில இப்படி பதினேழு லட்ச ரூபாய்க்கு பிராமசரி நோட்டு இருக்கு. அவ்வளவுபேரும் என்னை நம்பிதான் கடன் கொடுத்திருக்காங்க."

செட்டியாரும் சம்மதிப்பதுபோல வாயைத் திறந்தார்.

"ஆமா தம்பி. நானே அஞ்சாறு லட்ச ரூபா கொடுத்திருப்பேன். அதனாலதான் அந்த வீட்டை நானே எடுத்துக்கலாமேன்னு வந்திருக்கேன். இத்தனைக்கும் எனக்கு ஏராளமான வீடுங்க. தோட்டம் துறவுங்க இருக்கு. இருந்தாலும் அந்தக் காலத்து வீடுன்னு ஒண்ணு இருக்கட்டுமேன்னுதான் மிண்டாஜி கேட்டப்போ சரின்னு சொன்னேன்."

செட்டியாரும் தன் பங்குக்குப் பேச, சேதுபதி துர்காபாயைத்தான் வெறித்தார். அவளிடம் தடுமாற்றம்.

"என்ன துர்காபாய். உன் தலைல கடன் மொத்தமா விழுந்துடுமோன்னு பயப்படாதே. பத்து லட்ச ரூபாதான் அந்த வீடு போகும்னாலும் செட்டியார் எவ்வளவு கடன் இருக்கோ அவ்வளவுக்கு அதை எடுக்கச் சொல்லிக் கேள். செட்டியார் நல்ல மனுஷன்மா கேப்பார்."

"இல்ல மாமா. அம்மா உடம்பு இன்னும் முழுசா எரிஞ்சு முடிச்சிருக்காது. அதுக்குள்ள அரண்மனை வீட்டை விக்கறதைப்பத்திப் பேசறது எனக்குச் சரியா படலை."

"எனக்கும் சங்கடமாதாம்மா இருக்கு. ஆனா கடன்காரங்க துடிச்சிகிட்டு இருக்காங்க. நான்தான் ஜானாபாய்கிட்ட சொல்லி, அவங்க உயிரோட இருக்கும் போதே அந்த வீட்டை வித்து கடனை அடைக்க முயற்சி செய்தேன். அப்பதான் சொத்தை அனுபவிக்கற உரிமை மட்டும்தான் ஜானாபாய்க்கு இருக்குங்கற விஷயம் எனக்குத் தெரியும். எல்லாம் உன் அப்பா செய்துட்டுப் போன விஷயங்கள்னு அப்புறமாத்தான் தெரிஞ்சுது."

மிண்டாஜியின் வருத்தமான பேச்சுக்கு நடுவில்.

"ஆண்டே ஆண்டே" என்று அலறலான குரல். ரேணியன்தான் தெருவில் நின்றுகொண்டு கத்தினான். எட்டிப் பார்த்த மிண்டாஜிக்கும் பதைப்பு; வெளியே ஓடினார்.

"ஆண்டே... ஆண்டே..."

"என்னடா?"

"எப்படி ஆண்டே அதை நான் சொல்வேன். ராணிம்மா உடம்பு கட்டையோட போட்டு எரிக்கும்போது எழுந்து ஓடினிச்சிங்க."

"என்னடா உளர்றே..."

"ஐய்யோ ஆண்டே வந்து பாருங்க. உடம்பு எழுந்து ஓடி பக்கத்துல நீராழி கிணத்துல கிடக்குதுங்க."

அவன் சொன்னது மிண்டாஜியை மட்டுமில்ல பின்னாலேயே ஓடிவந்த துர்காபாய், சேதுபதி என்று எல்லோரையுமே அதிர்ச்சியில் ஆழ்த்தியது. கச்சிதமாக போன்ஸ்லேயும், சிவாஜிராவும் கூட வந்து சேர்ந்தனர்.

மிண்டாஜி மலங்க மலங்க அவனைப் பார்த்தார்.

"ஆண்டே சொல்லுங்க ஆண்டே நான் இப்ப என்ன பண்ணட்டும்? நான் நூத்துக்கணக்கான பொணங்களை எரிச்சவன். ஒரு பொணம் எரியும்போது எழுந்து உட்காரும். ஆனா, எழுந்து ஓடினது இப்பதான். இது எப்படி சாத்யம்னே தெரியல."

ரேணியனின் அச்சம் போன்ஸ்லேயைக் கவ்வியது.

"ரேணி- வா போய்ப் பார்க்கலாம். சிவாஜி வாடா" என்று அவனை அழைத்தான். சிவாஜி மறுப்பின்றி புறப்பட மிண்டாஜி தடுத்தார்.

"சிவாஜி வேண்டாம். இவன் குடிகாரன். சமயத்துல உளறுவான். நான் போய் என்னன்னு பாத்துட்டு வரேன். கொள்ளி வெச்ச ஒருத்தன் மறுநாள் அஸ்திக்குதான் வரணும். நடுவுல போகக்கூடாது."

அவர் தடுத்தது சிவாஜியை நிறுத்தியது.

"மாமா... நான் வரேன். நான் ஒண்ணும் கொள்ளி எல்லாம் வைக்கலை" என்ற போன்ஸ்லே ரேணியனோடு அங்கிருந்து கிளம்பத் துடித்தான். மிண்டாஜியும் சரி என்று கிளம்பினார். கிளம்பும் முன் துர்காபாயிடமும் சேதுபதியிடமும்,

"சிவாஜியைச் செட்டியாருக்கு அறிமுகப்படுத்தி, நான் சொன்ன விஷயத்தையும் சொல்லுங்க. அதுக்குள்ள வந்துட்றேன்" என்றவாறே மிண்டா ரேணியனோடு கிளம்பிவிட்டார்.

சிவாஜிக்கு செட்டியார் விஷயம் விளங்கவேயில்லை. உள்ளே அழைத்துச் சென்று துர்காபாய் தனக்குப் புரிந்த விதத்தில் பேசத் தொடங்கினாள்.

"சிவாஜி இவர்தான் செட்டியார். நம்ம அரண்மனை வீடும், அப்புறம் தோட்டம் துறவு மேலல்லாம் கிட்டத்தட்ட பதினேழு லட்ச ரூபாய்க்கு கடன் இருக்காம். அதுக்காக வீட்டை இவரே எடுத்துக்கறேன்னு சொல்றார். கடன்காரங்க கழுத்தை நெறிக்கறாங்களாம்."

சிவாஜிக்கும் அவள் சொன்னதில் அதிர்ச்சிதான்.

"மதியம் மாமா சாப்பிடும்போதும் இதையே தானம்மா சொன்னார்."

“ஆமாண்டா... இப்ப அதுக்காகத்தான் இவர் வந்துருக்கார்.”

“என்னம்மா இது... இவ்வளவு நாளா நீ ஒரு ராஜ குடும்பத்துப் பொண்ணா இருந்து எதையும் அனுபவிக் கலை. இனியும் ஒண்ணுமில்லாம போயிடும் போல இருக்கே.”

“ஒண்ணுமில்லதான். நான் எவ்வளவோ சொன் னேன். ஜானாபாய் கேட்கலையே. மருந்து மாத்திரைக்கே எவ்வளவு லட்சம் தெரியுமா?” என்று செட்டியார் இடைபுகுந்தார்.

“அது சரிங்க. பாட்டி அப்படி சிரமப்படும் போது ஒரு தகவல்கூட தராம, இப்படி பாட்டி செத்தபிறகு இதை எல்லாம் சொன்னா எப்படி செட்டியார்.”

“இல்லையே. மிண்டா அப்பப்ப உங்ககூட தொடர்பு வெச்சிருந்ததால்ல சொன்னார்.”

“அப்பல்லாம் பாட்டி கடன் பத்தி ஒரு வார்த்தை பேசினது இல்லை.”

“அது எனக்குத் தெரியாது தம்பி. இப்ப அவ்வளவுக்கும் ரிக்கார்டு இருக்கு. பாட்டியோட உறவுக்காரங்கதான் பாட்டி கடனுக்கும் பொறுப்பு. ராஜா வீடுங்கற உரிமை வேணும், கடன் வேண்டாம்னா எப்படிங்க தம்பி?”

“சரிங்க செட்டியார். எங்களுக்கு ராஜா வீட்டு உறவும் வேண்டாம் ஒரு மண்ணாங்கட்டியும் வேண் டாம். பத்தாயிரம் ரூபா சம்பளத்துக்காக நான் ஊர் ஊரா அலையறது எனக்குதான் தெரியும்? இப்ப போய் அவ்வளவு கடன் இவ்வளவு கடன்னு சொல்றது எனக்கு

எரிச்சலைத் தருது. முதல்ல எங்க பாட்டி வெச்சிருந்த சொத்து மதிப்பு தெரியட்டும். பிறகு பேசுவோம்."

சிவாஜியிடம் கோபமாக கோபம் பீறிட்டது. செட்டி யாருக்கும் ஒரு மாதிரியாகிவிட்டது.

"இந்த மதிப்பு விபரமெல்லாம் எனக்குத் தெரியாது தம்பி. கடனுக்காக அரண்மனை வீட்டை அப்படியே நான் எடுத்துக்கறேன். வாங்குன பிறகுதான் அதை என்ன பண்றதுன்னு நான் யோசிக்கணும். உள்ள கைய வெச்சா ஒரு கோடி ரூவாய்க்கு செலவழிக்கணும்னு எஞ்ஜீனியர் சொன்னாரு. ஒரு கோடி ரூபாயை அந்த வீட்ல போட்டு அதைப் பளபளப்பாக்கி என்ன பிர யோஜனம். எதாவது டவுன்ல இருந்தா ஹோட்டல் கட்டலாம். இல்லாட்டி அடுக்குமாடி வீடுங்களாவது கட்டலாம். இது கிராமம். ஆகையால எப்படிப் பார்த் தாலும் எனக்கு இடிக்குது. மிண்டாஜி கேட்டுகிட்டத்துக் காக வந்தேன். அவசரப்பட்டுக் கோபத்துல என்னை உதாசீனப்படுத்துனா நான் கடனுக்காகக் கோர்ட்டுக்கு தான் போகவேண்டி இருக்கும். கோர்ட், சொத்தை ஜப்தி பண்ணி ஏலத்துல விட்டா அப்பவும் நான்தான் அதை வாங்கணும். யாரும் கிட்டையே வரமாட்டாங்க. ஏன்னா அரண்மனை வீடு. இப்ப இந்த ஊரைப் பொறுத்தவரை ஒரு உருப்படாத வீடு. அதை வாங்கறவன் அழிஞ்சிடுவான்கறதுதான் மக்கள் பேச்சு. நல்லா யோசிச்சிக்குங்க."

செட்டியார் தாட்டியமாகப் பேசவேண்டிய அவ்வள வையும் பேசிவிட்டு, தன் கார் நோக்கி நடையைப் போட்டார். சிவாஜிக்கே தான் அதிகமாகப் பேசிவிட் டோமோ என்று கொஞ்சம் உள் மயக்கமாகவும் இருந்தது.

துர்காபாயும், சேதுபதியும் திருதிருவென விழித்தனர். இந்த தர்க்கங்கள் எதைப்பற்றியும் கவலையே இன்றி சகோதரிகள் 8.30 லஷ்மி சீரியலில் மூழ்கியிருந்தனர்.

**க**ல்மண்டபத் தோட்டம். ஓட்டமாக உள் நுழைந்த ரேணியன் நீராழிக் கிணற்றைக் காட்டினான். அதில் பாதி வெந்தும் பாதி வேகாததுமாய் ஜானாபாய் உடம்பு படுகோரமாய் மிதந்துகொண்டிருப்பது ரேணியன் தீப்பந்தம் ஒன்றைப் பிடித்துக் காட்டவும் தெளிவாகவே தெரிந்தது.

மிண்டா அதைப் பார்த்து விகாரமாக முகத்தைச் சுளித்துக்கொண்டார். போன்ஸ்லேயும் முகம் சுளித்த படி பின்னுக்கு வந்தான். இருவர் பார்வையும் அதிர்ச் சியும் ஆச்சரியமுமாக முட்டி மோதிக்கொர்ண்டன.

"பார்த்தீங்களா சாமி. என் ஆயுசுல ஒரு பிணம் எழுந்து ஒடி நான் பார்த்ததே இல்லீங்க" என்று ரேணியன் மிரள மிரள விழித்தான்.

மிண்டாஜி பதிலுக்கு அவனை முறைக்க ஆரம்பித்தார்.

"என்ன சாமி- எதுக்கு இப்ப இப்படி முறைக்கறீங்க?"

"முறைக்காம... எந்த காலத்துலடா பிணம் எழுந்து ஓடியிருக்கு. யார்கிட்ட காது குத்தறே?"

"சாமிஈஈ!"

"சாமியாவது, மாமியாவது... ரேணியா உனக்கு இப்பலாம் முன்னமாதிரி வருமானம் இல்லை. மாசத்துக்கு ஒரு பொணம் விழுந்தா அதுவே அதிகம். அதனால நீ இப்படி எல்லாம் குறுக்கு வழில போக ஆரம்பிச்சுட்டேன்னு நினைக்கறேன்."

"என்ன சாமி சொல்றீங்க. இதுல குறுக்கு வழி எங்க சாமி இருக்கு?"

"ஆமாண்டா. இது குறுக்கு வழி இல்லாம வேற என்ன? பிணத்தைத் தூக்கி 'நீராழிக்கிணத்துல நீயே போட்டுட்டு அது ஓடிப்போச்சுன்னு இப்பக் கதையா அடிக்கிறே. நீ அடுத்து என்ன சொல்லப் போறேன்னு எனக்குத் தெரியும். இனியும் ராணி ஜானாபாய் பொணத்தை முழுசா எரிக்கணும்னா அதுக்கு சில சாந்தி பரிகார பூஜை எல்லாம் செய்யணும், அதைச் செய்ற மந்திரவாதிகளை எனக்குத் தெரியும்னு ஆரம் பிப்பே. அப்புறமா அவனுக்கு இவ்வளவு ஆச்சுன்னு சொல்லி அதையும் நீயே வாங்கி பாக்கெட்ல போட் டுப்பே. இதானே இப்ப உன் திட்டம்."

மிண்டாஜி பேசியது ரேணியனை வெகுவாகவே பாதித்துவிட்டது. அதுவரை பயந்தும் மிரண்டும் போயிருந்தவன் மிண்டாவைப் பதிலுக்கு முறைத்துப் பார்த்தான். பிறகு எதுவும் பேசாமல் விறுவிறுவென்று நீராழிக் கிணற்றுக் கல்படிகளில் இறங்கினான். ஆவேசத் தோடு ஜானாபாயின் சடலத்தைத் தொட்டு இழுத்து அப்படியே ஈரம் சொட்ட தோள்மேல் போட்டுக் கொண்டான். திரும்பவும் கல்படிகளில் ஏறி மேலே வந்தவன் அவிந்து அடங்கப்போகும் எரிமேடை மேல் திரும்பவும் சடலத்தைப் பொத்தொன்று போட்டான்.

போன்ஸ்லேவுக்கு அவன் ஏதோ பெரிதாக செய்யப் போகிறான் என்றுதான் தோன்றியது. சற்று தொலைவில் ஒரு புதரில் மண்ணெண்ணெய் டின் இருந்தது. அதை எடுத்து வந்து பிணத்தின்மேல் கொட்டினான். குபீர்

என்று தீப்பிடித்துக்கொண்டு தீ நாக்குகள் பாலே நடனப் பெண்கள் போல உயர்ந்து எழும்பி ஆடத் தொடங்கின.

அவனும் ஓடிப்போய் ஒரு மூங்கில் தடியை கையில் எடுத்துக்கொண்டான். மிண்டாஜி எதனால் அவன் அப்படி நடந்துகொள்கிறான் என்று தெரியாமல் பார்த்தபடியே இருந்தார்.

ஜானாபாய் சடலம் திகுதிகுத்தது!

அதை மூங்கில் கட்டையால அமுக்கிப் பிடித்தான்.

ஒரு கட்டத்தில் கட்டையை விலக்கியபோது அது எழுந்து அமர்ந்து கிலி மூட்டியது.

போன்ஸ்லேவுக்கு உயிர்வரை கூசியது.

மிண்டாவும் முதல் தடவையாக பயத்தில் கண்களை அகட்டி விரித்தார். ரேணியன் திரும்பிப் பார்த்தான்.

"பார்த்தீங்களா. நான் பொய் சொல்லலைன்னு தெரிஞ்சுபோச்சா? என் கடமையையும் நான் முடிச் சிட்டேன். நான் ஒண்ணும் உங்கள மாதிரி ராணியம்மா கூட இருந்தே குழி பறிச்சவன் இல்லை. எனக்கு மன சாட்சி இருக்கு. இப்ப போங்க. நாளைக்குக் காலைல வாங்க சாம்பல் தயாரா இருக்கும்.

ஒண்ணுமட்டும் சொல்லிக்கறேன். ஒருத்தரைக் கொன்று எரிச்சிட்றதால அவர் சம்மந்தப்பட்ட எல்லா பிரச்சினைகளையும் எரிச்சிட்டதா ஆயிடாது. என் அனுபவத்துல எல்லா ஆத்மாக்களும் அமைதியாவோ இல்லை ஆவேசப்படாமலோ போயிட்றதில்லை. ராணி யம்மா பொணத்தை எரிக்கப் படாதபாடு பட்றதுல இருந்து ஒரு உண்மை எனக்குத் தெரியுது.

ராணியம்மா நிம்மதி இல்லாம செத்துருக்காங்க. செத்துருக்காங்கன்னு கூட சொல்லமாட்டேன். அவங்களை யாரோ கொன்னு போட்டிருக்கணும். புடவை மாத்தும்போது இடுப்பு தொடையெல்லாம் புண்ணா இருந்ததைப் பார்த்தேன். அவ்வளவும் ஊசி போட்ட புண்ணு! ஆனா, இந்த ஊர்ல ஊசி போட்ற அளவுக்கு ஒரு டாக்டர்கூட இருந்ததில்லை. வெளிய இருந்தும் வந்துட்டுப் போகல. இந்த ஊரையே சுத்தி வர்ற எனக்கு அது நல்லாவே தெரியும். அதை எல்லாம் வெச்சு பார்க்கும்போது இவங்களுக்கு ஏதோ நடக்கக்கூடாதது நடந்துருக்கற மாதிரிதான் நான் நினைக்கறேன். இவங்க ஆத்மா, பிணத்துக்குள்ள பூந்துல்லாம் எழுந்து வந்து செயல்படத் துடிக்கிறதப் பார்த்தா, யார் தப்பு செய்திருந்தாலும் சரி. சத்தியமா அவங்க தப்பிக்க முடியாது. இதுமட்டும் நிச்சயம்!"

ரேணியனின் ஆவேசமான பேச்சு போன்ஸ்லேயை உலுக்கிவிட்டது. மிண்டாவோ ஆவேசத்தின் உச்சிக்கே போய், "இனி நீ ஒரு வார்த்தை பேசக்கூடாது. உனக்கு என்னடா தெரியும். ராணி ஜானாபாய் ஒரு சர்க்கரை வியாதிக்காரி. தினமும் இன்சுலின் போட்டுக்காட்டி அவங்களால உயிர் வாழ முடியாது. இன்சுலின் போட்டுக்கவெல்லாம் ஒரு டாக்டர் வீட்டுக்கு வரமாட்டார். அதை அவங்களேதான் போட்டுக்குவாங்க. தெரிஞ்சுக்கோ. போன்ஸ்லே வா போகலாம்."

மிண்டா அவனுக்கு பதில் சொல்வதுபோல போன்ஸ்லேவுக்குத்தான் சொன்னார்.

போன்ஸ்லேவுக்கும் புரிந்தது!

# 7

'எந்த ஒரு வீட்டில் அதிக மரணங்கள் நிகழும், எந்த ஒரு வீட்டில் இருள் சூழ்ந்திருக்கும், எந்த ஒரு வீட்டில் அசுர சக்திகள் குடியேறும் என்பதற்கெல்லாம் ஒரு கணக்கு இருக்கிறது. வாஸ்து பாடம் திசைகள் பற்றியும், பொதுவான உள் அமைப்புகள் எப்படி இருக்க வேண்டும் என்று மட்டும்தான் கூறுகிறது. ஆனால், வாஸ்து அனுபவம் என்பது ஒரு வீடு கட்டப்படும் நில அமைப்பு முதல் அதைச் சுற்றியுள்ள வீடுகள், அந்த வீட்டுக்கு நாம் போகப் பயன்படுத்தும் பாதை முதல் சகலத்தையும் கணக்கில் எடுத்துக் கொள்கிறது. அதேபோல, ஒரு வீடு அந்த வீட்டில் வசிப்பவரின் ஜாகதத்தை ஒட்டியே செயல்படுகிறது. மரணத்தை வாரித்தரும் ஒரு வீடு, ஆயுள் பலம் உள்ளவர்களை தன்னுள் சேர்ப்பதேயில்லை. அதேபோல நல்லவிதமான சக்திகளைக் கொண்டிருக்கும் வீடுகள் தீயவர்களை உள்ளே விடுவதில்லை.

ஒரு வீட்டைப் பொறுத்தமட்டில் அதன் சில அமைப்புகளின் செயலாக்கத்திற்கு சில ஆண்டுகள் தேவைப்படும்.

ஒரு வீடு இடி விழுந்து தரைமட்டமாகிப் போனது. அவ்வாறு அது ஆகியே தீரும் என்ப

**தற்கு அறிகுறியாக அவ்வீட்டின் அக்னி பாகத்தில் அதற்கான உட்கூறுகள் மிகுந்து காணப்பட்டன. அவை செவ்வாய், குரு, சுக்கிரன், சனி, கிரகங்களின் கூட்டுக் கலப்பு விஷயங்களாகவே இருந்தன.**

**வாஸ்து ஞானத்தைக் கொண்ட ஒருவர் அதை ஒரு தொழிலாக செய்யாமல், அதை ஒரு கலையாக காதலிக்கும்போது இப்படிப்பட்ட நுட்பமான விஷயங்கள் அவருக்குத் தெரியவரும்!**

மிண்டாவும் போன்ஸ்லேவும் வீடு திரும்பியபோது செட்டியார் புறப்பட்டுப் போய்விட்டிருந்தார். சேதுபதியும், சிவாஜிராவும் ஏதோ குசுகுசுவென்று பேசிக் கொண்டிருந்தனர். அவர்களுக்கு இடையில் துர்காபாய் புகுந்துகொண்டு, "பேசாம நாளைக்குக் காலைல அஸ்தி எடுத்து கரைச்சுட்டு, நாம கிளம்பி ஊருக்குப் போகப் பார்ப்போம். கடன்காரங்களை மிண்டா மாமாவே செட்டியார் மூலம் சமாளிச்சுக்கட்டும். நமக்கு சொத்து ராசியே கிடையாது. ஏதோ அம்மா முகம் முழியைப் பார்த்து அவளைக் குளிப்பாட்ற பாக்கியமாவது எனக்கு கிடைச்சதே அதுவே போதும்" என்று ஓங்கலாக அவள் சொல்வது மிண்டாஜி காதிலும் விழுந்தது. அடுத்த நொடியே அவர் முகத்தில் ஒரு பிரகாசம் ஏற்படுவதையும் போன்ஸ்லே கவனித்தான்.

"என்னம்மா துர்கா. கடைசில எல்லாத்தையும் என் தலையிலேயே தூக்கி போடறியா. சரி! உனக்காக நான் அதையும் செய்யறேன். ஆமாம் செட்டியார் எங்க?"

மிண்டாஜி அலுத்துக் கொள்வது போலவே ஒப்புதல் அளித்தார். கிட்டத்தட்ட சிவாஜிராவும் அதை ஒப்புக் கொண்டு விட்டவன்போல அமைதியாகவே இருந்தான். போன்ஸ்லேவை அது கொஞ்சம் துவட்டியது. துர்காபாய் மிண்டாவிடம், "மாமா போன விஷயம் என்ன ஆச்சு. அம்மா உடம்பு எழுந்து ஓடினதா ரேணியன் சொன் னானே" என்று அந்த விஷயத்தைத் தொட்டாள்.

அவன் சும்மா பூச்சாண்டி காட்டியிருக்காம்மா. அதெல்லாம் எதுவுமில்லை. காலைல நாம போய் சாம்பல் எடுத்து ஆத்துல கரைச்சுட்டு பாலைத் தெளிச் சிட்டு நம்ம வேலையைப் பார்க்க வேண்டியதுதான்."

மிண்டாஜி படுலேசாகிவிட்டார். போன்ஸ்லே அருகில் இருப்பதையும் மறந்து, நடந்து முடிந்த அவ்வள வையும் அப்படியே மூட முயற்சி செய்கிற மாதிரிதான் போன்ஸ்லேவுக்குத் தோன்றியது. விட்டால் அப்போதே அவர் சிவாஜிராவிடம் வீட்டை விற்கும் பவர் உரி மையை எழுதி வாங்கிக் கொண்டுவிடுவார் போலவும் போன்ஸ்லே உணர்ந்தான். அடுத்த நொடியே அவனுக் குள் சுதாரிப்பு.

"சிவாஜி ஒரு நிமிசம் என்கூட வா" என்று சிவாஜி ராவை அங்கிருந்து பிரித்து தனியே அழைத்துச் சென் றான். மிண்டாஜி அதைச் சற்றும் எதிர்பார்க்கவில்லை.

"போன்ஸ்லே... சிவாஜிராவ் நல்ல பையன். அவன் கிட்ட கண்டதைச் சொல்லி அவன் மனசைக் கெடுத் திடாதே" என்றார்.

அதை அவன் காதிலேயே வாங்கிக் கொள்ள வில்லை. அவ்வளவையும் அறைக்கதவு ஒன்றின் முன்

தொங்கும் திரைச்சீலை ஒன்றின் பின்னால் நின்று பார்த்துக்கொண்டேயிருந்தாள் மிண்டாஜியின் தர்ம பத்தினியான ருக்மணி.

ஒரு பத்து நிமிட அவகாசத்தில் இருவரும் திரும்பி வந்தனர். சிவாஜி முகத்தில் மாற்றம் நன்றாகவே தெரிந்தது.

“மிண்டா மாமா. அந்த அரண்மனை வீட்டை எதுக்காகவும் யாருக்காகவும் நான் விற்கத் தயாராக இல்லை. பேங்குல கடன் வாங்கி அதைப் புதுப்பிக்கப் போறேன். புதுப்பிச்சு சினிமா பட ஷூட்டிங்க்கு வாடகைக்கு விடலாம்னு முடிவு செய்திருக்கேன். உடனே நீங்க கடன்காரங்களுக்கு என்ன பதில் சொல்லப் போறேன்னு கேப்பீங்க.

என் பாட்டி ஜானாபாய் நிஜமாலுமே கடன் வாங்கி யிருந்தா அதற்கான எவிடன்ஸை கோர்ட்ல காட்டி கேஸ் போடச் சொல்லுங்க. நாங்க அவங்களை எல்லாம் கோர்ட்டுல பார்த்துக்கறோம். கோர்ட் சொன்னா அப்ப இந்த வீட்டை வித்தோ இல்லை ஷூட்டிங் வருமானத்தை வெச்சோ அவங்க கடன்களைத் திரும்பி அடைப்போம். இதுதான் எங்க முடிவு.

எங்க பாட்டி ஜானாபாய் சம்மந்தப்பட்ட அவ்வளவு சொத்துகளும், அதாவது கல்மண்டபத் தோட்டம், ஆத்தோர வாழைத் தோப்பு, இது போக நஞ்சை புஞ்சை வயல் சம்மந்தமான எல்லா விவரங் களும் உங்களுக்கும் தெரிஞ்சிருக்கும். அந்த விபரங்களை நீங்க சொன்னா கேட்டுக்கறோம். இல்லேன்னா வீ.ஏ.ஓ.வைப் பார்த்து பஞ்சாயத்துல உள்ள சிட்டா

அடங்கிய குறிப்பை வெச்சும், ரெவின்யூ ரெக்கார்ட்ஸை வெச்சும் இந்த கிராமத்துல அரண்மனை வீட்டு சொத்து அவ்வளவையும் நாங்க எங்க கண்ட்ரோலுக்குக் கொண்டுவந்து அவைகளுக்கு வேலி போட்டு, அவை களையும் பராமரிக்க முடிவு செய்திருக்கோம்.

ஒண்ணுமட்டும் உறுதி மிண்டா மாமா! இவ்வளவு நாள் நிறையவே ஒதுங்கி இருந்து ஏமாந்துட்டோம். இனி நாங்க ஏமாறத் தயாரா இல்லை."

சிவாஜிராவின் பதில் ஆவேசம் சேதுபதியையும் துர்காபாயையும் கூட சங்கடப்படுத்தியது.

ஒருவரது வீட்டில் அவரது உதவிகளை அனுப வித்துக் கொண்டே அவரையே எதிர்ப்பது போலவும், வருத்தப்பட வைப்பது போலவும் பேசுவது நாகரீகமான விஷயம் கிடையாது. அந்த அவஸ்தை சேதுபதியிடம் நன்றாகவே வெளிப்பட்டது.

"சிவாஜி... என்னடா... என்ன வந்ததுன்னு இப்படி எல்லாம் பேசறே? நீ பேசறது கொஞ்சம்கூட நல்லா இல்லை" சேதுபதியின் வக்காலத்து மிண்டாவுக்கும் சற்று தெம்பைத் தந்தது.

"பேசட்டும் விடு சேதுபதி. நான் நல்லது நினைச்சு தான் சொன்னேன். ஆனா, சிவாஜியை போன்ஸ்லே தான் கெடுத்துருக்கான். போன்ஸ்லே இதுக்கு நீ அனுப விப்பே பார்."

மிண்டாஜியின் பாய்ச்சலை போன்ஸ்லே கண்டு கொள்ளவேயில்லை.

"நல்லது மாமா. நான் அனுபவிச்சுட்டுப் போறேன். உங்க உதவிகளையும் எங்களால மறக்க முடியாது.

அதுக்கெல்லாம் ரொம்பவே நன்றி. அதேசமயம் இனியும் இந்த வீட்டுல உங்களுக்கு பாரமா நாங்க இருக்க விரும்பலை. நாங்க கிளம்பறோம். சிவாஜி நீயும் சொல்லுடா."

"ஆமாம் மிண்டாஜி மாமா. உங்களுக்கு இனியும் சிரமம் தர நாங்க தயார் இல்லை. நாங்க இப்பவே புறப்பட்றோம். காலைல கல்மண்டபத்து தோட்டத்துக்குப் போய் சாம்பலை எடுத்து அஸ்தியைக் கரைச்சுக்கறதும் எங்க பொறுப்பு. நீங்க சிரமப்பட வேண்டாம்" என்ற சிவாஜிராவ் சேதுபதியையும், துர்கா பாயையும் புறப்படுங்கள் என்பதுபோலப் பார்த்தான். அவர்களிடம் புதிதாய் ஒரு பதற்றம். ஒரு தயக்கம்.

"இந்த ராத்திரியில எங்கடா போக?" என்று மிடறு கூட்டினாள் துர்காபாய்.

"நம்ம அரண்மனை வீட்டுக்குத்தான்."

"அங்கையா...?"

"அம்மா. அது ஒண்ணும் பாழடைஞ்ச யாருமே உள்ள நுழையமுடியாத பூட்பங்களா இல்ல. நம்ம பாட்டி இவ்வளவு நாளா வாழ்ந்துகிட்டிருந்த ஒரு வீடுதான் அது."

"சிவாஜி நீ விவரம் புரியாம பேசறே. உங்கம்மாவும் நானும் முப்பது வருஷமாச்சு அந்த வீட்டைவிட்டு வந்து- இவ்வளவு வருஷத்துக்குப் பிறகு அந்த வீட்டுக்குள்ள ஒரு சாவுத்தீட்டோட போறது அவ்வளவு நல்லதில்ல."

"அப்பா நீங்க சாஸ்த்ரம் பாக்கறீங்க. ஆனா, நானோ இங்க சில சத்தியங்கள் பாக்கறேன். இது சாஸ்திரம் பாக்கவேண்டிய நேரமில்லப்பா."

“என்னப்பா நீ... திடீர்னு உனக்கு மிண்டாஜி மேல என்ன வருத்தம்?”

“அவர்மேல ஒரு வருத்தமும் இல்லை. அந்த அரண்மனை வீடு பத்திரப்படி இனி எனக்குத்தான் சொந்தம். அதோட சொந்தக்காரன் நான். என் விருப்பப்படிதான் முடிவெடுப்பேன். அது மட்டும் இல்ல. அதுதான் பாட்டியோட விருப்பமும்.”

“என்னப்பா சொல்றே?”

“அப்பா ஒரு விஷயத்தை நல்லா தெரிஞ்சுக்குங்க. பாட்டியோட ஆத்மா இப்ப துடிச்சிகிட்டு இருக்கு. அது அந்த வீட்டுல நம்மை எதிர்பார்த்து காத்துகிட்டிருக்குப்பா. அம்மா உன் கனவுல பாட்டி வந்ததும் நகைப் பெட்டியை தரேன்னு சொன்னதும் நிஜம்னா எதுவும் பேசாம என்கூட புறப்படு.”

“சிவாஜி எனக்கு என் வீட்டுக்குள்ள வர ஆசை இல்லாம இருக்குமா? ஆனா, இந்த ராத்திரியில நமக்கு எல்லா உதவிகளையும் செய்த மிண்டா மாமாவை ஒதுக்கிட்டு வரத்தான் சங்கடமா இருக்கு.”

துர்காபாய் குழைந்த சாதம்போல நெகிழ்ந்து போய் பேசினாள்.

“போதும். இப்பவே எல்லாரும் புறப்படுங்க. இனி ஒரு நிமிஷம் யாரும் இங்க இருக்கக்கூடாது. என் வீட்டுக்காரர் மேல எப்ப உங்களுக்கு பிடிப்பு போச்சோ அப்ப எனக்கும் உங்கமேல இருந்த எல்லா அன்பும் போயிடிச்சு. தயவுசெய்து கிளம்புங்க.”

மிண்டாஜியின் மனைவி ருக்மணி தலைக்குமேல் கை வைத்து கும்பிட்டபடியே கிளம்புங்க என்றாள்.

அதன்பின் அவர்கள் யாரும் அங்கே இருக்கவில்லை. கிளம்பிவிட்டனர். அவர்கள் அவ்வளவு பேரும் வெளியேறவும் மிண்டாஜி ஆவேசமாக மனைவியை நெருங்கினார். பளாரென்று அவளது கன்னத்திலும் ஓர் அரை!

அவள் வாயைப் பிளந்தாள்.

“பைத்தியக்காரி. எதுக்குடி இப்படி முந்திரிக் கொட்டையாட்டம் நான் இருக்கும்போது ஆவேசப் பட்டே? இப்படி அவங்களை அந்த வீட்டுக்குள்ள அனுப்பி வாழ வைக்கவா நான் இவ்வளவு நாள் கஷ்டப் பட்டேன்.”

அவர் அப்படிக் கேட்டதிலேயே அவர் உண்மையில் என்ன நினைத்திருந்தார் என்பது ருக்குமணிக்கு விளங்கி விட்டது.

“அப்படின்னா...?”

“என்ன அப்படின்னா... அந்த வீடும் வாசலும் போனாகூட பரவாயில்லடி. ஆனா, ஜானாபாய் பொத்திப் பொத்தி பாதுகாத்த அவளோட நகைகள் அவங்களுக்குக் கிடைக்கக்கூடாது. அதை நீ கண்ணால பார்த்ததில்ல. ஆனா, நான் பார்த்திருக்கேன். கிட்டத்தட்ட ஆயிரம் பவுன். அதுல இருக்கற ஒரு வைர அட்டிகை வீர சிவாஜியே அவங்க பரம்பரைக்குக் கொடுத்தது. ஒரு ரத்ன வளையலை சித்தூர் ராணி பத்மினி பரிசா கொடுத்துருக்கா. முத்துமாலை ஔரங்கசீப்போட பரிசு. மாணிக்க ஹாரமும், செம்பவழ மாலையும் ராணி மங்கம்மா கொடுத்ததுடி. அதை எல்லாம் அந்தக் கிழவி பௌர்ணமிக்கு பௌர்ணமி போட்டு அழகு பார்ப்பா. அப்படி ஒருநாள் அவ அழகு பார்த்தப்ப அதை நான்

பார்த்துட்டேன். படார்னு கதவை மூடி என்னை வெளியே போன்னு துரத்தி அடிச்சா.

அவளுக்கு தினமும் நீ சமைச்சுக் கொடுக்க, அதை கொண்டு போய் கொடுத்து, அவளை உபசரிச்சதுக்கு அவ எனக்குக் கொடுத்த பரிசு அந்த அலட்சியம். அதே சமயம் நான் என் பொண்ணைப் பார்க்கணும், பேரனைப் பார்க்கணும் அவங்களை வரச்சொல்லுன்னு ஒரே பிலாக்கணம். எனக்கு புரிஞ்சுபோச்சு. எவ்வளவு தான் அவளை நாம பாசத்தோட பாத்துகிட்டாலும் அவளுக்கு நானோ நீயோ பெரிசில்ல. நாம அன்னியம் தான். ஆனா பக்கத்துலையே இல்லையின்னாலும் எங்கையோ இருக்கற மகளும் பேரனும்தான் அவளுக்குப் பெருசா போயிட்டாங்க.

இனியும் நாம இவகிட்ட இளிச்சவாய்தனமா இருந்தா இருக்கற சொத்தையெல்லாம் வித்து வாங்கி சாப்பிட்டுடுவான்னு தெரிஞ்ச பிறகுதான் நான் வேற ஒரு வழியை யோசிச்சேன். ஓசைப்படாம அவகிட்ட பல பத்திரங்கள்ள கடன் தொகைக்கான பத்திரம்னு கையெழுத்து வாங்கினேன். அப்படியே ஸ்லோ பாய்சனும் கொடுக்க ஆரம்பிச்சேன். எல்லாம் கூடி வந்தது. ஆனா, கடைசிவரை நகை இருக்கற இடத்தை அவ சொல்லலை. சொல்லாமலே செத்துப்போய்ட்டா.

இருந்தாலும் அது அந்த அரண்மனை வீட்டுக்குள்ள தான் இருக்கணும். அதுக்காகத்தான் செட்டியார்ல இருந்து எல்லா ஏற்பாடுகளையும் நானே செய்தேன். எல்லாம் கூடிவந்த சமயத்துல இந்த போன்ஸ்லே குறுக்க புகுந்து குழப்பிட்டான். இல்லேன்னா சிவாஜியையும்

அவன் குடும்பத்தையும் அழகா பவர்பத்திரத்துல கையெழுத்து வாங்கிட்டு திருப்பி அனுப்பியிருப்பேன். அவன் அவங்க பக்கம் நின்னு கெடுத்தாக்கா, நீ என் கூடவே இருந்து கோபப்பட்டு கெடுத்திட்டியேடி."

குமுறினார் மிண்டாஜி. வெலவெலத்துப் போய்விட்டாள் ருக்குமணி.

"உனக்கு ஒரு உண்மை தெரியுமா?" அடுத்து அவர் ஆவேசமாகக் கேட்டதைப் பார்க்கவும் ருக்குமணிக்கு மயக்கமே வரப் பார்த்தது.

"அவசரக்காரி. நம்ம மாப்ளை இப்ப உயிரோடையே இல்ல. அந்தப் பைத்தியக்காரன் சட்டையைக் கிழிச்சிகிட்டு ஒருநாள் ஓடும்போது லாரில அடிபட்டு செத்துப் போயிட்டான். தகவல் தெரிய வரவும் ஓசைப்படாம போய் காரியம் பண்ணிட்டு வந்தேன். ஏன் தெரியுமா?"

அவர் அடுத்து சொன்னது அவள் இதயத்தைக் கிள்ளியது. கண்களில் ரத்தம் வராத குறை.

"பைத்திக்காரி. நம்ம ராதாபாய்க்கு ஹார்ட் ப்ராப்லம்னு தெரியும்தானே? இந்த விஷயம் தெரிஞ்சா அவளும் போய் சேர்ந்துடுவான்னுதான் மூடி மறைச்சேன். அவன் அப்பப்ப வந்துட்டுப் போறான்னு ஒரு பொய்யச் சொல்லி, அவ விசாரிக்கப் போகும்போது தடுக்காம இருக்கேன்."

"எவ்வளவு நாளைக்கு இப்படி செய்ய முடியும்?"

"நகைப்பெட்டி கிடைக்கற வரைன்னு வெச்சுக் கையேன். அது கிடைச்சுட்டா அதைக்கொண்டே என் பொண்ணுக்கு நூறு மாப்ளை பார்த்து அவளுக்கு இன்னொரு கல்யாணம் பண்ண என்னால முடியும்டி."

"இவ்வளவு பெரிய ரகசியத்தைக் குறைஞ்சபட்சம் என்கிட்ட கூடவா நீங்க சொல்லக்கூடாது?"

"பைத்தியக்காரி. ரகசியம்னா அது ஒருத்தருக்குள்ள ஒருத்தரோட முடிஞ்சு போயிடணும். கிழவி கடைசி வரை சொல்லாமலே செத்தா பார். அந்த மாதிரி!"

"உங்களுக்கு அடுத்தவங்க காசுன்னாலே பிடிக்காதே? நீங்க எப்படிங்க?"

"வாஸ்தவம் தான். முப்பது வருஷமா அந்தக் கிழவியைத் தாங்கினதுக்கு அவ ஒரு நன்றி சொன்னாளா? ஏன்… அந்த ஆத்தோர வயல்காட்டை எனக்குத் தரலாம் இல்லையா? தந்தாளா?"

"அப்ப பிரதிபலன் எதிர்பார்த்தா செய்தீங்க?"

"இல்லதான். ஆனா, என் ஒரே பொண்ணு சௌக்கியமா வாழணுமே? பரோபகாரியான என் மாப்ளையை காலம் கொண்டு போனது மட்டும் சரியா?"

"இந்தமாதிரி வேற யாராவது பேசினா அது அவங்க தலைவிதின்னு சொல்ற நீங்களா இப்படிப் பேசறது?

"ருக்குமணி. நீ இவ்வளவு வருஷம் என்கூட குடும்பம் நடத்தியும் எனக்கும் ஆசாபாசம் இருக்கறதைக் கொஞ்சம்கூட புரிஞ்சுக்கலடி. உன்கூட பேசறது இனி வேஸ்ட்" என்றபடியே திரும்பியவர் எதிரில், மகள் ராதாமணி வந்து கொண்டிருந்தாள்.

"இதோ பார். என் பொண்ணு வந்துட்டா. இங்க நடந்த எதுவும் அவளுக்குத் தெரியக்கூடாது. தெரிஞ்சிது நான் உன்னைக் கொல்லக்கூட அஞ்சமாட்டேன். ஞாபகம் வெச்சுக்கோ. நான் வரேன்."

அந்தப் பேச்சோடு அவரும் ஆவேசமாகக் கிளப்பினார். எங்கே?

## 8

'வாஸ்து சாஸ்திரத்தில் சில சூட்சுமங்கள் உள்ளன. அதில் பிரதானமான ஒன்று ஒரு வீட்டின் கிணறு. அந்த மனைக்கே நீராதாரமாய் விளங்கும் அது பொதுவில் ஈசான்யத்தில் தான் இருக்கும்!

சில வீடுகளில் தவறுதலாக மற்ற மூலைகளில் அமைந்துவிடும். இதில் கன்னிமூலையாகிய சனி மூலையிலும் எமன் மூலையிலும் அமைந்துவிடும் கிணறுகள் அந்த வீட்டு எஜமானரை விபத்து மூலம் பூமிக்குள் அமுக்க முயலும் என்பார்கள். அதோடு தெற்கு பாகம் அதிகமாகி வடக்கு பாகம் குறைந்த மனையில் தெற்கில் நடுவில் திறப்பு இருந்தாலும் அந்த வீட்டு எஜமானர் விபத்துக்கு உள்ளாக வாய்ப்பு உள்ளது. இதற்கு சில விதிவிலக்குகளும் உள்ளன.

முக்கியமாக வாஸ்துவில் அறியப்பட வேண்டிய ஒரு விஷயம், தவறாகவே கிணறுகள் அமைந்திருந்தாலும் அவைகளை அவசரப்பட்டு மூடிவிடக்கூடாது. அப்படி மூடுவது பெரும் பிழையில் முடிந்துவிடுகிறது!

*அரண்மனை வீட்டின் கிழக்கு வாயில் கதவு பிரமாண்டமானது. அது மூடப்பட்டிருக்க அதனுள்*

அமைந்திருந்த திட்டிவாசல் கதவு மட்டும் திறந்தே இருந்தது!

மிண்டாஜி புடவை எடுக்க வந்தபோது அதன் வழியாகத்தான் வெளியேற முயன்றார். ஆனால் அப்போது யாரோ அமுக்கிப் பூட்டிவிட்டது போல பூட்டிக்கொண்டு விட்டிருந்த அது, இப்போது யாரோ திறந்துவிட்டது போல திறந்து கிடந்தது.

சில சமயங்களில் அதனுள் தெருப்பிள்ளைகள் நுழைந்து அரண்மனை வீட்டு முகப்பு வராண்டாவில் ஓடிப் பிடித்து விளையாடுவார்கள். அதன் இருபுறத் திலும் இரு கல் யானை சிலைகள் கால் மடித்து அமர்ந் திருக்கும். அதன் முதுகுமேல் ஏறி அமர்ந்து, "ஆனே... ஹேய் ஹேய்" என்று கற்பனைச் சவாரி புரிவது பிள்ளைகள் இன்பம். அப்போதெல்லாம் மிண்டா வந்தாலோ இல்லை ருக்குமணி வந்தாலோ அவர்களைத் துரத்திவிடுவார்கள். திட்டி வாசலையும் பூட்டி வைக்கத் தான் ஆசைப்படுவாள். ஆனால், அது சூரிய ஒளிபடும் போது விரிந்து இறுகிக்கொள்வதும் இரவில் சுருங்கி திறந்துகொள்வதும் சகஜம். அதைத் திறந்து மூடுவது பலருக்கு சவாலான விஷயம். எனவே, போகட்டும் போ என்று திறந்தமாதிரியே விட்டுவிட்டார்கள்.

அந்த இரவு வேளையில் அது திறந்து இருப்பது அதன்முன் வந்து நின்ற சிவாஜிராவுக்கும் அவன் மொத்த குடும்பத்துக்கும் வசதியாக இருந்தது. சிவாஜி யின் சகோதரிகள், திட்டிவாசல் திறந்த கதவு வழியாக கழுத்தை உள்நுழைத்து உள்ளே பார்த்தார்கள். ஒரே இருட்டாக இருந்தது.

போன்ஸ்லே காரில் இருந்து டார்ச் லைட் எடுத்து வந்திருந்தான். அதோடு முதல் மனிதனாகக் கதவைக் கடந்து உள்ளே சென்றவன் மற்றவர்களையும் உள்ளே அழைத்தான். துர்காபாய் கண்ணீரோடு ஓங்கி உயர்ந்த அந்தக் கதவையே வெறித்துப் பார்த்தாள்.

"மாமி தயவுசெய்து உள்ற வாங்க" என்று போன்ஸ்லே அவர்களை உள்ளே அழைத்தான். துர்காபாயும் தயங்கிய படி திட்டிவாசல் வழியாக உள்ளே நுழைந்தாள். உடம் பெல்லாம் ஒரு புது உணர்ச்சி தாவிக் குதித்து ஓடுவது போல இருந்தது. சின்ன வயதில் அந்த திட்டிவாசல் கதவின் மேல்தான் சாய்ந்தபடி அமர்ந்திருப்பாள். அதன் பின் மெல்ல வளர்ந்து பருவம் கொள்ளவும் அதே திட்டிவாசல் வழியாக வெளியே தெருவைப் பார்த்ததும், அதே தெருவில் சேதுபதி சைக்கிளில் வருவதும் போவது மாக இருப்பதைப் பார்த்ததும் அவளுக்குள் அந்த ஒற்றை நொடியில் ஞாபகத்தில் வந்துவிட்டுப் போனது.

அவளைப் பின்தொடர்ந்து சேதுபதியும் உள்ளே நுழைந்தார். அதன்பின் அவர்களது நான்கு பெண்களும். மூத்தவள் தேவகிக்கு திட்டிவாசல் வழியாக உள்ளே நுழைவது என்னவோ போல இருந்தது.

"ஏம்ப்பா முழுக்கதவையும் திறந்துகிட்டு உள்ள நுழையலாம்தானே?" என்று கேட்கவும் செய்தாள்.

"அம்மாடி- இவ்வளவு பெரிய கதவுகள் சாதாரணமா கோயில்களிலும், அரண்மனையிலும் மட்டும்தான் இருக்கும். இதைத் திறக்கறதும் மூட்றதும் சாதாரணமான காரியம் இல்ல. நாலுபேர் வேணும்! அதனால இதை ஒண்ணு திறந்தே வெச்சிருப்பாங்க. இல்லே சாத்தியே வெச்சிருப்பாங்க. அதேசமயம் உள்ள போய் வரவும்

சௌகர்யமாதான் பெரிய கதவுக்குள்ள ஒரு சிறிய கதவா இந்த திட்டிவாசல் கதவு இருக்கும். கதவுக்குக் கீழ பாரு. ஒரு சின்ன வாசப்படி இருக்கறதை."

சேதுபதி காட்டினார். அந்த இருட்டில் அந்த படியானது கறுப்பான ஒரு செவ்வகத் திட்டாகத்தான் கண்ணில் பட்டது. "மொத்த அரண்மனை வீட்டுக்கும் ஒரு தடுப்பு அது. அதை மிதிச்சிக்கிட்டும், இல்லேன்னா தாண்டிக்கிட்டும்தான் யாரா இருந்தாலும் உள்ள நுழையணும். ஒரு சின்ன தட்டு போல இருக்கற வாசல்ங் கறதால திட்டுவாசல்தான் திரிஞ்சி திட்டிவாசல்னு ஆனது" என்று சேதுபதி தனக்குத் தெரிந்த விளக்கத்தையும் கொடுத்து முடித்தார்.

அதேசமயம் எந்த ஒரு வீட்டுக்கும் முதல்படியாக எது அமைந்திருக்கிறதோ அது அந்த மனையின் பரப்பளவில் எந்த இடத்தில் எப்படி அமைந்திருக்கிறது என்பதன் பின்னால் ஏராளமான வாஸ்து மர்மங்கள் ஒளிந்திருப்பதை அவர் அறிந்திருக்க வாய்ப்பில்லை.

போன்ஸ்லே டார்ச் ஒளியை உருட்டிக்கொண்டு வராண்டாவில் நுழைந்திருந்தான். அங்கே ஸ்விட்ச் போர்டைத் தேடி விளக்குகளைப் போட்டுக்கொண்டே போனான். ஒவ்வொரு விளக்கு எரியத் தொடங்கும் போதும் படபடவென்று அடைந்து கிடந்த வௌவால்கள் அவர்களுக்கு நடுவில் காதை உரசிக்கொண்டு பறந்து போய், அவர்களுக்குள் கிலியையும் மூட்டின. வௌவால்களின் எச்ச வாசம் வேறு மூக்கைக் கிணுப் பியது. கடைக்குட்டி நளினிக்கு வாந்தி வரும்போலகூடத் தோன்றியது. அதேசமயம் தலைக்கு மேல் இருபதடி உயரத்தில் கூரை. அதில் நீள நீளமான தேக்கு மரங்கள்,

ஆர்ச் வடிவிலான வாசல். வேலைப்பாடுள்ள கதவுகள், இரண்டு சுவர்கள் சந்தித்துக் கொள்ளும் இடங்களில் எல்லாம் முக்காலிகள். அதன்மேல் யானை, சிங்கம், நாய்க்குட்டி என்று எதாவது கலைப்பொருட்கள், அவர்களின் அந்த நாளைய புகைப்படங்கள். அதில் ஒரு புகைப்படத்தில் ஜானாபாய் பட்டுப்புடவை ஒட்டியாணம் ஜடைப்பில்லை, கழுத்தில் காசுமாலை என்று திவ்யமங்கள ரூபமாய் காட்சி தந்தாள்.

அவள் கழுத்தில் ஒரு நெக்லசும் இருந்தது. அந்த நெக்லசைப் பார்க்கவும் பேபன்ஸ்லேவுக்குள் ஒரு பொறி. அந்த நெக்லசையோ இல்லை அதேபோன்ற ஒன்றையோ போட்டுக் கொண்டுதான் மிண்டாஜியின் ஒரே பெண் ணான ராதாபாய் தஞ்சாவூருக்குக் கிளம்பிப் போயிருந்தாள்.

ஹாலில் இருந்த அந்தப் படத்தை துர்காபாய் ஊன்றிப் பார்த்தாள். கண்களில் நீர் கட்டிக் கொண்டது. சேதுபதி அவளுடன்தான் இருந்தார். அவளது நெகிழ்ச்சிக்கு அவர் தடை போட விரும்பவில்லை. அவள் பெண்கள் நாலாபுறமும் பார்த்து வாயைப் பிளந்திருந்தனர். போன்ஸ்லே, சிவாஜி அருகில் சென்றான். சிவாஜி ஹாலில் கிடந்த ஒரு அழுக்கேறிய சிவப்புப்பட்டு வெல்வெட் சோபாவில் அமர்ந்து சோம்பல் முறிக்கத் தொடங்கியிருந்தான்.

"சிவாஜி..."

"உம்..."

"அந்தப் போட்டோவுல உன் பாட்டி கழுத்து நெக்லசைப் பார்த்தியா?"

"உம்... அதுக்கென்ன?"

“அதுக்கென்னவா அதை நீ இன்னிக்கு நேர்ல பார்த்தே. எங்க - யார் கழுத்துலன்னு ஞாபகமா சொல் பார்ப்போம்.”

“தெரியும்டா. மிண்டாஜி பொண்ணு கழுத்துல... ஆம் ஐ ரைட்.”

“கரெக்டா சொல்லிட்டியே. இதுல இருந்து என்ன தெரியுது?”

“மிண்டா பாட்டியோட நகைப் பெட்டியை முந்தியே அடிச்சிருக்கணும்னு தெரியுது.”

“ஆமாண்டா. இங்க நாம தைரியமா தங்கறது மட்டு மில்ல. அந்த நகைப்பெட்டியை நாம தேடி எடுக்கறதுல தான் நம்ம முழுவெற்றி இருக்கு.”

“ஒத்துக்கறேன். அதேசமயம் மிண்டா மாமாவை சாதாரணமா நினைச்சுடாதே. அவர் திட்டப்படி இந்த வீட்டை விற்க நாம சம்மதிக்கலை. அவர் வரைல இது ஒரு எதிர்பாராத திருப்பம். அதனால, அவர் நம்மை வழிக்குக் கொண்டுவர எந்தமாதிரி வேலை வேணா காட்டலாம். நாம ஜாக்கிரதையா இருக்கணும்.”

“உண்மைதான். இந்தக் காசும் பணமும் எவ்வளவு நல்ல மனுஷங்களையும மாத்திடுது பார்த்தியா?”

“சரி. அதைப்பத்தி எல்லாம் பிறகு பேசுவோம். இந்த ராத்திரி இவங்க எல்லாம் படுத்து நிம்மதியா தூங்கணும். அதுக்கு வழியைப் பார்.”

“என்னடா பெரிய வழி. அதான் ஒண்ணுக்கு பத்து படுக்கை அறையும் அவ்வளவிலும் கட்டிலும் மெத் தையும் கிடக்கே. ஆளுக்கொரு ரூம்ல போய் படுக்கச் சொல்.”

"இல்ல சிவாஜி. இன்னிக்கு ஒரு ராத்திரி எல்லாரும் இங்க ஹால்ல ஒண்ணா படுப்போம்."

"ஏன் போன்ஸ்லே?"

"காரணமாதான் சொல்றேன்."

"சரி நீ சொன்னா சரியாதான் இருக்கும். அப்ப ஒரு சந்தேகம்?"

"என்னடா?"

"அந்த நகைப்பெட்டி இந்த வீட்ல இருக்கறது உன் முடிவா?"

"ஆமாம் சிவாஜி. மிண்டா மாமா உன் பாட்டி கூட இருந்து பாட்டியைப் பாத்துக்கற மாதிரியே பல தில்லாலங்கடி வேலை எல்லாம் காட்டிட்டதாதான் நான் நினைக்கறேன். சுடுகாட்டு ரேணியனுக்கு கூட மிண்டா மாமா ஒரு துரோகிங்கற அளவுக்குத் தெரிஞ்சிருக்குன்னா பார்த்துக்கோயேன்."

இருவரும் குசுகுசுத்துக் கொள்ள, சேதுபதியும் துர்கா பாயும் அவர்களை நெருங்கி வந்தனர். அவர்கள் வரவும் போன்ஸ்லே விலகினான். மூத்தவள் தேவகி தனியாக ஒவ்வொரு அறையாகப் பார்த்துக் கொண்டிருக்க அவளை நோக்கிச் சென்றான். அவனுக்கு அவளிடம் பேச வேண்டும் என்கிற விருப்பம். அந்தச் சூழலில் வேண்டாம் என்று கருதியவள், வேறு திசையில் அந்த பிரமாண்ட வீட்டின் சமையல் கட்டு உள்ள பக்கமாக நடந்தாள்.

போன்ஸ்லேயும் புரிந்ததுபோலப் பின்தொடர்ந்தான். மற்ற மூவரும் பயத்தில் ஹாலிலேயே தங்கிவிட்டனர். தேவகி பிரமாண்ட சமையல் கட்டின் முன்சென்று

நின்றாள். உள்ளே மிகப்பெரிய மேடை. அவள் வந்து நிற்கவும் கறுப்பு பூனை ஒன்று ஒரு பெரிய பித்தளை பாத்திரத்தில் இருந்து எகிறிக் குதித்து ஓடியது. பயத்தில் ஓடிவந்து போன்ஸ்லேயைக் கட்டிக்கொண்டாள். போன்ஸ்லேவுக்குள் வாழ்க அந்தக் கறுப்புப் பூனை என்னும் வாழ்த்துக்குரல். அவளும் பின் மெல்ல விலகினாள்.

“என்ன தேவகி... இப்படி என்னை கட்டிக்கத்தான் தனியா இந்தப்பக்கம் வந்தியா?”

“போதும் என்கிட்ட ஒண்ணும் பேசாதீங்க?”

“அடேங்கப்பா. இது என்ன கோபம்?”

“கோபப்படாம ஆமா மிண்டா மாமாகிட்ட எதுக்கு இப்படி ஒரு மோதல்?”

“ஓ அதுவா விஷயம்...”

“அதுவேதான். இப்ப இந்த ராத்திரியில இந்த இருட்டு வீட்ல எப்படி தூங்கப்போறோமோ தெரியல.”

“இப்ப உன் கவலை எப்படித் தூங்கறதுங்கறதப் பத்தியா?”

“விளையாடாதீங்க. ஆமா எந்த தைரியத்துல நீங்க அவரை எதிர்த்தீங்க?”

“அவர் சரியில்லை தேவகி. சரியான மலைவிழுங்கி மகாதேவனா இருக்காரு.”

“அது எப்படி உங்களுக்குத் தெரிஞ்சுது?”

“அதை எல்லாம் நீ போகப் போக தெரிஞ்சிப்பே.”

“அப்ப இந்த வீட்லதான் இனி நாம எல்லாரும் இருக்கப் போறோமோ. சென்னை வாசம் அவ்வளவு தானா?”

"பைத்தியம். இதை ரிப்பேர் பண்ணி வாடகைக்குல்ல விடப்போறோம்."

"வாடகைக்கு வரணுமே."

"ஏன் வராம... நீ இப்ப பார்த்துக்கற வீடு மூணுல ஒரு பங்குதான். இன்னும் இரண்டு பங்கு இருக்கு. இது போக மாடிலயும் அறைகள்."

"எனக்கென்னவோ நீங்க அவசரப்பட்டுக் கடன் காரங்க கிட்ட மாட்டிக்கிட்ட மாதிரிதான் தோணுது."

"நிச்சயமா இல்லை. எங்களுக்கு உங்க பாட்டியோட ஆசீர்வாதம் துணை இருக்கு தேவகி."

"என்னென்னமோ சொல்றீங்க. எனக்குதான் பயமா இருக்கு."

"பயப்படாதே. வா போகலாம். இன்னிக்கு ஒரு ராத்திரி எல்லாரும் ஒரே இடத்துல படுப்போம். விடி யட்டும் நிறைய விஷயம் நமக்குத் தெரியவரும் பார்."

போன்ஸ்லே அக்கறையாக அவள் தோள்மேல் கைபோட்டு திருப்பினான்.

"நான்கூட இங்க வரும்போது எங்களுக்கெல்லாம் விடிஞ்சுடும்னுதான் நினைச்சேன். ஆனா, மிண்டாஜி மாமா பேசினதைக் கேட்டவுடனே எனக்கு எல்லா நம்பிக்கையும் போயிடிச்சு."

"பைத்தியம். உங்க அவ்வளவு பேருக்கும் விடிவு நிச்சயம். அந்த மனுஷன் வசமா நம்மகிட்ட மாட்டப் போறான் பார்."

போன்ஸ்லே எந்த நம்பிக்கையில் சொன்னானோ தெரியாது. சமையல் கட்டு புகைபோக்கி திறப்பு வழியாக அவன் பேசிக்கொண்டிருப்பது வெளியே போய்

கூரைமேல் சமதளத்தில் புகைபோக்கி கூண்டருகே நின்று கொண்டிருந்த மிண்டாஜி காதில் விழுந்தது.

ஆம்.

மிண்டாஜி பின் கொல்லை வழியாக அவர்களை வேவு பார்க்க அரண்மனை வீட்டுக்குள் நுழைந்து கூரை மேலும் ஏறிவிட்டார். அவர் கையில் ஒரு பட்டுப் புடவையும் பாக்கு உடைக்கும் வெண்கலக் குப்பியும் அதோடு கூடிய இடிக்கியும் இருந்தது.

புடவையைப் பெண்கள் கட்டிக்கொள்வது போலவே கட்டிக் கொண்டவர், இடுக்கியில் பாக்கு இடித்து சப்தமும் எழுப்பத் தொடங்கினார்.

ஜானாபாய் வெற்றிலை பாக்கு போடுபவள். அவள் தான் சதா குப்பியைப் போட்டு குத்திக் கொண்டிருப் பாள். அந்த சப்தம் வந்தாலே அவள் பாக்கு போடத் தயாராகிவிட்டாள் என்பதுதான் பொருள். குப்பி சப்தம் கீழே சமையல் கட்டை விட்டு நகரத் தொடங்கியிருந்த தேவகிக்கும், போன்ஸ்லேவுக்கும் கூட கேட்டது.

"என்னங்க சப்தம்?"

"தெரியல தேவகி. நீ தைரியமா வா." என்ற போன்ஸ்லே, அவளோடு வேகமாக அரண்மனையின் பிரம்ம பாகமான ஹால் பகுதிக்கு வந்து சேர்ந்தான். மேல் தளத்தில் பிரம்ம பாகத்தின் மேலேயும் ஒரு காற்றுத் திறப்பு இருந்தது. மேல் இருந்து அதன் வழியாகக் கீழே பார்க்க முடியும். ஆனால், கீழ் இருந்து பார்த்தால் தெரியாது. மிண்டாஜியும் அங்கு வந்து சேர்ந்தவராகக் குப்பியைத் தட்டத் தொடங்கினார்.

சிவாஜிராவும் திகைக்கத் தொடங்கினான்.

"போன்ஸ்லே என்னடா சத்தம்?"

"தெரியல சிவாஜி."

"யாரோ சீரான இடைவெளில எதையோ இடிக்கற மாதிரி இல்ல" சிவாஜி கேட்க, மிண்டாஜியே மேல் இருந்துகொண்டு சிரமப்பட்டு ஜானாபாய் அழைக்கும் தொனியில்,

"துர்காபாய்ய்... வந்துட்டியா?" என்று நடுங்கும் குரலில் கேட்டார்.

அவ்வளவுதான்; அவ்வளவு பேருக்குமே சப்த நாடியும் நொறுங்கிவிட்டது. சகோதரிகள் ஒருவரை ஒருவர் கட்டிக் கொண்டனர்.

"ஓடிப்போன நீ திரும்ப வந்துட்டியா?" என்று திரும்பவும் கேள்வி.

எல்லோரும் பயந்தாலும் துர்காபாய்க்கு மட்டும் அது தாயின் குரல் ஆனதால் தன் பயத்தை உதறிவிட்டு அண்ணாந்து காற்றுப் போக்கைப் பார்த்தாள். சிவாஜிக்கே அவள் சைகை பயத்தைத் தந்தது. அவளோ பேசவே தொடங்கிவிட்டாள்.

"அம்மா..."

"துர்காபாய்..." பதில் அழைப்பும் வந்தது.

"என் கனவுல வந்த நீ நான் வரதுக்குள்ள ஏம்மா செத்துப்போனே...?"

"என் விதி முடிஞ்சுபோச்சே. நான் என்ன பண்ண?"

"இப்பகூட உனக்கு சாந்தி ஏற்படலையா, சடலமா இருக்கும்போதும் எழுந்து ஓடினியாம்மா?"

"ஆமாம். எனக்கு சாந்தியே ஏற்படலை. பெரிய கடன்காரியா செத்துட்டேன். அதை எல்லாம் அடைக்கணும்."

"அப்ப மிண்டா மாமா சொன்னது முழு உண்மை யாம்மா."

"அது அவ்வளவும் சத்தியம். பாவம் அவன், அவன் பாவத்தைக் கொட்டிக்காதே. அதை சொல்லத்தான் வந்தேன்."

"அம்மாாாா" துர்காகாய் விசும்ப, திரும்பவும் பாக்குக் குத்தும் சப்தம் கேட்டது. அதுவும் மெல்லத் தேய்ந்து ஒரு கட்டத்தில் சத்தமாக அடங்கிவிட்டது.

போன்ஸ்லே முகத்தில் சுரத்தே இல்லை.

இருந்தும் சட்டென்று ஒரு முடிவுக்கு வந்தான்.

அரண்மனை மேல் கூரையில் ஏறிப் பார்க்க விரும்பி, அங்கிருந்து ஓடினான்.

"போன்ஸ்லே எங்க போறே?"

"இரு வரேன்."

"இரு நானும் வரேன்..." சிவாஜிராவும் அவனைத் தொடர்ந்தான்.

வீட்டுக்குள் உள்ளே இருந்து மேலே செல்லும் மாடிப்படிகளில் ஏறி, மாடி அறை ஒன்றின் கதவைத் திறந்துகொண்டு திறந்த வெளிப்பகுதிக்கும் வந்து, அடர்ந்த இருட்டில் நாலாபுறமும் பார்த்தபோது மேலே யாரும் நடமாடிய அறிகுறியே இல்லை.

"என்னடா- பாட்டியே பேசினதுல உனக்கு டவுட்டா?"

"ஆமாண்டா..."

"அப்ப இது அந்த மிண்டாவோட சதி எதாவது இருக்கும்னு நினைக்கறியா?"

"தெரியல. ஒருவேளை இருக்கலாம் இல்லையா?"

போன்ஸ்லே பதிலோடு தென்பகுதி தெரியும் கல்மண்டபத் தோட்டத்தைப் பார்த்தான். லேசாகப் புகை வந்தபடி ஜானாபாய் சடலம் எரிவது தெரிந்தது. அதேவேளை அந்த எரிமேடை நோக்கி ஒரு பெண் நடந்து செல்வதும் தெரியவும் போன்ஸ்லேவுக்கும் வெறுப்பாகிவிட்டது.

"சிவாஜி..."

"என்ன போன்ஸ்லே..."

"அங்க பார்."

"பா... பாட்டியா அது?"

"அ... அப்படிதான் தெரியுது."

"அப்ப வந்தது பாட்டிதானா?"

"தெ... தெரியல..."

"இப்ப என்னடா பண்ண..."

"முதல்ல கீழ போவோம். பிறகு பேசுவோம்."

போன்ஸ்லேவுக்கு பயத்தில் தொண்டை வறண்டு போய்விட, இருவரும் கீழிறங்கத் தொடங்கினர்.

கீழே துர்காபாயும் சேதுபதியும் ஒரு முடிவுக்கு வந்திருந்தனர். அந்த நான்கு பெண்களும் "அம்மா பேசினது பாட்டியம்மா. செத்தவங்களால எப்படிப் பேச முடியும். எங்களுக்கு பயமா இருக்கு. முதல்ல

இங்க இருந்து போய்டலாம்மா" என்று அவளைப் பிராண்டிக் கொண்டிருந்தனர்.

போன்ஸ்லேயும் சிவாஜியும் வரவும் பயங்கரமாக வெறித்தனர். சேதுபதி மகனைப் பயந்த விழிகளோடு பார்த்தார்.

"அப்பா..."

"போயிடலாம் சிவாஜி. எதுவா இருந்தாலும் பகல்ல வந்து பார்த்துப்போம்."

"மாமா தைரியமா இருங்க. இந்த ராத்திரியில எங்க போக முடியும்."

"தெருவுல கூட படுப்போம். இங்க வேண்டாம். பசங்க பயப்பட்றத பாரு."

இறுதியில் சேதுபதிதான் ஜெயித்தார். அவர்கள் அவ்வளவு பேரும் ஒட்டுமொத்தமாகப் புறப்பட்டு விட்டனர்.

விடிந்துவிட்டது!

வாசல் தெளித்து கோலம் போடவந்த மிண்டாஜி யின் மனைவி ருக்குமணிக்கு வீட்டு வாசலிலேயே அதிர்ச்சி. துர்காபாயும் சேதுபதியும் அவள் பெண்களும் வாசல் திண்ணையில் தங்களை மறந்து தூங்கிக்கொண் டிருந்தனர். சிவாஜியும் போன்ஸ்லேயும் காவல்காரர் களைப் போல அமர்ந்திருந்தனர்.

கச்சிதமாகக் கொட்டாவி பிரிய வெளியே வந்த மிண்டாஜி, அவ்வளவு பேரையும் பார்த்து ஒன்றும் தெரியாத மாதிரி ஒரு திகைப்பு திகைத்தார். சேதுபதி படுத்திருந்த நிலையில் இருந்து எழுந்திருந்து கைகூப்பி வணங்கினார்.

"என்ன சேதுபதி இது?"

"மன்னிச்சிடுங்க மிண்டாஜி."

"என்ன நடந்தது. நீங்க உங்க வீட்டுக்குப் போகலையா?"

"போனோம். போன இடத்துல நீங்க எப்படின்னும் தெரிஞ்சிக்கிட்டோம்."

"எனக்கு ஒண்ணும் புரியல."

"உங்களுக்குப் புரிய வேண்டாம். போன்ஸ்லேயும், சிவாஜியும் இளவட்டப் பசங்க. அவங்க பேசினத மறந்துடுங்க. சிவாஜி உங்களுக்குப் பவர் கொடுக்கத் தயாராயிட்டான். நீங்க உங்க விருப்பப்படி அதை வித்து முதல்ல கடன்களை அடையுங்க. அப்பதான் என் மாமியார் ஆத்மா சாந்தி அடையும்."

"சரி முதல்ல எல்லாரும் உள்ற வாங்க."

மிண்டாஜி அவ்வளவு பேரையும் உற்சாகமாய் உள்ளே அழைத்தார். மனைவியையும் ஒரு வெற்றிப் பார்வை பார்த்தார். அவளுக்கோ அவர் இரவில் ஆடிய நாடகம் பற்றி எதுவுமே தெரிந்திருக்கவில்லை. அவர்களும் எழுந்திருந்து அந்த வீட்டினுள் திரும்பவும் நுழைந்தனர்.

ஆனால், போன்ஸ்லே மட்டும் உள்ளே நுழைய வில்லை. சிவாஜியோடு நைஸாக நழுவிவிட்டான். மிண்டாஜியும் சிவாஜி தம் அடிப்பதற்காக ஒதுங்குவதாகத்தான் கருதினார்.

ஆனால்...?

# 9

'ஒரு வீடு எப்படிப்பட்டதாக இருந்தாலும் அந்த வீட்டில் துளசி, மல்லிகை, வாழை, மாமரம் இந்த நான்கும் கட்டாயம் வளர்க்கப்பட வேண்டும். இவைகள் தழைத்து வளரும் மனை தப்பான மனையாக இருக்காது. அந்த நிலத்தில் சுத்தமாக தோஷம் எதுவும் இல்லை என்றும் பொருள்!

வடபாகம் தாழ்ந்தும் தென்பாகம் உயர்ந்தும் கிழக்குபாகம் சூரியஒளி தங்கு தடையின்றி பாயும் விதமாகவும் மேற்குபாகம் நிழல் கொண்டும் இருக்கும் மனை மிக யோகமான பலன்களைத் தரும்.

அந்த நாளில் சில மனைகளில் ஒளி கெடிகார முறை வழக்கத்தில் இருந்தது. சூரியன் காலை உதிக்கத் தொடங்கி மேற்கில் மறையும்வரை அவன் ஒளி ஒரு மனையில் மேலே உள்ள முப்பட்டைக் கண்ணாடி கூரை வழியாக மனைக்குள் விழுந்து அப்படியே நகர்ந்து செல்லும் போது அங்கங்கே கோடுபோட்டு ஒன்று இரண்டு மூன்று நான்கு என்று மணிக்காலக் குறிப்பு இருக்கும்.

ஒளியின் விளிம்பு எந்த கோட்டை தொட்டபடி உள்ளது என்பதை வைத்து அந்த நேரத்தை அறிவார்கள்!

திரும்பவும் அரண்மனை வீடு.

திட்டிவாசல் வழியாக உள்நுழைந்தபடி இருந்தனர்.

“போன்ஸ்லே... எதுக்கு நாம இங்க திரும்ப வந்துருக் கோம்.”

சிவாஜியால் போன்ஸ்லேயின் போக்கை புரிந்து கொள்ள முடியவில்லை.

“பேசாம வாடா...” என்று உள்ளே சென்றான்.

காலை சூரியஒளி சுள்ளென்று தாக்கத் தொடங்கி விட்டது. பனி மூட்டமும் விலகி, அரண்மனை பாகங்கள் இருள் நீங்கி நன்றாகத் தெரிந்தன.

போன்ஸ்லே உள்ளே நுழைந்து மாடிப்படி வழியாக மேலே ஏறி, திரும்பவும் மேல்பாகத்துக்குதான் சென்றான்.

“போன்ஸ்லே... நீ இன்னுமா மிண்டாஜியை டவுட் பண்றே?”

“பேசாம வா சிவாஜி. என் அனுமானம் சரியா இருந்தா ராத்திரி பாட்டி குரல்ல பேசினது மிண்டாவா தான் இருக்கணும்.”

என்றவன் மேற்கூரை முழுக்க சுற்றி வந்து தென் பாகத்தில் கல்மண்டபத் தோட்டம் தெரிவதையும் அங்கே சடலப்புகை அவிந்து அடங்கி விட்டதையும் கவனித்து அந்த பாகம் நோக்கி நடந்தான். அங்கிருந்து கீழே பார்த்தான். மேல் இருந்து கீழே ஜன்னல் ஷெட் மேல் குதித்து அப்படியே தரையில் குதித்து ஓடலாம். கீழே குதிக்க முடிந்த இடத்தில் பனியின் ஈரப்பதத்தில் காலடித் தடயங்களும் தெரிந்தன. ஜன்னல் ஷெட்

மேலும் காலடித் தடயம்! போன்ஸ்லே முகமும் அதைப் பார்த்து மலர்ந்தது.

"என்னடா சிரிக்கறே?"

"என் யூகம் சரிடா..."

"அப்படின்னா?"

"மிண்டாஜி வேலைதான் அது. சந்தேகமா இருந்தா அதோ அந்த காலடித் தடத்தை அளந்து எடுத்துக்கோ. மிண்டாவோட காலடித் தடயம் எப்படியும் அவர் பாத்ரூம் போய்ட்டு வரும்போது தரைல பதியும்; இரண்டையும் எடுத்து அளந்துபார். உண்மை தெரிஞ்சிடும்."

"போன்ஸ்லே எப்படிடா நீ இப்படித் தொடர்ந்து அவரை டவுட் பண்றே?"

"எல்லாமே ஒரு யூகம்தான். இப்பவும் சொல்றேன். நகைப்பெட்டி நிச்சயமா இந்த அரண்மனை வீட்டுக் குள்ள இருக்க வாய்ப்பு இல்லை. அந்த ஆள் அடிச்சிட்டான். அதோட, நம்மால பிரச்சினை எதிர்காலத்துல வரக்கூடாதுன்னு நம்மை துரத்தவும் திட்டம் போட்டு காய் நகர்த்துறான்."

"உன்னை நான் நம்பலாம். அம்மா அப்பா நம்புவாங்களா?"

"நம்ப வைப்போம். அதுலதான் நம்ம சாமர்த்தியம் இருக்கு..."

போன்ஸ்லே சொல்லி வாய் மூடவில்லை. 'ணொட் ணொட்' என்று பாக்குக்குப்பி இடிக்கப்படும் சபதம் கேட்க ஆரம்பித்தது.

"போன்ஸ்லே திரும்ப அந்த சப்தம்டா."

"ஆமாம். அதே சப்தம்தான். இப்ப அது கீழ இருந்து கேக்குது."

"அப்படின்னா மிண்டாஜியா கீழ...?"

"பார்த்துட்டா போச்சு. "போன்ஸ்லே தைரியமாக மேல் இருந்து காற்றுத் திறப்புத் தூக்கியின் மேல் ஸ்லாப்பைத் தூக்கிப் பிடித்தபடி உள்ளே எட்டிப் பார்த்தான்.

பகீரென்றது!

ஸ்லாப் படியையும் பட்டென்று விட்டதில் அது பயங்கர சப்தமுடன் விழுந்து இரண்டாக நொறுங்கிப் போனது. சிவாஜியும் பார்த்தான். கீழே ஜானாபாய் கால் நீட்டி அமர்ந்துகொண்டு பாக்குக் குப்பியை இடித்துக் கொண்டிருந்தாள்! இருவருக்கும் இதயமே கிள்ளப்பட்டு ரத்தம் வருவதுபோல கூடத் தோன்றியது.

"போன்ஸ்லே..."

"சிவாஜி, என்னடா இது மாயம்...?"

சட்டென்று சப்தம் நின்று போனது. திரும்ப எட்டிப் பார்க்கவும் பாட்டியைக் காணவில்லை. ஆனால், அவள் அமர்ந்திருந்த இடத்தில் சதுரமாய் சூரிய வெளிச்சம்! அந்த வெளிச்சம் கிழக்குக் கதவின் திட்டிவாசல் வழியாக உட்புகுந்த வெளிச்சமாக இருந்தது. வெளிச்சம் விழுந்த இடத்தில் தரையோடு தரையாக சற்றே மினு மினுப்புடன் கூடிய மார்பிள் கல். அந்த தரை பாகம் முழுக்க ஒரே சீராக மார்பிள் கல் பதிக்கப்பட்டிருக்க, அங்கு மட்டும் ஒரு அடி நீள அகலத்தில் துண்டாக ஒரு மார்பிள் கல். அந்த கல்மேல் பாக்குக் குப்பியும் கவிழ்ந்து கிடந்தது.

"சிவாஜி அங்க பார் பாக்குக் குப்பி."

“ஆமாண்டா போன்ஸ்லே... என்னடா நடக்குது. நம்மைச் சுத்தி...”

“பயப்படாதே. குப்பி கிடக்கிற அந்த சதுரம் மட்டும் பளபளன்னு கூடுதல் மினுமினுப்போட இருக்குது பார்.”

“அதக்கென்னடா?”

“இங்க நின்னு பேச வேண்டாம். வா கிட்ட போய் பார்ப்போம்.”

“பயமா இருக்குடா.”

“பயப்படாத திரும்பவும் சொல்றேன் என் யூகம் சரியா இருந்தா உன் பாட்டி நமக்கு வழி காட்டிகிட்டிருக்கணும். பேசாம வா.”

போன்ஸ்லே சிவாஜி கையை இழுத்துப் பிடித்துக் கொண்டு கீழே இறங்கினான். சிவாஜி தயங்கித் தயங்கிதான் பின்தொடர்ந்தான். இருவரும் வெளிச்சம் வரும் இடத்திற்கு வந்து, வெளிச்சம் புகும் திட்டிவாசல் கதவு துவாரத்தைப் பார்த்தனர். அதன் வழியாக சூரியக் கதிர் ஒரு சாய்கோணத்தில் ஊடுருவி ஜானாபாய் உருவம் தெரிந்த இடத்தில் முடிந்து போயிருந்தது. அது முடிந்த இடத்திலும் மார்பிள் துண்டிடம் ஒரு தனி பளபளப்பு. அது மட்டுமல்ல மார்பிளின் மேல் புகை மூட்டம்போல ஒரு டிசைன். அது ஒரு அடி சதுரத்தில் முடிந்துபோய் பக்கத்து மார்பிள் தரையின் புகைமூட்ட டிசைன் மேல் மேட்ச் ஆகாமல் இருந்தது. சிவாஜிராவ் அந்த வேற்றுமையை நன்றாகவே கண்டறிந்தான்.

“போன்ஸ்லே இந்த வெளிச்சம் பட்ற துண்டுப் பகுதி மட்டும் ஒரு தனி பாகமா தெரியுதுல்ல.”

"ஆமாம் சிவாஜி. இந்த இடத்துமேல தெரிஞ்ச உன் பாட்டி உருவமும் இங்கே ஏதோ இருக்கறதா இண்டிகேட் பண்ணுதுன்னு நான் நினைக்கறேன்."

"இந்தக் கல்லை எடுத்துட்டுப் பார்த்தா எதாவது தெரிய வருமோ?"

"எதுக்கு சந்தேகம். கல்லைப் பெயர்த்துட்டுப் பார்ப்போம்."

போன்ஸ்லே உள்ளே போய் ஒரு பெரிய இரும்பு உலக்கையைத் தூக்கி வந்தான்.

"என்னடா இது உலக்கை?"

"இதை உடைக்க இதுதான் சரியான ஆயுதம். அதோட, உள்ள இதுதான் இருந்தது."

"அப்ப உலக்கையால இதை உடைக்கப்போறியா?"

"வேறவழி..?" பேச்சோடு போன்ஸ்லே உலக்கையால் அந்த சதுர மார்பிள் மேல் ஒரு மோதலை நிகழ்த்தத் தொடங்கினான்.

டொம்- டொம் என்று சப்தம் உள்ளே எதிரொலித்து அதன் காரணமாக வெளவால்கள், புறாக்கள் என்று உள்ளே அடைந்து கிடந்த அவ்வளவு உயிரினங்களும் கலைந்து, அவர்கள் தலையை உரசிக்கொண்டு பறந்து சென்றன.

போன்ஸ்லே அசரவில்லை. ஒரு கட்டத்தில், அதாவது உலக்கையின் ஒன்பதாவது அடியில் அந்த மார்பிள் துண்டு தூள் தூளாக நொறுங்கியது. கீழேயும், மூன்றடி ஆழத்தில் ஒரு பெட்டி. அந்த பெட்டிமேல் ஒரு டைரி வேறு! பெட்டியையும், டைரியையும் ஒட்டி இரண்டடி சதுரத்தில் உள்ள தரையோடு தரையாக

ஒரு பாதை. அது எதுவரை போகிறது என்பதை போன்ஸ்லேயால் அங்கிருந்து உணர முடியவில்லை. கையைக் கஷ்டப்பட்டு நீட்டி டைரியை வெளியே எடுத்தான். பின், பெட்டியை... சிவாஜிக்கு உடம்பெல் லாம் பரபரத்தது.

"போன்ஸ்லே நகைப்பெட்டியாதான் இருக்கணும்."

"இரு பார்த்துடுவோம்" என்றபடியே பெட்டியைத் திறந்தான். உண்மைதான்!

உள்ளே வைர அட்டிகையில் இருந்து பவழ மாலை வரை பளபளவென்று ஜொலித்தன!

"வாவ்... போன்ஸ்லே உன் கணிப்பு தப்பா போச்சு. மிண்டாஜி கைல இது கிடைக்கல. பாட்டி இதைப் பாதுகாக்க எப்படி ஒரு இடத்தைக் கண்டுபிடிச்சு வெச்சிருக்கா பார்."

"ஆமாம் சிவாஜி. ஆனா, இந்தப் பெட்டியை நிச்சயமா நாம இப்ப எடுத்த விதத்துல உள்ள வைக் கலை. இது உள்ளயே இருக்கற ஒரு சரிவான பாதை வழியா வந்து விழுந்துருக்கணும். இந்தப் பாதையும் எங்க போகுதுன்னு தெரிஞ்சா பாட்டியோட மொத்த சாதுர்யமும் தெரிஞ்சிடும்."

"அதுவும் சரிதான்."

"வா- முதல்ல பாட்டி ரூமுக்கு போய்ப் பார்ப்போம்" என்று பெட்டியோடும் டைரியோடும் இருவரும் பாட்டி அறையை நோக்கி ஓடினர். அறை திறந்தே இருந்தது. பாட்டி முடங்கிக் கிடந்த கட்டிலை வேகமாக நகர்த்தி னான் போன்ஸ்லே. அவன் கணித்தது போலவே சுவரின்

வெளியிலுள்ள திட்டிவாசல் கதவு போலவே ஒரு சிறு கதவு இருந்தது.

அதைத் திறந்த நொடி, உள்ளிருந்து ஒருவித துர் நாற்றம். ஒரே இருட்டு வேறு: டார்ச் லைட் ஒளியை அடித்துப் பார்த்தபோது ஒரு சரிவாக அது நீண்டு கிடப்பது தெரிந்தது.

"அந்த காலத்து மாளிகைங்கறது சரியா இருக்கு. கள்வர் கூட்டம் ஆக்ரமிக்கும்போது கழுத்துல கைல இருக்கறதப் பாதுகாக்க நிலவறைகள் மட்டுமில்ல. இப்படி சுவத்துலேயே பாதைகள்! இதுக்குள்ள ஒண்ணை போடத்தான் முடியும். ஆனா, இது வழியா போய் எடுக்க முடியாது. இதோட முடிவு எங்கன்னு தெரிஞ்சவங்களுக்குதான் அங்க போய் எடுக்கவும் முடியும். பாட்டி இது வழியா போட்டு தன் நகைகளக் காப்பாத்திட்டா. இன்னிக்கு அவ ஆத்மரூபத்துல வந்து இதைக் காட்டியும் கொடுத்துட்டா."

"போன்ஸ்லே இதை எல்லாம் பார்த்தா பாட்டி எங்க பேர்ல வெறுப்பா இருந்துருப்பாங்கறதையே கூட நம்ப முடியல இல்ல."

"சிவாஜி பெட்டி கூடவே டைரி இருக்கு. அதைப் படி. அதுல நமக்கு அசைக்கமுடியாத ஆதாரங்கள் இருக்கலாம்."

போன்ஸ்லே சொல்ல, சிவாஜி டைரியைப் பிரித்தான். உள்ளே பாட்டி பாசிமணி கோத்தது போன்ற கையெழுத்தில் பக்கம் பக்கமாய் எழுதித் தள்ளியிருந் தாள்.

"இன்று நான் என் மகள் துர்காபாயுடன் பேச பெரிதும் முயன்றேன். மிண்டா தடுத்துவிட்டான். அது மட்டுமல்ல. ஒரு நான்கு நாளைக்கு நான் எழுந்திருக்க முடியாதபடி எனக்கு போதை ஊசியையும் போட்டுவிட்டான்."

"எனக்கு கடனே பிடிக்காது. எனவே, என் நகைகளை விற்று நான் வாழ விரும்பினேன். மிண்டாவிடம் அதற்காக என் நகைகளையும் கொடுத்தேன். இருந்தும் அவன் என்னை மிரட்டி கடன் பத்திரங்களில் கையெழுத்து வாங்கிக் கொண்டான்."

"ஒருநாள் போஸ்ட் மாஸ்டர் மகள் வீணா என்னைப் பார்க்க வந்தாள். அவள் கன்னத்தில் அறைந்து இனி அரண்மனைக்குள் வரக்கூடாது என்று கூறிவிட்டான் மிண்டாஜி. வீணாவைப் பார்த்தபோது என் பேத்திகள் ஞாபகம் எனக்குள் வந்தது. ஒற்றுமையாய் நாங்கள் இருந்திருந்தால் இன்று அவர்கள் இந்த அரண்மனைக்குள் துள்ளி விளையாடிக் கொண்டிருப்பார்கள். எனக்கும் இப்படிப் பிணைக்கைதி போன்ற நிலை வந்திருக்காது."

"இந்த அரண்மனை மற்றும் எங்கள் பரம்பரை சொத்துகளின் பத்திரங்கள் திட்டிவாசல் வழியாக சூரிய கதிர் ஒன்பது மணி அளவில் படும் இடத்துக்குக் கீழ் உள்ளது. இந்த மர்மங்களை என் உறவினர்கள் அறிந்து, அவர்கள் கைகளில் என் சொத்தெல்லாம் சேரும்போது தான் என் ஆத்மாவுக்கு சாந்தி ஏற்படும். அப்படி இல்லாத வரை நான் இந்த அரண்மனையைச் சுற்றி சுற்றி வருவேன்."

"மிண்டா மிக நல்லவன். ஆனால், அவன் மகளுக்கு ஏற்பட்ட பாதிப்பால் அவன் மிருகமாகிவிட்டான். அவனிடம் தர்ம நியாயமெல்லாம் போய்விட்டது. இருந்தாலும் பாவம் அவன். அவன் மகளும் பாவம். அவளுக்கு வாழ்க்கை தர யாராவது முன்வந்தால் அவர்களுக்கு என் ஆசிகள் நிறையவே உண்டு. பாவம் அந்தப் பெண். அவள் என்னை அவள் பாட்டியைப் போல நேசித்தாள்."

பக்கம் பக்கமாய் செய்திகள்! படிக்கப் படிக்க மூட்டம் நீங்கிய மழைவானம் பளிச்சென்று நீலநிறமாய் தெரிவது போல அவ்வளவு சந்தேகங்களுக்கும் விடை துல்லியமாகி விட்டது. சிவாஜி கைக்கெடிகாரத்தைப் பார்த்தான். மணி ஒன்பதை நோக்கி ஊர்ந்தபடி இருந்தது.

"போன்ஸ்லே சரியா ஒன்பது மணிக்கு திட்டிவாசல் வழியா விழுற வெளிச்சம் நமக்கு பத்திரத்தைத் தரப் போகுது. கமான்" என்றபடி திரும்பி ஓடினான்.

சூரியன் மேலேறிய நிலையில் திட்டிவாசல் வழியாக வெளிச்சக் கோணம் மாறி, கிட்டத்தட்ட திட்டிவாசலுக்கு சில அடி தொலைவில் ஒரு பட்டியக்கல் மேல் விழுந்திருந்தது. அதைச் சுலபமாகத் தூக்க முடிந்தது. கீழே ஒரு குழி. அதனுள் இன்னொரு மரப்பெட்டிக் குனிந்து வெளியே எடுத்து திறந்து பார்த்தபோது, உள்ளே கட்டுக்கட்டாய் பத்திரங்கள். சில சாவிகளும் உடன் இருந்தது. அதில் ஒன்று நிலவறைச்சாவி. நிலவறையைத் தேடிப் போய் அதைத் திறந்தபோது, உள்ளே ஏராளமான வெள்ளிப் பாத்திரங்கள் மற்றும் பரிசுப் பொருள்கள் குவிந்திருந்தன.

இருவருமே வாயைப் பிளந்துவிட்டனர்! அந்த நொடியில் பின்னால் யாரோ வரும் சப்தம். திரும்பிப் பார்த்தான். வந்தவர் சேதுபதி!

"அப்பா..."

"................"

"என்னப்பா ஏன் இப்படி வெறிக்கறீங்க. பாருங்கப்பா பாட்டி நமக்காக அவ்வளவையும் விட்டுட்டுப் போயிருக்கறத. அந்த மிண்டாஜி ஒரு ஃப்ராட. இதோ அதுக்கு ஆதாரமா டைரி" சிவாஜி துடிதுடித்தான்.

"தெரியும் சிவாஜி. அரண்மனைக்குள்ள இருந்து டொம் டொம்னு சத்தம் வரவுமே மிண்டாஜி காது வரை அது கேட்டது. அவர்கிட்டயும் ஏராளமான மாற்றம். இதோ வந்துட்றேன்னு ஒரு அறைக்குள்ள நுழைஞ்சவர் வரவேயில்லை. கதவுத் துவாரம் வழியா பார்த்தப்போ அவர் தூக்குல தொங்கிகிட்டு இருந்தார். உடம்பை இன்னும் இறக்கலை! உங்க வெற்றி அங்க அவரோட மரணத்துல முடிஞ்சிடுச்சிப்பா. வந்து பாருங்க."

சேதுபதி சோர்ந்து வடிந்தபடி பேசினார். அவர் களிடம் ஸ்தம்பிப்பு. ஆனால், அங்கே சுவரில் மாட்டப் பட்டிருந்த ஜானாபாய் படத்தில் அவள் மட்டும் நியாயம் ஜெயித்துவி டதற்காகச் சிரிப்பதுபோல் இருந்தது.